ISSN 2424-6654

தமிழ்த் தூது

# தாயக ஒலி
# THAYAKA OLI

இரு திங்கள் ஏடு 22






பங்குனி - சித்திரை 2016

விலை ரூபா 100/=

தரத்தில் உயர்ந்த தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள வாருங்கள்!



RATHY

Jewellers | Tooting

209 Upper Tooting Road, Tooting SW17 7TG

T: 020 8682 2233 F: 020 8767 7600

E: rathyjewellers@hotmail.co.uk

28 Ealing Road, Wembley Middx HA0 4TL T: 020 8903 3063




317, 317A,Galle Road, Wellawatte, Colombo 06. |T: +94 11 250 4470, 250 0098
F: +94 11 2508934 |E: info@littleasia.lk |www.littleasia.lk | skype : little.asia.emporium

73, Main Street, Colombo 11.|T: +94 11 2391592, 2391593|F: +94 11 2391745
E: info@littleasiasilk.com |www.littleasiasilk.com |Skype: little.asia.silk

Dream **Big** | Think **Big** | Achieve **Big**


AA Accounting & Business Solutions Associates
265 Haydons Road / London SW19 8TY
Accountants and Management Consultants
for Efficient and Quality Professional Accounting Services
We Specialise in
Year End Accounts Preparation
Management Accounts
Solicitors Accounts
Book Keeping
Self Assessment Tax Returns
Vat and TAX Investigations
Payroll Preparation
Business Startup Advice
Business Plans and Cash Flow Forecasts
Management Consultancy
Also through our contacts we are able to raise Finance for New Business
Contact:
Uthayanan or Sasi
Mob : 0774 7794 358 / 07786 966 207 Tel : 020 8545 0205
www.aa-accounts.co.uk

சட்டத்தரணிகளும் குடிவரவு ஆலோசகர்களும்

# Rasiah & Co
## Solicitors

- *Conveyancing*
- *Residential & Commercial*
- *Matrimonial*
- *Immigration*
- *Landlord & Tenants*

**Tel : 020 8543 4040**
**Fax : 020 8543 2400**

180A Merton High Street,
South Wimbledon,
London SW 19 1AY

DX: 300004 Wimbledon South

rasiahsolicitors@btconnect.com




MOBILE
Connected For Longer
U2i Mobile
Call Us on - 020 3769 6867
www.u2imobile.uk
LOWER
National & International Calls
UNLIMITED ROAMING
From 148 Countries
1 SIM 2 NUMBERS
Mobile & Land line number
Best price per minute
JOIN NOW
Standard
Micro
Nano

# Easan & CO

*Chartered Management Accountants*

## Specialists in arranging Commercial Loans

- Self Assessment Tax Return
- CIS Refunds
- Accounts & Book Keeping
- VAT Returns
- PAYE
- Management Accounting



S.Eswaranathan ACMA
(Easan)

196 Merton High Street
South Wimbledon
London SW19 1AX

Tel: 020 8543 8484
Fax : 020 8540 0107
Mobile : 07801227017

# HENSHOU ISSHINRYU KARATE ACADEMY

59 Cranley Road, Ilford, Essex, IG2 6AF

Tel: 020 8518 3288, Mob: 07950346432, Email: info@henshou.com, Web: www.henshou.com

AFFILIATED TO ISSHINRYU WORLD KARATE ASSOCIATION – OKINAWA, JAPAN AND
ALL INDIA ISSHINRYU KARATE ASSOCIATION - INDIA



## DEVELOP YOUR SELF DEFENCE, SELF CONTROL SELF DISCIPLINE, COURAGE & LEADERSHIP



*Renshi Raveendran is a 6th Dan Black Belt who has trained directly under Master Shihan Hussaini(India), Grandmaster Christopher Chase (USA) and Grandmaster Kichiro Shimabuku(Japan)

*Trained and coached over 1000 students from various branches (Students age varies from 5yrs to 65 yrs-male and female).

*His Students have won many awards from various local competitions and world Isshinryu Karate competitions held in the USA

தமிழர்கள் செறிந்து வாழும் பல பகுதிகளில்
றென்ஷி ரவீந்திரனது நேரடிக் கண்காணிப்பில்
தகுதி வாய்ந்த ஆசிரியர் குழுவின் அனுசரணையுடன்
இஷின்றியு கராத்தே வகுப்புக்கள்
சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது





**OUR BRANCHES:**

EASTHAM, MANOR PARK, NEWBURY PARK
WALTHAMSTOW, PLUMSTEAD, LEWISHAM
CROYDON, MITCHAM, BRISTOL, HARROW
SOUTHEND, SWINDON

**CONTACT : RENSHI KANDIAH RAVEENDRAN** (6th DAN BLACK BELT)

**TEL : 020 8518 3288**

**MOB : 07950 346 432**

**Email : info@henshou.com Web : www.henshou.com**

ISSN 2424-6654

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# 'தாயக ஒலி'

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி - சித்திரை 2016 | வில் - 04 | ஒலி - 22

**இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிடும்**

## 'தாயக ஒலி'

**பிரதம ஆசிரியர்**

த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா)

தொலைபேசி : 0094(0)718676482

**துணை ஆசிரியர்கள்**

தாயகன் (இலண்டன்), சி.பவன் (இலங்கை)

**மதியுரைக் குழு**

பேராசிரியர் சபா ஜெயராசா

வவுனியூர் இரா உதயணன்

சைவப்புலவர் சு.செல்லத்துரை

ந.கருணை ஆனந்தன்

எஸ்.ஈஸ்வரநாதன் (இலண்டன்)

வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

**சஞ்சிகைக் குழு**

மூ.சிவலிங்கம்

கா.வைத்தீஸ்வரன்

கதிரவேலு மகாதேவா

செ.ராஜேந்திரா

இ.ஜீவகாந்தன்

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள்:**

கனடா : முருகேசு கிருபாகரன்

து.நடராஜா, அ.பற்குணன்

இலண்டன் : இ.பாலேந்திரநாதன்

அமெரிக்கா : வே.பிரேமதயாளன்

அவுஸ்திரேலியா : தி.திருநந்தகுமார்

பிரான்ஸ் : ச.சச்சிதானந்தம்

**ஐரோப்பிய நாடுகளுக்கான விசேட ஒருங்கிணைப்பாளர்**

திருமலை பாலா

தொ.பேசி : 0044 (0)7956486014

**தொடர்பு : 9-2/1, நெல்சன் இடம்,**

கொழும்பு – 06, இலங்கை.

தொ.பேசி : 0094(0)112364124

**E-Mail : thayakaoli@gmail.com**

தாயக ஒலியில் இடம்பெறும் படைப்புகளுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் ஆசிரியரின் அவதானிப்புடன் பிரசுரமாகும்.

–ஆசிரியர்–

## உள்ளே ஒலிப்பவை

| | பக்கம் |
|---|---|
| பேனா முனையிலிருந்து..... | 02 |
| **கட்டுரை :** | |
| ● வளம் மிகுந்த தொல்காப்பியம் | 03 |
| ● எழுத்தாளர் பிரேம்சந்த் | 06 |
| ● தமிழ் இலக்கியத்தில் அறிவியல் | 21 |
| ● தனிமையில் இனிமை நலம் | 27 |
| **சிறுகதை:** | |
| ● முடிவுகள் முனைப்புகள் | 10 |
| ● உழைப்பவன் அறிவான் உழைப்பை | 35 |
| **கவிதை:** | |
| ● காலை வேளை கனிவுறும்.... | 17 |
| ● வாழ்க்கை என்னாச்சி | 18 |
| ● நாங்களும் வாழ வேண்டும் | 19 |
| **நிகழ்வுகள் நினைவுகள் :** | |
| ● திருமலை நகர் விருதுவிழா | 15 |
| ● கர்நாடக இசை அரங்கேற்றம் | 45 |
| **அயலகச் செய்தி :** | |
| ● ஏனிந்தப் பாராமுகம்? | 08 |
| **சிறுவர் படைப்புகள் :** | |
| ● கல்வி கற்போமே (கவிதை) | 25 |
| ● அகங்காரத்தைத் தவிருங்கள் | 25 |
| ● தாத்தாவின் தலைப்பாகை | 26 |
| **சிரிகதை :** | |
| ● இரத்தம் (நகைச்சுவை) | 20 |
| ● விதண்டாவாதக் கந்தையா | 33 |
| **தமிழ்ச்சினிமா :** | |
| ● இசைக்குயில் பி.சுசீலா | 40 |
| **அறிந்தவையும் தெரிந்தவையும் :** | |
| ● தமிழ்மொழி பற்றி யுனெஸ்கோ | 31 |
| ● எழுத்தாளர்கள் பற்றி.... | 31 |
| ● தேசிய நல்லுறவு | 32 |
| **உங்கள் விருந்து :** | |
| ● மாற்றம் கண்டுள்ள தாயக ஒலி | 42 |
| **கேட்டதைச் சொல்ல வந்தோம் :** | |
| ● பட்டினியால் வாடும் அபாயம் | 34 |
| ● முழுமையான மனிதர்களாக மிளிர... | 47 |
| ● கல்வியோடு ஆன்மீகம் உளவியல் | 48 |

**அட்டையில்.....**

இலக்கியப் புரவலர்களும்
மனித நேய வள்ளல்களும்

## பேனா முனையிலிருந்து .....



# நாம் எம்மை உணர்ந்தால்....!

நாடோடிகளாக, காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த மனித சமுதாயத்தினர் படிப்படியாக முன்னேற்றம் கண்டு நாகரிக வளர்ச்சி காரணமாகப் பல்வேறுபட்ட பண்பாடுகளை அடையாளப்படுத்திக் கொண்டு, வாழத் தலைப்பட்டனர். கல்வி அறிவு அவர்களை உச்சநிலைக்குக் கொண்டு சென்றதன் காரணமாக நல்லது - கெட்டது எதுவென பகுத்தறியும் பண்பு வளர்ந்தது. மனிதன் மனிதனாக வாழும் நெறியை உணர்த்தும் அற இலக்கியங்கள் மக்களுக்குப் பெரும் பயனளிப்பனவாக அமைந்தன.

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் மனித சமுதாயத்திற்கு உதவும் வகையில் இருந்துள்ளன. அதீத தொழில்நுட்ப வளர்ச்சி மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் செயற்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளது. அந்தவகையில் நவீன கருவிகள் குறுகிய காலத்தில் பண்பாட்டுச் சீரழிவுக்கு வித்திட்டுள்ளன. தொலைக்காட்சி, இணையம், முகநூல், கையடக்கத் தொலைபேசிகள் போன்ற சாதனங்கள் ஒருசில நன்மைகளைக் கொடுத்தாலும், இளவயதினரைத் தன்பால் ஈர்த்து அவர்களை அடிமையாக்கிக் கொண்டுள்ளது. புகைத்தல், மதுபாவனை, போதைப்பொருள் பாவனை, களவு, அடாவடித்தனங்கள், சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு, கொலை போன்ற சமூக விரோதச் செயல்களுக்குத் தூபமிடும் வகையில் அவை இயங்கி வருவது பலரின் கவனத்தையும் ஈர்த்த செயற்பாடாகும். பெற்றோர்கள் பிள்ளைகளின் மேல் அவதானம் இல்லாமல் இருப்பதும், அவர்களின் நடவடிக்கைகளில் அக்கறையற்றிருப்பதும் இளவயதினர் தவறான வழிகளில் பயணிப்பதற்கு உதவுவதாகத் தெரிகிறது என்று பலரும் தெரிவித்துள்ளனர்.

சிறுவர், பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம், படுகொலைகள் இன்று நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக நடந்தேறி வருவதை ஊடகங்கள் சுட்டிக்காட்டி வருகின்றன. இதற்கான பொதுவான காரணமாகப் போதைப் பொருள் பாவனையே என்று தெரிவிக்கப்பட்டாலும், காம உணர்ச்சி கொண்டோரின் காட்டுமிராண்டித் தனமான செயற்பாடாகவும் அவை அமைந்துள்ளமையை அவதானிக்க முடிந்துள்ளது. போதை, வல்லுறவையும் கொலையையும் செய்விக்கின்றது. சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கொடுமைகள், பாலியல் வல்லுறவுகள், கொலைகள் என்பவற்றைக் கண்டித்து நாட்டின் பல பாகங்களிலும் கண்டனப் பேரணிகளும், போராட்டங்களும் மாணவர்கள், பெண்கள் அமைப்புகள், சிவில் அமைப்புக்கள், பெற்றோர், பொதுமக்கள் ஆகியோ ரால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

இத்தகைய குற்றச் செயல்களுக்குப் பலரும் மரணதண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும், வேறு சிலர் பொதுவாக இலங்கையில் மரணதண்டனையைக் கொண்டு வரக்கூடாது என்றும் கூறி வருகின்றனர். இருந்தும் பாரதூரமான குற்றங்களை மேற்கொண்டவர்களுக்கு நீதிமன்றங்கள் மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கியுள்ளமையும் கவனத்தில் கொள்ளவேண்டும். எது எப்படியாக இருந்தபோதிலும், சமுதாயத்திலிருந்து போதைப் பாவனையை முற்றாக ஒழிப்பதையும், சிறுவர் பெண்களுக்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதையும் எல்லோரும் தம்முடைய தலையாய கடமையாகக் கொண்டு செயற்பட வேண்டுமென்பதே எமது ஆணித்தரமான வேண்டுதலாகும். புது வருடத்தி லாவது எமக்கு நல்வழி பிறக்குமா? என்ற எம்மவர்களின் வேண்டுதல் வீண் போகக்கூடாது என்பது எமது பிரார்த்தனையுமாகும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்....

- ஆசிரியர்.

கட்டுரை

# வாழ்க்கை இலக்கணத்தைப் போதிக்கும் வளம்மிகுந்த நூல் தொல்காப்பியம்

## மனித குலம் மகிழ்வுடன் வாழ வழிகாட்டுகிறது

– தம்பு சிவசுப்பிரமணியம்

மொழிகளின் முறையான வளர்ச்சிக்கு இலக்கணம் மிகவும் அவசியம். சரியான இலக்கணம் இல்லாத மொழி நீண்டு நிலைக்க முடியாது. இலக்கணம் என்ற கடிவாளத்தை வைத்துத்தான் மொழியின் வளர்ச்சியைச் செம்மையாக்க முடியும்.

ஆங்கிலம் பல நாடுகளில் பல தரப்பட்ட மக்களால் பேசப்படுவதற்கும் எழுதப்படுவதற்கும் முக்கிய காரணம் அதன் ஆணி வேரான இலக்கணம்தான்.

இலக்கணம் முறையாக அமைந்த மொழி தொடர்ந்து வளர்ச்சி அடையும். எத்தனை நூற்றாண்டு காலமானாலும் அந்த மொழியின் வளர்ச்சி குறையாது. மொழி அழிந்துவிடாது.

நமது மொழியான தமிழ் எத்தனை ஆண்டு காலமானாலும் சரியான வளர்ச்சியுடன் இருப்பதற்குக் காரணம் தமிழின் இலக்கண அமைப்புத்தான் என்றால் மிகையாகாது.

எத்தனை வேறு மொழிகளின் தாக்கம் இருந்தாலும், இன்றுவரை தமிழின் வளம் குறையாமல் இருப்பதற்குக் காரணம், தமிழ்மொழியின் இலக்கணம்தான். தமிழ் இலக்கணத்தைப் பாடல் வடிவில் முதன்முதலில் நமக்கு வழங்கியவர் தொல்காப்பியர்.

அகஸ்தியர் ரிக் வேதத்தின் பல மந்திரங்களை எழுதியவர். அவர் வட இந்தியாவில் இருந்து தென் இந்தியா வந்தவர். இந்த அகஸ்தியர் ஒரு பெரும் சித்தர் என்று இன்றும் போற்றப் படுகின்றார். அவர் 'நாடி ஜோசியம்' என்று இன்றும் புகழப்படுகின்ற எதிர்காலம் கணிக்கும் முறையைக் கண்டுபிடித்தவர்.

இதுபோல மருத்துவத்துக்கும் இவர் செய்த சேவை இன்றும் நினைக்கப்படுகின்றது. 'பூபதி குளிகை' என்று இவர் கண்டுபிடித்த மருந்து உயிர்ப்பிக்கும் தன்மை உடையது என்பார்கள்.

இவருக்கு மிக முக்கியமான இரண்டு மாணவர்கள் இருந்தார்கள். ஒருவர் தேரையர் மற்றவர் தொல்காப்பியர்.

தொல்காப்பியர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை. காப்பியா என்ற ஊரைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றும் கூறுகிறார்கள். பிராமண இனத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றும் கருதுகின்றார்கள். ஜெயின் இனத்தவராக இருக்கலாம் என்று சொல்பவரும் உண்டு.

பெரும் தமிழ் அறிஞர் வையாபுரிப்பிள்ளை அவர்கள், தொல்காப்பியர் தென் கேரளத்தைச் சேர்ந்த திருவாட்டன் கோட்டு என்ற இடத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது போன்றே தொல்காப்பியர் எந்தக் காலத்தைச் சேர்ந்தவர் என்பதிலும் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. இவரின் காலம் மூன்றாம் நூற்றாண்டில் இருந்து எட்டாம் நூற்றாண்டுக்குள் இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

அகஸ்தியரின் மாணவரான தொல்காப்பியர் தமிழுக்குச் செய்த தொண்டு மிகவும் பாராட்டுதலுக்கு உரியது. தமிழ் இலக்கணத்தை ஒழுங்கு

படுத்தி மூன்று பிரிவுகளாக எழுதி உள்ளார். அவை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் மற்றும் பொருளதிகாரம் என்று அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் என்பதற்கு என்ன அர்த்தம்? இந்தச் சொல்லை இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம் 'தொல்' என்பதற்குப் பழமையான என்று அர்த்தம் கொள்ளலாம். 'காப்பியம்' என்றால் இலக்கியம். ஆக தொல்காப்பியம் என்பதற்கு 'பழமையான இலக்கியம்' என்று எடுத்துக் கொள்ளலாம்.

தொல்காப்பியர் எழுதியதனால் இந்த இலக்கிய நூல் தொல்காப்பியம் என்று அழைக்கப்படுகின்றது என்றும் கொள்ளலாம். தொல்காப்பியத்தில் ஆயிரத்து அறுநூற்று இரண்டு பாடல்கள் உள்ளன. மனிதர்கள் வாழும் முறை பற்றி போதிக்கும் இந்தத் தொல்காப்பியம், அறம், பொருள், இன்பம் மற்றும் வீடு ( நிறைந்த அமைதி ) பற்றி விளக்குகின்றது.

பன்னிரண்டாம் அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டு வாக்கில் தொல்காப்பியத்தை தொகுத்து எழுதிய இளம்பூரணார் என்ற புலவர், 'ஐந்திரியம்' நிறைந்த தொல்காப்பியம் என்று எழுதினார்.

'ஐந்திரியம்' அல்லது 'இந்திரநமஸ்கிருத இலக்கணம்' என்பது, இதுவரை வரையறுக்கப்பட்ட பதினொரு சமஸ்கிருத இலக்கணங்களில் ஒன்று. தொல்காப்பியனார் எழுதிய 'தொல்காப்பியம்' இந்த வகை இலக்கணத்தைச் சேர்ந்ததாக இருக்குமா என்று அறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றார்கள்.

தொல்காப்பியத்துக்கு உரை எழுதியவர்கள் பலர். இளம்பூரணார் எழுதிய உரை இன்றும் பலரால் விரும்பிப் படிக்கப்பட்டு வருகின்றது. இந்த உரையைத் தொடர்ந்து பலர் உரை எழுதி உள்ளார்கள்.

நன்னூல், தண்டியலங்காரம், யாப்பிலக்கணம் போன்ற தமிழ் நூல்களிலும் தொல்காப்பியத்தின் தாக்கம் இருக்கின்றது. பதினைந்து அல்லது பதினாறாம் நூற்றாண்டுகளில் நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்துக்கு எழுதிய உரை புகழ் பெற்றது.

பதினேழாம் அல்லது பதினெட்டாம் நூற்றாண்டுகளில் 'தெய்வசிலையார்' உரையும் புகழ் பெற்று இருந்தது.

தொல்காப்பியத்தின் பெருமை எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் குறையாது. அந்தக் காலத்துக்கு ஏற்ப பலரும் உரை எழுதி, அந்தக் காலகட்ட மக்கள் அறிய உதவி உள்ளார்கள். தொல்காப்பியத்தை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் மற்றும் பொருளதிகாரம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இந்த ஒவ்வொரு பிரிவும் ஒன்பது அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

எழுத்ததிகாரம், நூல் மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல் மற்றும் குற்றியலுகரப் புணரியல் என்று ஒன்பது அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

நூல் மரபில் தமிழ் மொழியின் வளத்தைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது.

'மொழிமரபு' அதிகாரத்தில் எந்த எழுத்துக்கள் வார்த்தைக்குள் வரக்கூடாது என்பது பற்றி விரிவாக விளக்களிக்கப்பட்டுள்ளது.

'பிறப்பியல்' அதிகாரத்தில் வார்த்தைகளை எப்படி உச்சரிக்க வேண்டும் என்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

'புணரியல்' எப்படி வார்த்தைகளை, வாக்கியங்களில் பயன்படுத்த வேண்டும் என்று விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'உருபியலில்' உருபுகள் எப்படி சேர்க்கப்பட வேண்டும் என்பது விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிர் மரபியலில், எப்படி புள்ளிகள் வைக்கப்

பட வேண்டும் என்பது பற்றி விளக்கப்பட்டுள்ளது. எழுத்துக்களுக்கு மேல் புள்ளி வைப்பது என்பது தமிழ்மொழியின் சிறப்பு. மற்ற எந்த மொழி களிலும் இவ்விதம் புள்ளி வைப்பது இருப்பதாகத் தெரிவில்லை.

இந்தப் புள்ளி வைக்கும் முறை ஏழாம், ஒன் பதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த மகேந்திர பல் லவர் காலத்தில் இருந்ததாகக் கல்வெட்டுகளில் இருந்து தெரிகிறது.

'சொல்லதிகாரமும்' ஒன்பது பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் சொற்கள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொல். இதில் இயற் சொல் என்பது சாதாரணமாகத் தமிழில் பயன் படுத்தப்படும் சொல்லாகும்.

'வடசொல்' என்பது சமஸ்கிருத மொழியில் இருந்து வந்த சொல்லாகும். 'திசைச்சொல்' என் பது மற்ற மொழிகளில் இருந்தும் சொற்களைப் பயன்படுத்தும் பொழுது அவற்றை எவ்விதம் தமிழ்ப்படுத்த வேண்டும் என தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியம் வெறும் இலக்கணத்தை மட் டும் போதிக்கும் புத்தகமல்ல. வாழ்க்கை இலக்க ணத்தையும் போதிக்கும் புத்தகமாகும். விலங்கு கள், செடிகள் மற்றும் மனிதர்களை வகைப் படுத்தி, அவர்களின் உணர்ச்சிகளையும் மகிழ்ச் சியாக வாழும் முறைகளையும் பற்றிக் குறிப்பிட் டுள்ளது.

அக்காலத்தில் நிலங்கள் எவ்விதம் பிரிக்கப் பட்டுள்ளன என்பதும், பருவகால மாற்றங்கள் பற்றியும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

முல்லை நிலத்துக்கு திருமால், குறிஞ்சி நிலத்துக்கு முருகன், மருத நிலத்துக்கு இந்தி ரன், நெய்தல் நிலத்துக்கு வருணன், பாலை நிலத்துக்கு கொற்றவை என்றும் பிரித்துள்ளார்.

மக்களின் வாழ்க்கை முறை பருவத்துக்கு ஏற்பவும் எவ்விதம் மாறுகின்றது என்பது பற்றி இந்தப் பகுதியில் தொல்காப்பியர் விளக்கி உள் ளார்.

பொருளதிகாரமும் ஒன்பது பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சொந்த வாழ்க்கையைப் பற்றியும் அதை எவ்விதம் மிகுந்த மகிழ்ச்சியாக வாழ்வது என்பது பற்றியும் மிகவும் அழகாக அகத்திணை இயலில் விளக்கியுள்ளார் தொல் காப்பியர்.

புறத்திணை இயலில் பொது வாழ்க்கையில் ஒருவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் கூறியுள்ளார்.

களவியலில் திருமணத்துக்கு முன்பு நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றியும் கற்பியலில் திருமணம் முடிந்த பிறகு கணவர், மனைவியர் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் தொல்காப்பியர் விளக்கி உள்ளார்.

இது போன்று மெய்ப் பொருளியல், உவமை இயல், பொருளியல், செய்யுளியல், மரபியல் போன்றவற்றில் பாடல்கள் எழுதும் முறையை யும் தொல்காப்பியர் விளக்கி உள்ளார்.

மெய்ப்பாட்டியல், உவமை இயல், செய்யுளி யல், மரபியல் என்று தொல்காப்பியர் தொடாத துறையே இல்லை எனலாம். கவிதைகளை முப் பத்து நான்கு வகைகளாகப் பிரிக்கலாம் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

மனித வாழ்க்கை நடப்பதற்கு இடம்வேண் டும். நிலங்களை பலவிதமாகப் பிரித்து காண் பித்து உள்ளார். அதுபோன்று மனித வாழ்க்கை ஒவ்வொரு தனிப்பட்ட மனிதர்களின் உணர்ச்சி களைப் பொறுத்து உள்ளது என்கிறார் தொல் காப்பியர்.

ஆண்கள் தைரியமுடையவர்களாகவும், பெண்கள் அச்சம், மடம், நாணம் போன்ற குணங் கள் உடையவர்களாகவும் இருப்பார்கள் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

திருமணத்துக்கு முன்பு ஏற்படும் பிரியத்துக்கு

ஆறுவிதமானவர்களை தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அவர்கள், நண்பர், தோழர், வேலையாள், பிராமணர் மற்றும் கதாநாயகன், கதாநாயகி ஆகியோர் ஆவர். களவு என்பதில் தலைவன், தலைவி சந்திப்புப் பற்றிக் கூறியுள்ளார்.

தொல்காப்பியம் இசைத் தமிழ் பற்றியும் குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு நிலத்துக்கு ஏற்ப இசைக்கப்படும் இசைக் கருவிகள் பற்றி தொல்காப்பியர் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விதம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட தொல்காப்பியம், வெறும் இலக்கணத்தை மட்டும் சொல்லித் தரவில்லை.

வாழ்வின் இலக்கணத்தையும் அமைதியான, மகிழ்ச்சியான வாழ்வுக்கு உள்ள வழிமுறைகளையும் அது நமக்கு காட்டுகின்றது. ●

கட்டுரை

லேவாதேவி நாகரிகம் (மகாஜனி சப்யதா) என்ற கட்டுரையில்... "தற்கால சமுதாயத்தில் பரவலாக விரவி நிற்கும் தீமைகளுக்கெல்லாம், இலாப நோக்குத்தான் காரணம்" என்று குற்றம்சாட்டுகிறார்.

- பிரேம்சந்த்



# எழுத்தாளர் பிரேம்சந்த்

"இந்த முதலாளித்துவ பண்பாட்டு நாகரிகத்தில் பணம் எல்லாவிதமான செயற்பாட்டிற்கும் ஒரே குறிக்கோளாகத் துலங்குகிறது. முதலாளிகளும், பாங்குக்காரர்களும் அதிக பட்சமான இலாபத்தை அடையக்கூடும் என்ற நோக்கத்துடன் ஒரு நாடு ஆளப்படுகிறது. இக்குறிக்கோளுடன்தான் இன்று உலகம் பாங்கர்களால் (Bankers) ஆளப்படுகிறது. மனித சமுதாயம் இரு பகுதிகளாகப் பிளவுபடுத்தப்பட்டிருக்கிறது. பெரும்பான்மையினர் நிறைந்த ஒரு பகுதி உழைப்பாளிகள், பட்டாளிகளுடையது. மற்றொரு சிறுபகுதி தனது அதிகாரம் மற்றும் செல்வாக்கினால் பெரும் பகுதியினரை, தனக் கடிமையாக்கிக் கொண்டுள்ளது. இப்பெரும் பகுதியினரின் பால் இவர்களுக்கு அனுதாபமோ, இரக்கமோ கிடையாது. இப்பெரும் பகுதியோ, தங்களுடைய எஜமானர்களுக்காகவே உயிர் வாழ்கின்றது. அவர்களுக்காகவே தங்களது குருதியைப் பெருக்கி, வியர்வையைச் சிந்திய வண்ணம் என்றோ ஒருநாள் மௌனமாக இவ்வுலகை விட்டுப் பிரிந்து விடுவதற்காகவே உயிர் வாழ்கிறது."

– என்று கூறியவர் 1880 இல் பிறந்து 1936 வரை வாழ்ந்த பிரேம்சந்த் என்ற இந்தியக் குடிமகனாவார்.

இற்றைக்கு 85 ஆண்டுகளுக்கு முன் இந்திய நாவலாசிரியரின் கவனமெல்லாம் சமூக மாறுபாடு பற்றியே இருந்தது. காந்தியத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையே எத்தனையோ ரகமான சீர்திருத்தங்களையும் புரட்சிகளையும் படைப்பு எழுத்தாளர்கள் பரிந்துரைத்தனர். இவர்களில் ஹிந்தியிலும் உருதுவிலும் பிரேம்சந்த் தனிப்பெரும் படைப்பாளராகச் சிறந்து விளங்கினார். அந்த அளவுக்கு இவரது நாவல்களும் கதைகளும் இந்தியக் கிராமப்புற

மக்களின் அவல வாழ்வை உருக்கத்துடன் தத்ரூபமாகச் சித்திரித்து நின்றன.

வறுமையையும் அநியாயத்தையும் எதிர்த்துப் போராடிப் பயின்று பண்பட்ட இவர், தமது பன்னிரண்டு நாவல்களுக்கும் முன்னூறு கதைகளுக்கும் தமது அனுபவங்களையே மூலப் பொருளாக்கினார். இவர் வாழ்ந்து பணியாற்றிய வடஇந்தியப் பிரதேச வாழ்வைக் கூர்ந்து கவனித்துத் தமது படைப்பில் வடித்துள்ளார்.

இவர் டால்ஸ்டாய், கால்ஸ்வொர்தி, ஸாடி, மாப்பாஸன் படைப்புகளை ஹிந்தி மொழியில் மொழிபெயர்த்துள்ளார். டிக்கின்ஸை நன்கு படித்தவர்; கார்க்கியைப் போற்றியவர்; இவரே ஹிந்தி இலக்கியத்திற்கு ஒரு கார்க்கி என்று புகழ் பெற்றவர். ஆரம்ப காலத்தில் இவர் எழுதியதெல்லாம் உருதுமொழியில்தான். இவரது நாவல் 'கோதான்' தற்காலச் சிறந்த படைப்புகளில் ஒன்றாகப் போற்றப்படுகிறது.

வெகு தூரத்திள்ள ஒரு நாட்டில் உருவாகிய புதியதொரு நாகரிகத்தில் மனித குலம் புதிய நம்பிக்கை கொண்டு உயிர்த்தெழுவதை பிரேம்சந்த் கண்டார்.

"தொலைவிலே மேற்கு திசையில் புதிய நாகரிகமெனும் சூரியன் மேலெழும்பிக் கொண்டிருக்கின்றான். முதலாளித்துவத்தையும் வட்டித் தொழிலையும் இது வேருடன் களைந்து எறிந்து விட்டது. இப்புதிய பண்பாட்டின் அடிப்படைக் கொள்கையானது தனது உடல் உழைப்பினாலோ, சிந்தனையாலோ ஏதாவது ஒன்றை உருவாக்கும் ஒவ்வொரு குடிமகனும், சமூகத்தில் ஓர் அங்கமாகக் கருதப்படுவான் என்பதாகும். பிறரது உழைப்பின் வலிமையின் மூலமோ, தமது மூதாதையர் திரட்டி வைத்துப் போயிருக்கும் செல்வத்தின் பலத்தினாலோ, பிறர் மீது தன் ஆதிக்கத்தைச் செலுத்துபவன் இழித்துரைக்கப் படுகின்றான். இத்தகையவர்களுக்குக் குடிமகனின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அரசாங்கத்தின் விடயங்களைப் பற்றித் தங்களது கருத்துகளை வெளியிட அருகதை அற்றவர்களாக அவர்கள் கருதப்படுகின்றனர். இப்புதிய எழுச்சியைக் கண்டு சீற்றங்கொண்ட முதலாளி, உலகத்திலுள்ள முதலாளிகளுடன் சேர்ந்து இதைச் சபிக்கிறான்.... நிந்திக்கிறான்."

(இவை 1917 இல் ஏற்பட்ட புரட்சியின் அநுகூலங்கள்)

கொள்கைக்காகவே பிரேம்சந்த் அவரது பேனா, அவரது கூர்வாள் போராடியது. இராட்சத அலைகள், பணக்கோட்டைகள், அபரிமிதமான செல்வத்தை தாக்கும் செயல்வீரனாகவே அவர் இருந்தார். இலட்சியவாதம் அவரது பலமாகவும், அவரது எழுத்திற்குத் தூண்டுகோலாகவுமிருந்தது.

'மங்கள சூத்திரம்' என்னும் அவரது கடைசி நாவலில் தமது நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்துகிறார். இந்நாவலின் கதாநாயகனாக பிரேம்சந்த் தரிசனம் தருகிறார்.

"அவனிடம் மகத்தான ஆற்றலுணர்வு இருந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. அவனிடம் உதவி கேட்டுப் பெறமுடியாமல் போயிற்று என்பதில்லை. இலக்கியப் பணியை விட வேறெதிலும் அவனுக்கு நாட்டமில்லை. இதிலோ பணம் கிடையாது. அவனுக்குப் புகழ் கிட்டியது என்பது உண்மை. இது அவனுக்கு மனநிறைவை, ஆத்ம திருப்தியை அளித்தது. செல்வத்தைத் திரட்டுவதில் அவனுக்கு நம்பிக்கையில்லை. சுயாபிமானத்துடன் அவன் வாழ விரும்பினான் – அவ்வளவுதான். அவனிடம் ஒருவிதச் செருக்குண்டு. அதை நீங்கள் கர்வமென்று வேண்டுமானாலும் கூறலாம். ஆனால் அது இலக்கிய கர்த்தாக்களுக்கே இருக்கும் இயல்பான செருக்கு...."

(முற்போக்குச் சிந்தனையாளராக இலட்சியவாதியாக வாழ்ந்துகாட்டிய ஒரு படைப்பாளியைத் தரிசிக்க இங்கு வைத்துள்ளோம்)

# ஏனிந்தப் பாராமுகம்?



இயற்கை அனர்த்தம் சென்னையில் தன் கோரப்பற்களை மிக ஆழமாகப் பதித்திருக்கிறது. மற்றைய நாடுகளில் நடக்கும் இயற்கையின் கொடும் சீற்றங்களான பூமி நடுக்கம், ஊழிக் காற்று, வரட்சி, குளிர், பாரதப்பூமி அண்டைய நாடான இலங்கை போன்றவற்றிலோ நடைபெறுவது மிகக்குறைவு. இயற்கை தனது மென்மையையே இந்திய நாட்டில் இதுவரை தவளவிட்டிருக்கிறது. இம்முறை வந்த பேய் மழையோ எல்லாவற்றையும் புரட்டிப் போட்டிருக்கிறது. ஆறு அடிவரை வெள்ளம் உயர்ந்திருக்கிறது. ஏழை, செல்வந்தர், அரசியல்வாதி, புகழ் பூத்த சினிமாக்காரர் என்ற எந்த ஏற்றத் தாழ்வும் இந்த மழை காட்டவில்லை.

வானிலை விஞ்ஞானிகளின் அசட்டையீனம் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. இவர்கள் மக்களை முன்னரே எச்சரித்திருக்கலாம் என்ற குற்றச்சாட்டை நிராகரிக்கவும் முடியவில்லை. மறுபக்கம் அரசியல்வாதிகளின் தொலைநோக்கின்மையால் ஆற்றுப் படுக்கைகள், தூர்ந்த குளங்களை சீமெந்து கட்டிடங்களாக்கி, வெள்ளப் பெருக்கை இந்த தூர்ந்த ஆற்றுப் படுக்கையூடு கடலில் போய் சேரும் இயற்கையை நிறுத்தியமைக்கு பெருவிலை கொடுத்து சென்னை நிற்கிறது.

இனித்தன்னும் இயற்கையோடு ஒன்றிணைந்து இயல்பு வாழ்க்கை வாழ முயற்சித்தால் இந்த அனர்த்தங்களைத் தவிர்க்கலாம். அரசாங்கத்தினதும் அரசியல்வாதிகளினதும் மெத்தனப் போக்கினால் பல உயிர்கள் காவு கொடுக்கப்பட்டிருக்கின்றன. பலகோடி சொத்துக்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன .இயற்கையழிவு ஒரு பெரிய நன்மையைச் செய்திருக்கிறது. அதுமக்களை ஒற்றுமையாக்கியிருக்கிறது, விழிப்புறச் செய்திருக்கிறது. சாதி, சமயம்,பணம், இந்த வரம்புகளை உடைத்து மனித நேயம் பூக்க வைத்திருக்கிறது. இஸ்லாமியர்கள் இந்துக்களிற்கும், இந்துக்கள் கிறிஸ்தவர்களுக்கும் பரஸ்பரம் உதவியிருக்கிறார்கள். செய்திகளை வாசிக்க, கண்கள் பனிக்கின்றன; மயிர் கூச்செறிகிறது.

இலங்கைத் தமிழர்கள் வாழ்வில் ஏற்பட்ட ஏற்றங்கள், தாழ்வுகளில் தங்களை ஈடுபடுத்தி தொப்புள் கொடி உறவை என்றும் பேணியவர்கள் தமிழ்நாட்டுமக்கள் என்றால் இதுமிகைப்படுத்திய வசனமாகாது. 2009 மே மாதம் நடந்த வன்னிக் கொடும் சமரின் போது பெரு மழையையும் பொருட்படுத்தாது நாட்கணக்காக மக்கள் சங்கிலித் தொடர் போராட்டம் நடத்தியவர்கள், இதே தமிழ் நாட்டு மக்கள். எமதுபோராட்ட காலத்தில் எத் தனை பேர் தம்மை ஆகுதியாக்கியிருக்கிறார்கள்?

இன்று அதே தமிழ்நாட்டு மக்கள் நாதியற்று நிற்கிறார்கள். வீடில்லை, தாயில்லை, தந்தையில்லை, பிள்ளையை காணவில்லை, குருவி போல் சேர்த்து வைத்த சொத்து வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டுவிட்டது. இலங்கைத் தமிழர்களின் பங்களிப்பு எங்கே? தாயகத்திலும் சரி, புலம்பெயர்ந்த நாடுகளிலும் சரி, எமது செயற்பாடுகள் என்ன? ஏதோ வேற்றுக் கிரகத்தில் ஒரு சம்பவம் நடந்த மாதிரி பாராமுகமாக இருக்கிறோம். "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மாந்தரை நினைந்துவிட்டால்" பாரதியின் வசனங்களைத் தவிர, வேறெதை நினைத்து உள்ளம் குமுறுவது?

இத்தனைக்கும் கொடையில், ஈகையில் சளைத்தவர்களல்லர் ஈழத்தமிழர்கள். 30 வருடப்

போரின் கோரப் பற்களில் கடித்துக் குதறப்பட்டு முள்வேலிக்குப் பின்னால் உணவின்றி, உற வின்றி அடைக்கப்பட்டு நாதியற்று இருந்தோம். வெளிநாடுகளில் இருந்த நல்லுள்ளம் கொண் டோரினால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கை களினால் இன்று வடக்கு, கிழக்கு பசுமை பெற் றிருக்கிறது. மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. இப்போது அந்த இரக்கம் எங்கே போயிற்று? எம் குடும்ப நாமம் போட்டால்தான் உதவி செய் வோமா? எமது ஊரில் இருக்கும் பாடசாலை, கோவிலில் எம்பெயரை போட்டால் தான் நாம் உதவுவோமோ? ஏன் இந்த குறுகிய வட்ட சிந் தனை? தமிழ்நாட்டு மக்கள் எங்கள் தொப்புள் கொடி உறவுகள் இல்லையா? இந்த அனர்த்தத் தில் நாம் உதவி செய்யாமல் உறங்கி கிடந்து விட்டு வேறு எப்போது விழிப்போம்?

இலங்கைத் தேசிய தமிழ்ப் பத்திரிகை களிலோ, யாழ்குடாநாட்டு ஊடகங்களிலோ மக் கள் தனிப்படவோ அல்லது தர்ம நிறுவனங் களினூடாகவோ உதவி செய்ததாகவோ, முயற் சிப்பதாகவோ ஒரு செய்திதானும் இல்லை. பிர சித்தி பெற்ற பாடசாலைகளில் பிள்ளைகளை ஊக்குவித்து நிதி திரட்டியிருக்கலாம். இது மிகப் பெரிய சந்தர்ப்பம். இளவயதிலேயே தர்ம சிந் தனையைத் தூண்டுவதற்கு, புகழ்பூத்த ஆலயங் களில் ஒரு பிரார்த்தனை கூடவா எமக்கு நடத்த இரக்கம் இல்லாமற் போயிற்று?

மீண்டும் பாரதியைத் துணைக்கு அழைக்க வேண்டியிருக்கிறது.

*"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் நிதி*
*குறைந்தவர் காசுகள் தாரீர்*
*அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்*
*ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்*
*மதுரத் தேமொழி மாதர்களெல்லாம்*
*வாணி பூசைக்குரிய பேசீர்*
*எதுவும் நல்கியங் கெவையானும்*
*இப்பெருந் தொழில் நாட்டும் வாரீர்."*

பிரித்தானியாவில் உள்ள திருக்கோவில் ஒன் றிய அங்கத்தவர் திரு.ரவீந்திரமோகனைத் தொடர்பு கொண்ட போது, இந்த வெள்ளிக்கிழமை விசேடபூசைகள் செய்வதாகவும், ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கும் கோவில்கள் தலா £1000 (பவுண்ஸ்) கொடுக்கும் என்ற நற்செய்தி காதில் இனிமை சேர்த்தது.

தமிழ்நாட்டு எம்முறவுகளிற்கு நிதியுதவி செய்ய யாராவது விரும்பினால் மேலே தரப்பட் டுள்ள தர்ம நிறுவனத்தை தொடர்பு கொள்ளவும். எவ்வளவு பணம் கொடுக்கிறோம், அல்லது என்ன காரியம் செய்கிறோம் என்பது முக்கியத் துவம் இல்லை. எத்துணை அன்புடனும் கரிசனத் துடனும் கொடுத்தோம் அல்லது செய்தோம் என் பதே முக்கியம்.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு, சிறு துளி பெருவெள்ளம் என எமது முன்னோர் பழ மொழிகளை என்ன சும்மாவா சொன்னார்கள்?

இராமாயணத்தில், இராமன் இலங்கைக்கு அணைகட்டுவதற்கு ஒரு அணிலும் உதவியதாக கேள்விப்பட்டிருக்கிறோம். அதே உதவியைத் தான் நாம் தமிழ்நாட்டு மக்களிற்கு செய்ய வேண்டி நிற்கிறோம். முடிவில் ஒன்று - கொடுத்து வறுமையான தாக இதுவரை உலகில் செய்தி பதியப்பட்டதாக இல்லை.

இணுவையூர்

பதஞ்சலி நவேந்திரன்

( இலண்டன் )

## சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வாசகப் பெருமக்கள், விளம்பரதாரார் கள், சந்தாதாரர்கள், இலக்கிய நண்பர் கள், நலன்விரும்பிகள், மாணவச் செல் வங்கள், படைப்பாளிகள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் அபிமானிகள் உட்பட அத்தனை பெருந்தகைகளுக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக் களை **'தாயக ஒலி'** பெருமிதத்துடன் முன்வைக்கிறது.

சிறுகதை

# முடிவுகள் முனைப்புகள்

- த.சிவநித்திலன்

" இரண்டு கொள்ளி எடுத்துவர பின்னுக்குப் போனவள இன்னும் காணேல்ல. இந்தக் கோதரியில போன மழை விடுதுமில்லை. வயிறு புகையிதெண்டு தேத்தண்ணி வைக்க வெளிக்கிட்டால் விறகில்ல. அவசரத்துக்கெண்டு பின்கோடித் தாவாரத்தில் கொஞ்ச விறகு கட்டி வைச்ச ஞாபகம் இருக்கு. அதிலதான் இரண்டு கொள்ளி எடுத்துவரச் சொல்லி அனுப்பினவளைக் காணேல்ல" என்று பொன்னம்மா முணுமுணுத்தபடி.....

"எடி அருந்தவம் எங்கையெடி நிக்கிறாய் சுறுக்காய் வாடி பிள்ள"

"பசிக்களை தலையைச் சுத்துது, எழும்பி நடந்தால் விழுந்துவிடுவனோ எண்டு பயமாயிருக்கு. நான் செத்தால் பறவாயில்ல. இந்தப் பிள்ளையள் இரண்டையும் யார் பாப்பினம்" என்று சொல்லியபடி....

"எடி மேனே கெதியாய் வாடி"

"எண அம்மா எங்கட ஆட்டை முதளையொண்டு கவ்விக் கொண்டிருக்குது. எனக்குப் பயமாயிருக்கம்மா ஓடி வானே"

"என்னடி பிள்ளை சொல்லுறாய் முதளயோ"

"ஓம் அம்மா பெரிய முதளை"

"குளம் குட்டையளுக்க இருந்த முதளைகள் மழை வெள்ளத்தோட அள்ளுப்பட்டு ஏழைகள் இருக்கிற குடிசைப் பக்கமல்லே வந்திட்டுதுகள். அதுகளும் ஏழையள் எண்டு விட்டு வைக்கல்ல. ஒரு புண்ணியவான் எங்கட கஷ்டத்தைப் பாத்து விட்டு, இந்த ஆட்டை வளவுங்கோ என்று சொல்லித் தந்துவிட்டுப் போனவர். அந்த ஆட்டையும் முதள விட்டு வைக்கேல்ல, நொந்து என்ன பலன். முந்தநாளாம் அன்புபுரத்தில் ஒரு வீட்டுக்குள் புகுந்த முதள பிள்ளை ஒண்டை கவ்விப் போட்டுதாம். தாய்க்காறி முதளயுடன் மல்லுப்பிடிச்சு அயலட்டையாரின் உதவியுடன் சிறு காயங்களோட பிள்ளையைக் காப்பாத்திப் போட்டாளாம். எனக்கோ பசிக் களையில தலை சுத்துது நான் எப்படி முதளயோட சண்டைக்குப் போவன்"

"அம்மா இரணைமடுக் குளத்துக்குள்ள முதளைகள் இருக்குதாம். வெள்ளம் நிரம்பி குளம் உடைச்சுப் போடும் எண்டு வான்கதவுகளைத் திறந்து விட்டிட்டினாம். வெள்ளத்தோட முதளையளும் அடிபட்டு வெளியேறி வந்துவிட்டுதாம் எண்டு சொல்லினம்"

"ஏழைகள் எக்கேடு கெட்டுப் போனாலும் ஒருவருக்கும் அக்கறயில்ல. இதை யாருக்குச் சொல்லி அழுகிறது. மழை வந்தாலும் எங்கட பாடு கஷ்டந்தான். அகோர வெய்யிலடிச்சாலும் அதே பாடுதான். குடிக்கத் தண்ணிக்குக் கூட வழியைக் காணம்."

என்று பொன்னம்மா மகளைப் பார்த்துச் சொன்னாள்.

"மழை பெய்யேக்க வயலைப் பார்க்கப் போன ஒரு தகப்பனையும் மகனையும் யானை அடிச்சுப் போட்டுதாம் எண்டும் கதைக்கினம் அம்மா"

"ஏழையாய் பிறந்த எங்களுக்குப் பாதுகாப்பில்ல. யானை, முதள, பாம்பு, பூச்சி எண்டு அதுகளாலும் உயிருக்குப் பயந்து வாழவேண்டியிருக்கு. இந்தக் கஷ்டங்களைப் பார்க்காமல் அவரும் போய்ச் சேந்துவிட்டார். நான் இருந்து இதுகளை அனுபவிக்க வேண்டியிருக்கு. ஏழையள் எண்டதால கடவுளும் கண் துறக்கிறாரில்ல. பாவிகள் பாவிகள்தான்."

● ● ● ●

யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஊரைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயம். உயிருக்குப் பயந்து பொன்னம்மாவும் கதிர

வேலுவும் இரண்டு பொம்பிளைப் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு போய் வவுனியா பூந்தோட்டம் அகதி முகாமில் தஞ்சமடைந்தினம். அகதி முகாமில் கொடுத்த உதவிப் பொருட்களையும் பெற்று சீவியத்தை நடத்தி வந்தார்கள்.

அகதி முகாம் வாழ்க்கையில் சந்தோஷம் இருந்ததோ இல்லையோ மேலும் இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள் பொன்னம்மா. அகதி முகாமில் கொடுகின்ற உதவிகள் சீவியத்திற்குப் போதாமையால் வாழ்வதற்குப் பெரும் கஷ்டப்பட்டனர். பிள்ளைகள் பசிக்கிறது என்று சொல்லி அழும் போதெல்லாம் பொன்னம்மாவும் செய்வதறியாது கண்ணீர்விட்டு அழுதுவிடுவாள்.

இந்த நிலையில் அகதி முகாமைவிட்டு வெளியில் சென்று ஏதாவது கூலி வேலை செய்தாவது, பிள்ளைகளின் பசியைப் போக்க உழைக்க வேண்டும் என்ற முடிவுடன் கதிரவேலு வவுனியா கடைத்தெருவுக்கு வந்து பலரிடமும் ஏதாவது வேலை தருமாறு கெஞ்சிக் கேட்படி தமது குடும்பத்தின் கஷ்ட நிலையைச் சொல்லிக் கொண்டே வந்தார்.

"நாடு இப்போது இருக்கின்ற நிலையில் எங்கள் பாடும் சரியான கஷ்டம்தான். வியாபாரங்களும் சீரில்ல" என்று சொல்லி கைவிரித்து விட்டார்கள். செய்வதறியாது தடுமாறியபடி நின்ற கதிரவேலுவை ஒரு சாப்பாட்டுக் கடைக்காரர், சமையலுக்குத் தேவையான விறகுகளைக் கொத்தித் தரும்படி கேட்க, அவரும் சம்மதித்து விறகு கொத்தும் வேலையைச் செய்து வந்தார். கடை முதலாளி கொடுக்கும் சொற்ப காசுக்கு குடும்பத்துக்குத் தேவையான ஒரு சில பொருட்களையும் வாங்கிக் கொண்டு அகதி முகாமுக்குச் செல்வார்.

காலையில் அகதி முகாமிலிருந்து புறப்படுபவர் மீண்டும் அங்கு போய்ச் சேர இரவாகிவிடும். வெளியில் சென்ற கணவன் திரும்பி வரும் வரை பொன்னம்மா சாப்பிடாமல் பார்த்துக் கொண்டே இருப்பாள். இருப்பதைப் பிள்ளைகளுக்குச் சாப்பிடக் கொடுத்துவிட்டு, கணவன் வரவுக்காக அகதி முகாம் வாசல் வரை வந்து நின்று காத்திருப்பாள். கணவன் வரும்போது கொண்டு வரும் பாணையோ, பணிசையோ அல்லது வெறும் உணவுப் பண்டங்களையோ பெற்று பிள்ளைகளுக்கும் கணவனுக்கும் கொடுத்து, மிகுதியை ஏதாவது இருந்தால் மட்டும் தன் வயிற்றைப் பார்த்துக் கொள்வாள். பாண், பணிஸ் ஏதாவது இருந்தால் அடுத்த நாள் பிள்ளைகளுக்கு கொடுப்பதற்காக கட்டி வைத்துவிட்டு தண்ணியை மட்டும் குடித்து விட்டுப் படுத்துவிடுவாள். இப்படியே அகதி முகாம் வாழ்க்கை கதிரவேலு - பொன்னம்மா குடும்பத்தினின் அவலத்துடனும், இவர்கள் போன்று இன்னும் பலருடைய வேதனைகளுடனும் வாழ்வாதாரப் பிரச்சினைக்கு முடிவு காணாது நகர்ந்து கொண்டிருந்தது.

அகதி முகாம் வாழ்க்கை எவ்வளவு பயங்கரமானது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. சின்னதாக ஒரு கொட்டில், மழை பெய்தால் வெள்ளம் கொட்டிலுக்குள் வந்துவிடும். படுப்பது, இருப்பது, சமைப்பது என்பவற்றை எண்ணினால் அங்கு இருக்க முடியாது. தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு. குளிப்பதற்கு, உடுப்புகள் தோய்ப்பதற்குத் தண்ணீர் பெறுவது பெருங் கஷ்டம். மலசலகூடங்கள் ஒழுங்கான பராமரிப்பு இல்லாதபடியால் துர்நாற்றம் வயிற்றைக் குமட்டும், சுகாதார வசதிகள் போதாமையினால் பல இடர்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய பரிதாப நிலை. குப்பை கூளங்கள் ஒழுங்காக அகற்றப்படாமையால் நாய், பூனை, காகங்கள் அவற்றைக் கிளறிவிடுவதும் துர்நாற்றம் வீசக் காரணமாக அமைந்து விடுகின்றது. அது மட்டுமன்றி பொழுது சாய்ந்தால் நுளம்புகளின் ரீங்காரம். இரத்தம் குறைந்த மனிதர்களிடமும் இரத்தம் உறுஞ்ச அவை படும்பாடு. நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாத நிலை. நிம்மதி இருந்தால்தானே நித்திரை கொள்ள முடியும். எலி, கரப்பொத்தான், வேறு பூச்சி, புழுக்களின் நடமாட்டத்துக்கும் அங்கு பூரண சுதந்திரம் உண்டு.

தொற்று நோய்களான மலேரியா, டெங்கு,

கொலரா என்று ஆஸ்பத்திரியும் அகதி முகாம் என்றும் அலையும் கூட்டம் ஒருபுறம். சொறி, சிரங்கு, கண்நோய், காய்ச்சல் என்று துன்பப்படு வோர் ஒருபுறம். இப்படிப் பலவகைப்பட்ட இன் னல்களை மக்கள் சந்திப்பதை அங்கு தரிசிக்க முடியும். நரகம் என்று ஒன்று இருக்கோ இல் லையோ ஆனால் உண்மையான நரக வாழ்க் கையை அகதி முகாம்களில் சந்திக்க முடியும். சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டே அகதி முகாமில் காலத்தை ஒட்டு கின்றார்கள்.

அகதி முகாம்களுக்குப் பொறுப்பாயிருப்பவர் களிடம் மனித நேயத்தைக் காணமுடியாது. தமக்கு நெருக்கமானவர்களுக்குச் சலுகை களை, நிவாரணப் பொருட்களை தாரளமாக வழங் கிக் கொண்டு, மற்றவர்களை நாயிலும் கேவல மாக அதிகாரத் தொனியில் அடிமைகள் போல நடத்துவதும் சாதாரண விடயம். அதிகார வர்க்க உணர்வு அவர்களிடம் மேலோங்கியிருந்ததால் அவர்களுடைய செயற்பாடும் எல்லை கடந்தே யிருந்தது. அவர்களின் செயற்பாடுகளால் பாதிக் கப்பட்டவர்கள் அவர்களைத் திட்டி தமது ஆத்தி ரத்தை வெளிப்படுத்துவார்கள். சிலர் தமக்குக் கிடைப்பதும் கிடைக்காமல் விட்டுவிடுமே என்று பயந்து என்ன நடந்தாலும் பொறுமை காப்பார்கள்.

அகதிகளுக்கு வரும் நிவாரணப் பொருட்க ளைச் சுருட்டும் கைங்கரியங்களையும் பொறுப் பானவர்கள் ஒழுங்காகச் செய்து வந்தனர். எவ ரும் தட்டிக் கேட்டி முடியாது. அவர்கள் சுதந்திர மாகத் தமது இலாபங்களில் கண்ணும் கருத்து மாக இருந்தனர். அங்கு இருப்பவர்கள் கஷ்டம் காரணமாகத்தான் அகதிகளாக வந்துள்ளனர் என்று எள்ளளவும் அக்கறை கிடையாது. அரசி யல் களமும் பொறுப்பானவர்களுக்குச் சாதமா கவே இருந்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில் ஒருநாள் அகதி முகாமை விட்டு வேலைக்குச் சென்ற கதிரவேலு இரவு பத்து மணியாகியும் இருக்கும் இடத்துக்குத் திரும்பவில்லை. பதறிப் போனாள் பொன் னம்மா. இரவில் ஊரடங்குச் சட்டம் இருந்ததால் வெளியில் போக முடியாது. தனிமையில் இருந்து அழுவதைத் தவிர பொன்னம்மாவால் என்ன செய்ய முடியும். ஷெல் விழுந்ததால் உடல் சிதறிப் போன கணவனின் பிரேதத்தை அடுத்த நாள் காலை கண்டுபிடித்து உறுதிசெய்துகொண்ட பொன்னம்மா அழுது புலம்பியபடி செய்வதறி யாது தடுமாறி நின்றாள். அகதி முகாமிலுள்ள ஒரு சிலரின் உதவியுடன் அந்த இடத்திலேயே கதிர வேலுவின் பிரேதம் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கணவனை இழந்த சோகத்தின் கொடூரம் மனத்தை வாட்ட, வாழ்க்கையே சூனியமாகத் தெரிந்தது. பிள்ளைகளின் எண்ணம் மனத்தில் தோன்ற அவர்களுக்காக வாழ வேண்டும் என்ற மனத்திடத்தை ஏற்படுத்த முயன்றாள். பல கஷ் டங்களுக்கு மத்தியில் அகதி முகாம் வாழ்க்கை தொடர்ந்தது. ஒரு காலகட்டத்தில் அகதி முகாமில் கொலரா நோய் பரவத் தொடங்கியது. உரிய நேரத்தில் சரியான மருத்துவ வசதிகள் கிடைக் காத காரணத்தால் குழந்தைகளின் உயிரிழப்பு கள் தொடர்ந்தன. கொலரா நோய் காரணமாக அகதி முகாமுக்கு வந்து பெற்ற இரண்டு ஆண் பிள்ளைகளையும் பொன்னம்மா பறிகொடுத்தாள். தொடந்த உயிரிழப்புக்களால் பொன்னம்மா பேத லித்துப் போனாள்.

● ● ● ●

"அம்மா யுத்தம் முடிந்துவிட்டது எண்டு சொல் லீனம். அதனால் தாங்கள் தங்கள் சொந்த வீட் டுக்குப் போகலாமெண்டு சிலர் குடும்பத்தோட போறார்கள். நாங்கள் எப்ப அம்மா எங்கட வீட் டுக்குப் போவம்"

"நீங்கள் இஞ்ச இருங்கோ. நான்போய் விபர மறிஞ்சு வாறன்" என்று சொல்லி பொன்னம்மா தனது ஊருக்குப் புறப்பட்டாள். வழியில் ஆமிக் காரர் நின்று, "அந்தப் பக்கம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கு, ஒருவரும் போகக்கூடாது. அது ஆபத்தான பகுதி" என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். போன சனம் மீண்டும் திரும்பிக் கொண்டிருந்தது.

பொன்னம்மாவும் செய்வதறியாது மீண்டும்

அகதி முகாமுக்கு வந்துவிட்டாள். கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் தொடர்ந்ததால் தொடர்ந்தும் அகதி முகாமே பொன்னம்மாவுக்கும் அவளது இரண்டு பிள்ளைகளுக்கும் தஞ்சமானது.

ஆறு மாதங்களுக்கு முன்புதான் பொன்னம்மா தனது இரண்டு பிள்ளைகளுடன் தனது காணி இருக்கும் சின்னவன்குளம் வந்து சேர்ந்தாள். வரும்போது கிடைத்த கொஞ்சப் பணத்தில் ஒரு கொட்டிலைப் கட்டிக் கொண்டு வாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டு செல்வது மிகுந்த கஷ்டமாக இருந்தது.

தொழில் இல்லை. வருமானம் எதுவுமில்லை. வாழ வழியில்லை என்ற நிலை. பிள்ளைகளுடன் கிணற்றுக்குள் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்று பல முறை எண்ணினாலும் அயலிலுள்ளவர்களின் ஆறுதல் வார்த்தைகள் மனதில் பிள்ளைகளுக்காக வாழ வேண்டும் என்ற ஒரு தெளிவை ஏற்படுத்தியது. கிராம அலுவலர், பிரதேச செயலாளர் ஆகியோரிடம் சென்று தனது வாழ்வாதாரப் பிரச்சினையைச் சொல்லி உதவி செய்யுமாறு பல முறை வேண்டிக் கொண்டாள். ஆனால் அவள் எதிர்பார்த்த எந்த ஆதரவும் கிடைக்கவில்லை.

இக்காலகட்டத்தில் மூத்த மகள் கல்பனா ஒரு இராணுவச் சிப்பாயுடன் காதல் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தாள். அதனால் அவன் கல்பனாவைக் காண வீட்டுக்கு வந்து சென்றான். பொன்னம்மாவுக்கு இந்தத் தொடர்பு பிடிக்காவிட்டாலும்.... மௌனமாக இருந்துவிட்டாள்.

ஒருநாள் மூத்தமகள் தாயிடம் வந்து "அம்மா அவர் என்னைக் கல்யாணம் கட்டி தன்ரை ஊருக்குக் கூட்டிப் போகப் போறாராம்" என்றாள்.

"நாங்கள் தொடர்ந்து படும் கஷ்டம் காரணமாக, உன்ர விருபத்துக்கு மாறாக நான் ஒன்றும் சொல்ல முடியாது. ஆனால் அவன் உன்னைக் கடைசி வரையும் வைச்சுப் பாரப்பான் என்ற நம்பிக்கை இருந்தால் நீ அவனுடன் போவதற்குத் தடை சொல்லமாட்டன்."

"அவர் தொழிலில் ஆமியாக இருந்தாலும் மனத்தால் நல்லவரம்மா"

ஒருநாள் பியசேன தனது பெற்றோர்களுடன் வந்து கல்பனாவை கோயிலில் வைத்து கல்யாணம் கட்டிக் கொண்டு தன்ர சொந்த ஊரான சீதுவைக்குக் கூட்டிச் சென்றுவிட்டான்.

"அவளாவது கஷ்டமில்லாமல் வாழட்டுமே" என்று பொன்னம்மா மனத்துக்குள் நினைத்துக் கொண்டாள்.

● ● ● ●

இப்பொழுது பொன்னம்மாவும் இளைய மகள் அருந்தவமும்தான் வீட்டில். அருந்தவம் வீட்டில் தனிய இருக்கப் பிடிக்காமல் கிராம முன்னேற்றச் சங்கத்தால் நடத்தப்படுகின்ற தையல் வகுப்புக்குச் சென்று வந்தாள். பொன்னம்மா கோழிகளையும் ஆட்டையும் வளர்த்து வந்தாள். வீட்டில் சின்னதாக மரக்கறித் தோட்டத்தையும் பராமரித்து வந்தாள். பாழாய்ப் போன மழை வந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மரக்கறித் தோட்டத்தையும் கோழிகளையும் அள்ளிக் கொண்டு போட்டுது. ஆட்டையும் முதளை அமுக்கிவிட்டுது.

மழை தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது. வெள்ள மட்டமும் உயர்ந்து கொண்டே சென்றது. ஈரத்துக்குள் தொடர்ந்து நின்றதனால் விறைச்சுப் போய் நிலத்தில் சாய்ந்து விழுந்த பொன்னம்மா எழும்பவே இல்லை.

அருந்தவம் செய்வதறியாது "அம்மா என்னைத் தனிய அனாதையாக விட்டிட்டுப் போய் விட்டியளே. நான் என்ன செய்ய, பாழ்பட்ட யுத்தம் எங்கள் குடும்பத்தை சீரழித்துவிட்டுதே. நல்லாயிருந்த எங்கட குடும்பம் நாசமாய்ப் போச்சே" என்று கத்தி அழுதாள்.

கல்பனாவுக்குச் செய்தி கிடைத்து அவள் புருசனுடன் வந்து தாய்க்குச் செய்ய வேண்டிய கடமைகளை முடித்துக் கொண்டு, அநாதரவாக நின்ற தங்கை அருந்தவத்தையும் கூட்டிக் கொண்டு சீதுவைக்கு வந்துவிட்டாள்.

"அக்கா எனக்கு ஒரு வேலை எடுத்துத் தாங்கோ ; வீட்டில் சும்மா உங்களுக்குப் பாரமாக இருக்கச் சங்கடமாயிருக்கு."

"அது சரி உனக்கு என்ன வேலை செய்யத் தெரியும்?"

"நான் ஊரில இருக்கேக்க கிராம முன்னேற் றச் சங்க தையல் வகுப்புப் போய் தையல் படிச்ச னான். நல்லாய் தைப்பன் அக்கா"

"அப்படியென்றால் அத்தானிட்டைச் சொல்லி ஒரு ஆடைத் தொழிற்சாலையில் வேலைக்குச் சேத்துவிடுகிறன்."

"நல்ல அக்கா, அந்த உதவியைச் செய்து தாங்கோ."

கட்டுநாயக்காவிலுள்ள ஒரு ஆடைத் தொழிற் சாலையில் வேலையைப் பெற்றுக் கொண்ட அருந்தவம், அக்கா வீட்டிலிருந்து தினமும் வேலைக்குப் போய் வரலானாள்.

அந்தக் கால கட்டத்தில் அங்கு வேலை செய் யும் வாலிபனுடன் தொடர்பு ஏற்பட்டு, அது காத லாக மலர்ந்தது. அக்காவிடம் தனது விடயத்தைச் சொல்ல....

"நல்ல மனிதர்களும் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் அருந்தவம். அம்மா எனக்குச் சொன்ன மாதிரி உன்னைக் கடைசி காலம் வரைக்கும் வைச்சு காப்பாற்று வான் என்ற நம்பிக்கை இருந்தால் எனக்கும் அத் தானுக்கும் பூரண சம்மதம்" என்று தனது தங் கையின் வாழ்வில் அக்கறை கொண்ட கல்பனா கூறி முடித்தாள்.

ஆடைத் தொழிற்சாலையில் மேற்பார்வை யாளராக வேலை பார்க்கும் சஹிட் தன் வாழ்க் கைத் துணைவியாக அருந்தவத்தை ஏற்றுக் கொண்டான். நீர்கொழும்பில் தனிக்குடித்தனம் நடத்திக் கொண்டு இருவரும் வேலைக்குப் போய் வருகின்றார்கள்.

மழை ஓய்ந்து வானம் பிரகாசமாகத் தெரிந் தது. மக்கள் நடமாடத் தொடங்கி விட்டார்கள். இருந்தும் 'சின்னவன்குளம்' மக்கள் இந்த நல் லாட்சி அரசாங்கத்தால் தங்கள் வாழ்வு சுபீட்சம் பெறும் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ●

# குறுங்கதைகள் மூன்று

- திருமலை சுந்தா

**1) உழைப்பு**

'உழைச்சு களைச்சு வந்ததுகள் சாப்பிட்டு விட்டுப் போகட்டும். வேலை வெட்டி இல்லாம இருந்து கொண்டு... கொஞ்சம் பிந்தி சாப்பிட்டா என்ன?'

உழைத்த உழைப்புகளை எல்லாம் மக்களுக்குக் கொடுத்துவிட்டு உடலை நிமிர்த்த முடியாமல் தடுமாறும் இராசையாவின் முதுமை கண்களில் கண்ணீரோடு பசியும் கொட்டிக் கொண்டிருந்தது.

**2) பசி**

'சாப்பிட ஏதும் இருந்தா தாறிங்களா?' கோழி முட்டை விற்க வந்த மனிசியின் குரல் கேட்டது.
'வீட்டில் உள்ளவங்க இன்றும் ஒரு வாய் சாப்பிடவில்லை. கொஞ்சம் பொறுத்து வந்தி என்றால்...?'
முதல் குரலுக்கு பதில் குரல் கேட்டது. மனிசியின் கண்களில் பசியின் சாயல் எனக்கு மட்டும் தெரிந்தது.

**3) இயலாமை**

பேரப்பிள்ளை தேங்காய் பாலைத் தட்டி விட்டது. சமையல் வேலையில் களைத்திருந்த பாட்டி குழந்தையை கவனித்துக் கொண்டிருந்த களைத்திருந்த பாட்டாவைப் வசைமாரி பொழியத் தொடங்கினார். பாட்டா விடாது தன்னை நியாயப்படுத்திக் கொண்டிருந்தார். இருவரின் இயலாமை இருவருக்கும் தெரியவில்லை. தெரிந்த குழந்தை கொக்கலம் கொட்டிச் சிரிக்கின்றதா? ●

நிகழ்வுகள் நினைவுகள்

# திருமலை நகர் விருது விழாவும் 'தாயக ஒலி' பொங்கல் மலர் வெளியீடும்

-வைத்திய கலாநிதி தாஸிம் அகமது-





தடாகம் கலை இலக்கிய வட்டம் - கல்வி கலாசார பன்னாட்டு அமைப்பும் கனடா படைப்பாளிகள் உலகமும் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் இணைந்து கடந்த 15.12.2015 அன்று திருகோணமலை மாநகரில் ஒரு மாபெரும் விருது விழாவினை ஏற்பாடு செய்திருந்தன.

விருது வழங்கும் அரங்கு, நூல் வெளியீட்டு அரங்கு, உரை அரங்கு, கலை இலக்கியவாதிகள் அறிமுகம், பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்ச்சி போன்றவை ஒரே மேடையில் நடைபெற்றன. தடாகம் கலை இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகர் திருமதி கலைமகள் ஹிதாயா ரிஸ்வி இப்பெருவிழாவுக்குத் தலைமை தாங்கினார்.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும், மலேசியா கனடாவிலிருந்தும் வருகை தந்திருந்த கலை இலக்கியவாதிகளும் எழுத்தாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்த இந்நிகழ்வில் இலங்கை, மலேசியா, கனடாவைச் சேர்ந்த 45 கலை இலக்கியவாதிகளும் ஊடகவியலாளர்களும் பட்டங்கள், சான்றிதழ்கள் விருதுகளுடன் கலைக்குயில் திருமதி சுவைதா கரீம் அவர்களது செலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவுச் சின்னமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இப்பெருவிழா "திருமலை நகர் விருதுவிழா"

எனும் மகுடத்தில் சன்சைன் ஹோட்டல் வரவேற்பு மண்டபத்தில் இராப்போசன விருந்துடன் நடைபெற்றது. இலங்கை இலக்கியச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டு மலேசியாவிலிருந்து வருகை தந்திருந்த 36 எழுத்தாளர்களும், கனடாவிலிருந்து திரு. ஐங்கரன் கதிர்காமநாதனுடன் மற்றும் சிலரும் கலந்து கொண்டனர்.

'தாயக ஒலி' ஆசிரியர் திரு. தம்புசிவா அவர்களுக்கும் எனக்கும் (தாஸிம் அகமது) விழாவில் கௌரவிப்பதற்கான அழைப்பு விடுக்கப்பட்டதன் பேரில் கொழும்பிலிருந்து சென்று பங்குபற்றினோம். நூல் வெளியீட்டு அரங்கில் 'தாயக ஒலி'யின் பொங்கல் சிறப்பிதழாக வெளிவந்த 21வது இதழ் விழா மேடையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மலேசிய எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. இராஜேந்திரன் முன்னிலையில் கனடா திரு. ஐங்கரன் கதிர்காமநாதன் முதல் பிரதியை திரு. தம்புசிவா அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார். மலேசிய எழுத்தாளர்களுக்கும் 'தாயக ஒலி' பொங்கல் மலர் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன. அட்டாளைச்சேனை எஸ்.எல். மன்சூர் எழுதிய 'எரிகிறது பாலஸ்தீனம்' நூல் மேடையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டு பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன. தாஸிம் அகமது எழுதிய 'கண் திறவாய்' கவிதை நூலும் 'ஒளி அரசி' சஞ்சிகைப் பிரதிகளும் மலேசிய எழுத்தாளர்களுக்கும், வருகை தந்திருந்தவர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

விருது வழங்கும் விழாவில் திரு தம்புசிவாவுக்கு அவர் ஆற்றி வருகின்ற தமிழ்ப்பணிக்காக தமிழ்மணி விருதும் எனக்கு (தாஸிம் அகமது) வலம்புரி கவிதா வட்ட ஸ்தாபகத் தலைவர் என்ற ரீதியில் கவிமணி விருதும் வழங்கிக் கௌரவித்தனர். மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு இராஜேந்திரனும் கனடா படைப்பாளிகள் உலகத் தலைவர் திரு. ஐங்கரன் கதிர்காமநாதனும் உலகத் தமிழ் எழுத்தாளர்கள் ஒன்றுபட்டு தமிழ் மொழிக்காகவும் அதன் மேம்பாட்டுக்காகவும் உழைக்க முன்வரவேண்டும் எனும் கருத்துப்பட உரையாற்றினர்.

பெரும்பணச் செலவில் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்பெருவிழா எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது. எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் போது படைப்பிலக்கியத்துறை சார்ந்த அனைவரையும் பங்குகொள்ளச் செய்ய வேண்டும் என்பதை தடாகம் கலை இலக்கிய வட்டம் கவனத்தில் கொள்வது அவசியம். அப்பொழுதுதான் அந்த விழாவின் பெறுமதியைப் பலரும் புரிந்து கொள்ள முடியும். இரவு விருந்துபசாரத்தின் போது மலேசியத் தமிழ் எழுத்தாளர்களுடனும், கனேடிய படைப்பாளர் உலக உறுப்பினர்களுடனும், நம் நாட்டு எழுத்தாளர்களுடனும் நடைபெற்ற கலந்துரையாடல் மன நிறைவைத் தந்தது. ●


## 'தாயக ஒலி' சந்தா விபரம்

ஒரு வருடச் சந்தா - ரூபா 900 (அஞ்சல் செலவுடன்)

வெளிநாடு - $30(U.S), £ 20(U.K)

உங்கள் தாயக ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

தொடர்பு :

திருமலை பாலா
(Thirumalai Bala)
London
07956486014

வங்கிக் கணக்கு விபரம்
T.Sivasupramaniam
A/C No : 8100086490
Commercial Bank
Wellawatte, Sri Lanka

# காலை வேளை கனிவுறும் நேரம்

அதிகாலை வேளை ஆழியில் ஆதவன் தோன்றும் நேரம்
மலர்கள் மலரும் வேளை மனதும் பூக்கும் நேரம்
துயிலெழுந்த வேளை தோய்ந்துலர்ந்தாடை கட்டும் நேரம்
அயலவரும் துயிலெழும் வேளை சேர்ந்து ஆலயம் செல்லும் நேரம்

கோழிகூவும் வேளை குருவிகள் கீச்சிடும் நேரம்
ஆழியும் அமைதி கொள்ளும் வேளை மீனவரும் கடலில் செல்லும் நேரம்
காராளர் ஏர்பூட்டும் வேளை கோதையர்கள் கஞ்சி கொண்டுவரும் நேரம்
பாரெல்லாம் துயிலெழும் வேளை பாவையர்கள் முன்துயிலெழும் நேரம்

துவண்டெழும் வேளை கல்வி கற்கும் காலை நேரம்
காலைப் பொழுது உதயமாகும் வேளை கயல் மீன்கள் துள்ளிக் குதிக்கும் நேரம்
கறவைகள் கண்விழித்த வேளை பால் வழங்கும் நேரம்
பாடசாலை துவங்கும் வேளை மாணவர்கள் பாடம் கற்கும் நேரம்.

காலைப்பொழுது வேளை கடமை செல்லும் நேரம்
கருமுகில்கள் கூடும்வேளை மழை பொழியும் நேரம்
கன்னியரும் காளையரும் கனிவுறும் வேளை காணத் துடிக்கும் நேரம்
இருளகலும் வேளை இதயநிலா உதயமாகும் நேரம்.

கோலம் போடும் வேளை கோதை கீறும் நேரம்
பாலன் துயிலெழும் வேளை அன்னை பால் வழங்கும் நேரம்
மாலைப்பொழுது வேளை மங்கை திருவிளக்கேற்றும் நேரம்
வேலைவிட்டு வரும்வேளை மனைக்கொடி உணவு படைக்கும் நேரம்.

குயில் கூவும் வேளை மஞ்ஞை தோகை விரித்தாடும் நேரம்
மந்தி அலக்காய்ப் பாயும் வேளை யானை வரும் நேரம்
மணியோசை கேட்கும் வேளை பூசைகள் நடைபெறும் நேரம்
கைதட்டும் வேளை பூசைகள் முடிவுறும் நேரம்.

கலாபூஷணம் த.சிதம்பரப்பிள்ளை,
திருகோணமலை.

# வாழ்க்கை என்னாச்சி

காலம் கெட்டுப் போயாச்சி – நாம்
கவலைப்பட வேண்டியாச்சி;
பாவப்பட்ட பாவியாக – ஞாலம்
பரந்து திரிய வேண்டியாச்சி.

அண்ணன் தம்பி உறவுகள் – குடும்ப
சொத்தால் அழிந்து போயாச்சி; சாதி
சண்டை யாலே பகை – உலகத்தை
ஆட்டி படைச்சலாச்சி.

பெற்றோரை மதித்து போற்றி – அந்த
உயர்ந்த காலம் என்னாச்சி;
கற்றோரை சான்றோன் எனதுதித்த –
அந்தக் காலம் மலையேறியாச்சி.

ஒன்றுபட்டு உழைத்து சேகரித்த –குடும்ப
சொத்தெல்லாம் வீணாச்சி;
போட்டி பொறாமை கொண்ட உறவால்
வந்த வினையாச்சி.

பாட்டு பாடி பணம் சம்பாதித்த
பண்பட்ட காலம் முடிவாச்சி
உண்டு உறவாடி உறவுகொண்ட
உன்னத காலமும் என்னாச்சி.

கடிதம் எழுதி காதல் புரிந்த – இளமை
கனிந்த காலம் என்னாச்சி
படித்த பாடங்கள் சொன்ன
நல்லொழுக்க பண்பு என்னாச்சி.

பெற்றோர் சொன்னதை தட்டாமல்
கரம்பிடித்த காலம் மண்ணாச்சி
எஸ்.எம்.எஸ். பண்ணி இல்லறம் புகும்
இந்தக் காலம் வந்தாச்சி.

சீதனக் கொடுமையினால் – குடும்பங்கள்
சீரழிந்த நாளும் போயாச்சி
உழைப்பு மூலம் உயர்வடைந்த
நல்ல உள்ளங்களும் வந்தாச்சி .

நாமிருவர் நமக்கிருவர் என்றிராது –
நல்ல குடும்பமாய் வாழ்ந்திடுவாய் – தமிழா
நாளும் பொழுதும் நலமாக வாழ
என்றும் போற்றி மகிழ்வாச்சி.



உடப்பூர்
வீரசொக்கன்.

# பூகோள தினம்

பூமி மாசுபடுதலைத் தடுக்கும் உன்னதம் மிக்க நோக்கினைக் கொண்டு 1969இல் யுனெஸ்கோ நிறுவனத்தின் பரிந்துரைக்கு அமைவாக 1970 தொடக்கம் ஏப்ரல் 22ஆம் திகதியை பூகோள தினமாக உலக நாடுகள் கொண்டாடி வருகின்றன.

மனித சமுதாயத்தின் தவறான செயற்பாடுகள் காரணமாகவே பூமி மாசுபடுத்தப்படுவதாக புவிச் சரித வல்லுநர்கள் காலத்துக்குக் காலம் எடுத்துக்கூறி வந்தபோதிலும் எவரும் அக்கறை கொள்வ தாகத் தெரியவில்லை. மனித சமுதாயத்தின் அழிவுக்கு மனிதனே காரணமாக இருக்கின்றான். இந்த நிலையில் இருந்து மாறி பூமி மாசுபடுதலைத் தடுக்க எல்லோரும் தம்மாலான பங்களிப்பை வழங்க வேண்டும்.

# நாங்களும் வாழ வேண்டும்

உடலுழைய உழைத்து.... எலும்பும் தோலுமாகி,
உலகிலுயிர் வாழுங் காலமதை மிகச் சுருக்கி,
கடன் தனுசுடன் கன ஈறல்களையும் சுமந்த
கட்டையாகிச் சுடலையிலடைந்ததே சரித்திரம்...

அடித்தடமே படியாத அடர் வனத்துள்
அடித்த கொட்டிலிலும் கோழிக் கூட்டினிலும்
குடியிருந்த காலமிருந் திற்றை வரைக்கும்
கொஞ்சமும் நெஞ்சம் நிம்மதி கண்டதில்லை...!

அந்நாள் போலிந் நாளும்... துயரப்படுகின்றோம்...
அன்றாடம் ஏக்கப் பெருமூச்சே விடுகின்றோம்...
எந்நாளிலெங்களைப் பீடித்த பீடைகள்
இல்லாமல் தொலையப் போகுதோ தெரியவில்லை...!

தின்பார்க்குத் தேன் தினை பிரட்டி யெடுத்துத்
தீத்திப் போட்டுத் தீயும் வெறு வயிறோடு,
திண்ணையில் (விதி) யெனச் சுருளுவதே சீலமாச்சி...
தோட்டத் தொழிலாளர்கள் கேட்டு வந்த வரமாச்சி...

ஓயாமல் நாட்டுக்காய்) உழைக்கும் நாங்கள்
ஊதியம் கொஞ்சம் கூட்டிக் கேட்டால்...
'தேயிலை விலை வீழ்ச்சியடைஞ்சி போச்'சென்று
தேவையற்ற கதையளந் தெழும்புகின்றார்கள்.

அச்சயனின் பாரா முகமொரு பக்கம்... இயற்கை
அனர்த்தங்களின் கோர முகமொரு பக்கம்...
மீட்சியென்பதே கிடையாது....! இதனிடையே குளவிகளும்
மினக்கெட்டு வந்தெங்களைக் கொட்டுதொரு பக்கம்....

அடி வேரும் கிண்டிப் பிடுங்கி யெடுத்து
அகலிடம் ஆக்கிய மலையக மண்ணில்
குடியிருக்கத் துண்டுக் காணியும் சொந்தமில்லை!
கொடுமைகளுக்கெல்லாம் ஒரு அந்தமில்லை.

தேயிலையால் தேறிடும் தேட்டமெல்லாமிவர்களின்
தேவைகள் நிறைவேறவே போதுமான தாகுது....
தேயமது தேயத்தேய மாயும் தொழிலாளர்களின்
தேவைகள் நிறைவேறவோ போதாமையாகுது ...

எங்களின் நாட்டவர்களே! நலம் பாடற்றவர்களாக,
நடைப் பிணங்களாக, நாங்களேன் வாழவேண்டும்...?
எங்களுக்கு மட்டுமேனிந்த ஒர வஞ்சனை...?
இதனால் சுமக்கின்றோம் பார நெஞ்சினை!

சொந்தமான தனிவீடு வளவு வாசல்களென்று
சுற்றிப் பார்த்து மகிழ்ச்சி கொண்டிங்கே
எந்தக் குறைகளுமில்லாமல் நாங்களும்
எல்லாமும் பெற்றுச் சுகவாழ்வு வாழவேண்டும்!

கலைக்கொழுந்தன், கல்முனை.

## நகைச்சுவைக் கதைகள்

### எங்கோ கேட்டவை (12)

### "இரத்தம்"

ஒரு கோடீஸ்வர வெள்ளக்காரருக்கு குறிப்பிட்ட அரிதான 'குருப்' இரத்தம் அவசர அவசரமாகத் தேவைப்பட்டது. உடனே பத்திரிகையில் விளம்பரம் செய்தார் – எவ்வளவு தொகையாயினும் தருவதாக. அரிதான 'குருப்' என்பதால் ஒரேயொரு விண்ணப்பம் வந்தது. அதுவும் தமிழரின் விண்ணப்பம்.

இரத்தம் சோதிக்கப்பட்டது. வைத்திய அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டது. இரத்தம் கொடுக்கப் பட்டது. 10,000 யூ.எஸ். டாலர் எமது தமிழருக்குக் கொடுத்தார் அந்த வெள்ளைக்காரக் கனவான்.

மூன்று மாதங்கள் சென்றன. அதே வியாபாரி. அதே இரத்தம். எமது தமிழருக்குக் கொடுக்கப்பட்ட தொகையோ 5000 டாலர்.

இன்னமும் 6 மாதங்கள் சென்றன. மீண்டும் வியாபாரி அதே இரத்தம். வேறு ஒருவரிடமும் அந்த 'குருப்' இரத்தம் இல்லாததால் அந்த குறிப்பிட்ட தமிழரே வந்தார். இரண்டாயிரம் யூ.எஸ்.டாலர் கொடுக்கப்பட்டது.

சற்றுக் காலம் சென்றபின் இரத்தம் கொடுக்கத் தமிழர் தாமாகவே சென்றார். வெள்ளைக்காரனோ ஒரு சதமும் கொடுக்கவில்லை.

எம்மவர் டாக்டரை அணுகி "என்ன இது? 10,000 டாலரிலிருந்து தற்போது ஒரு சதமும் தரவில் லையே? என்ன விடயம்?" என்று வினாவினார். டாக்டர் கூறிய பதிலினால் எம்மவர் மயக்கமடைந்தார்.

"நீங்கள் முதலில் கொடுத்தது ஒறிஜினல் தமிழ் இரத்தம். 10,000 கிடைத்தது. போகப்போக உங்கள் இரத்தம் அவருக்கேறி, உங்கள் இரத்தம் முழுக்க ஏறி உங்கள் பிறவிக் கஞ்சத்தனத்தால் இந்த நிலைமை" என்றார்.

- இணுவை ரகு

கட்டுரை

# தமிழ் இலக்கியத்தில் அறிவியல்



தமிழ் இலக்கியம் என்றதும் கற்றவர்கள் உள்ளத்தில் கூட பக்தி உணர்ச்சியே (Devotional Feeling) தலை எடுக்கும். ஆனால் காரைக் கால் அம்மையார் காலத்தில் ( கி.பி.5ம் நூற்றாண்டு ) கால் கொண்டு பின் பல்லவர் ஆட்சியில் ( கி.பி.4 முதல் 9 வரை ) தமிழ் உலகம் முழுவதையும் தனது பாதத்தின் கீழ்க்கொண்டு வந்த வட இந்திய வைதீக பக்தி உணர்ச்சி கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் தனக்கே உரிய தனித்துவத்தோடும் மிடுக்கோடும் வாழ்ந்த தமிழரின் வாழ்க்கை முறையைத் தலைகீழாக மாற்றி அமைத்தமையைப் பெரும்பாலான சங்க இலக்கியங்களின் பொருளடக்கத்திற்கும் ( Contents ) அவற்றுக்குப் பின் இயற்றப்பட்ட வைதீக சமய இலக்கியங்களின் பொருளடக்கத்திற்குமிடையே காணப்படும் பெரும் வேறுபாடு புலப்படுத்தும்.

இயற்கையோடு ஒன்றி அதன் வளத்திலும் வனப்பிலும் மிகுந்த ஈடுபாடு காட்டி நிலத்தின் தன்மைக்கேற்ப அதனை நான்கு வகையாகப் பிரித்து பெயர் சூட்டி (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்) வீரத்தையும், காதலையும் தம் விழுமியமாகக் கொண்டு வாழ்ந்த சங்க காலத் தமிழர்கள் சிலர் தம்மிடம் இயல்பாக இருந்த நுண்மாண் நுழைபுலத்தைப் பயன்படுத்தி தாம் வாழும் உலகம் உட்பட ஏனைய சடப்பொருள் ( Materials ) பலவற்றையும் ஆராயும் விஞ்ஞானிகளாகத் திகழ்ந்தமைக்கு தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் என்பன தக்க ஆதாரங்களாக அமையும்.

சடப்பொருள் பற்றிய ஆய்வு, பொருள் முதல் வாதம் என்று சொல்லப்படும் அதேநேரம் இந்த உலகமும் பொருள்களும் நிலையற்றவை (மாயை) என்றும் அது காரணமாக அவற்றின் சிருட்டி கர்த்தாவாகிய பரம்பொருள் ஒன்றே உண்மையானது என்றும் ஆத்தீகர் கொண்ட எண்ணமே "கருத்து முதல் வாதம்" என அறியப்படலாயிற்று. ஆனால் இக்கருத்து முதல் வாதம் விஞ்ஞான நோக்குக்கும், அபிவிருத்திக்கும் உகந்தது அன்று என்பது வெளிப்படை என்னும் பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் கருத்தினை ( ஒப்பியல் இலக்கியம் பக்கம் 139) இச்சந்தர்ப்பத்தில் இங்கு முன்வைப்பது பொருத்தம் ஆகும்.

கருத்து முதல் வாதத்தை கொண்ட வட இந்திய இதிகாச, புராணங்களைப் (மொழியில் அடிப்படையில் லத்தின், கிரேக்க மொழிகளுக்கும், சமஸ்கிருதத்திற்கும் இடையே உள்ள தொடர்பு, கதை அம்சங்களில் கிரேக்க, உரோம இதிகாசங்களுக்கும் வட இந்திய புராண இதிகாசங்களுக்குமிடையேயும் இருப்பது கவனிக்கத்தக்கது ) பக்க பலமாகப் பெற்றிருக்கும் வைதீகத்தைச் சங்க காலத் தமிழர்கள் பொருட்படுத்தாமைக்கு சடப் பொருள் பற்றிய ஆய்வில் அம்மக்கள் காட்டிய ஆர்வமும் அக்கறையும் முக்கிய காரணிகளில் ஒன்றாகும்.

பழந்தமிழர்களுக்கிருந்த இவ்வாய்வுணர்வே இன்றைய மேலைத்தேயவர்களைப் போல அவர்களை ஆகாயத்தை ஊடுருவிப் பார்க்கச் செய்தது. இவ்வுணர்வு இருபதாம் நூற்றாண்டின் தமிழ் கவிதையின் தந்தை என்று போற்றப்படும் மகாகவி பாரதிக்கும் இருந்தமையை அவன் படைத்த,

*"வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்*
*சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்"*

என்னும் பாடல் அடிகள் வெளிப்படுத்தும்.

சங்க காலத் தமிழரின் ஆய்வுள்ளம் வானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அதேநேரம் வட இந்திய வைதீக சமயிகள் தலை குனிந்து தியா

னத்தில் ஈடுபட்டவாறு "இல்பொருள்" ஆன்மா வைத் தமக்குள் தேடிக் கொண்டிருந்தனர். இச் செயற்பாடு, தமிழர்களும் அம்மக்களும் வெவ் வேறு சிந்தனைப் போக்குடையவர்கள் என்ப தையே எடுத்துக்காட்டும்.

இக்கட்டுரையைப் பொறுத்தவரையில் இது தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலான நூல்களில் உலகம் தோன்றிய விதம், அதன் வடிவம், இயக்கம், உயிர்களின் தோற்றம், நீரின் முக்கியத்துவம், மருத்துவம் என்பன தொடர்பில் காணப்படும் தமிழர்களின் அறிவியல் சிந்த னைகள் சிலவற்றையே வாசகர் முன்வைக்க முற்படுகின்றது.

தமிழ் மொழியில் தோன்றி முதல் நூல் என்று அறிஞர் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொல் காப்பியம் (கி.மு.3 ஆம் நூற்றாண்டு) இவ்வுல கம் நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆனது என்னும் உண்மையை,

*"நிலம், தீ, நீர், வளி, விசும் போடைந்தும்*
*கலந்து மயக்கம் உலகம் ஆதலின்"*
(மரபியல் 628)

என்று தெளிபடக் கூறும். இக்கூற்றினை அதன்பின் எழுந்த புறநானூறு என்னும் சங்க கால வரலாற்று இலக்கியம்,

*"மண் திணிந்த நிலனும்*
*நிலம் ஏந்திய விசும்பும்*
*விசும்பு தைவரு வளியும்*
*வளித்தலை இய தீயும்*
*தீ முரணிய நீரும் என்றாங்கு"*
*ஐம்பெரும் பூதத்தியற்கை* (பாடல் 2)

என்று உறுதிப்படுத்தும். இது போன்றே பதிற் றுப்பத்து என்னும் மற்றுமொரு சங்க இலக்கியம்,

*"நீர், நிலம், தீ, வளி, விசும் போடைந்தும்*
*அளந்து கடை அறியினும் அளப்பரும் குறையை*
*"செஞ்ஞாயிற்றுச் செலவும்*
*..........................................*
*சென்றளந்து அறிந்தோர் போல"* (பாடல் 30)

என்று தொல்காப்பியத்தைத் தொட்டு நிற்கும்.

ஐம்பூதங்களால் உருவான இந்த உலகம் தட்டையா அல்லது உருண்டையா என்னும் கேள் விக்கு மேலைத்தேசம் கிறிஸ்தோபர் கொலம்பஸ் (கி.பி. 1451 - 1506) காலத்திலேயே சரியான பதில் சொல்லவில்லை. ஆனால் உலகம் உருண்டை யானது என்னும் அறிவியல் உண்மையைத் தமிழர் சங்க காலத்திலேயே உணர்ந்திருந்த மையை,

*"இனிது உருண்ட சுடர் நேமி*
*முழுதும் ஆண்டோர் வழிக்காவல"*

என்று புறநானூறு (பாடல் 17) மிகத் தெளி வாக எடுத்துரைக்கும்.

மேலும் உலகின் வடிவினைக் குறிக்கும் விதத்தில் தமிழ் நூல்களில் பயன்படுத்தப்பட் டுள்ள மண்டலம், மண்டிலம், அம்பு, ஆழி, அண் டம் ஆகிய சொற்களுக்கு வட்டம், உருண்டை என்னும் பொருள் இருப்பதும் அதன் வடிவினை நிரூபிக்கப் போதுமானதாகும்.

உருண்டை வடிவான இந்த உலகம் சூரிய னில் இருந்து தெறித்து வீழ்ந்த ஒரு நெருப்புக் கோளம் என்றும் அது குளிர்வடைந்து மக்கள் வாழக்கூடிய நிலையை அடைய மிக நீண்ட காலம் ஆயிற்று என்றும் அறிவியலாளர் மூலம் அறிகின்றோம். இவ்வுண்மையைச் சங்க காலத் தமிழர் அன்றே அறிந்திருந்தனர் என்பதற்கு,

*"விசும்பு வீழ் கொள்ளியிற் பைம் பயிர்துமிப்ப"*

என்னும் குறுந்தொகைப் பாடல் அடி (189) ஆதா ரமாகும். அதேநேரம் "பரிபாடல்" இவ்விடயத்தை,

*"கருவளர் வானத்திசையிற் தோன்றி*
*உருவறிவாரா ஒன்றன் ஊழியும்*
*உந்து வளி கிளர்ந்த ஊழூழ், ஊழியும்*
*செந்தீச் சுடரிய ஊழியும் பனி யோடு*

*தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்*
*நுண்புழை வெள்ள மூழ்கியார் தரு*
*உள்ளீடாகிய இரு நிலத்தூழியும்"* (2)
என்று சற்று விரிவாக எடுத்துச் சொல்லும்.

மண்ணில் முதலில் புல்லும் ஏனைய தாவரங்களும் முளைத் தெழுந்த பின்பே மரங்கள் தோன்ற ஆரம்பித்தன என்பது அறிவியலாளர் முடிவு. இந்த உண்மையை "தொல்காப்பியம்" என்னும் முதல் தமிழ் இலக்கண இலக்கியப் பனுவல் *"புல்லும் மரனும் ஓறறிவினவே"* (மரபியல் 572) என்று குறிப்பிடும். இக்குறிப்பில் மரம் என்னும் சொல்லுக்கு முன்னால் புல் என்னும் சொல் தரப்பட்டமை அவை இரண்டிலும் புல் முந்தியது என்பதையே உணர்த்தும்.

தொல்காப்பியரின் மேற்படி கூற்றை அப்படியே ஏற்றுக்கொண்ட மாணிக்கவாசகர் (கி.பி 09ம் நூற்றாண்டு) அதனைத் தமது திருவாசகத்தின் ஒரு வாசகமாக்கி *"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி"* என்று பாடுவார்.

மனிதன் பிறப்பதற்கு முன்பு மண்ணில் முளைத்தெழுந்த புல், மரம், செடிகள் முதலான வற்றில் சில மருத்துவ பயன்மிக்கவை என்பதற்குச் சங்க இலக்கியங்கள், சித்தர் பாடல்கள் ஆகியவற்றில் ஆங்காங்கு சில ஆதாரங்கள் உண்டு. உதாரணத்திற்கு "மருந்து கொள் மரத்தின்" என்னும் புறநானூற்றுப்பாடல் (180) வேம்பு, முருங்கை, முருக்கை, ஆல், அரசு, நொச்சி முதலான மரங்கள் நினைவூட்டும்.

மேற்படி மரங்களில் வேப்பமரத்தின் பட்டை, இலை ஆகியவை வெய்யில் காலத்தில் மனிதருக்குத் தோன்றும் அம்மை (அம்மாள்) பொக்கணிப்பான், கூகைக்கட்டு ஆகிய நோய்களைத் தீர்க்கும் ஆற்றல் வாய்ந்தவை என்னும் உண்மையை நாட்டு வைத்தியர் மட்டுமன்றி, சாதாரண மக்களும் நன்கறிவர். ஆனால் இயற்கையாகவே இந்த மரத்தில் உள்ள மருந்து என்னும் சக்தியை "தெய்வ சக்தி" என்று மக்கள் நம்பும் பரிதாப நிலை உருவாக்கப்பட்டு அந்த தெய்வத்திற்கு வைதீகப் பெயரும் சூட்டப்பட்டு அது தொடர்பான சடங்குகளில் வேப்பிலைகள் (பத்திரங்கள்) பயன்படுத்தப்படும் வழக்கமும் ஆரம்பமாயிற்று. இதனால் வேப்பமரத்தில் தெய்வம் உறைகின்றது என்னும் நம்பிக்கை கிராமத்து மக்கள் மனதில் நீக்கமற நிறைந்தது. இத்தகைய நம்பிக்கையை ஆங்கிலத்தில் Pantheism என்பர்.

இந்த வரலாற்றை நன்குணர்ந்து கொண்ட தமிழகத்தின் பட்டுக்கோட்டை என்னும் கிராமத்தின் பகுத்தறிவுக் கவிஞர் கல்யாணசுந்தரம் அவர்கள்,

*"வேப்பமரத்தின் உச்சியிலே பேயொன்று*
*ஆடு தென்று*
*விளையாடப்போகும் முன்னே சொல்லி*
*வைப்பாங்க - உன்*
*வீரத்தை முளையிலே கிள்ளி வைப்பாங்க"*

என்னும் அருமையான ஒரு பாடல் எழுதி நம் அனைவரினதும் அறிவுக் கண்களை திறந்து வைத்தார்.

கவிஞர் தம் பாடலில் "அச்சம்" என்னும் பொருள் தரும் "பேய்" என்னும் சொல்லைப் பயன்படுத்தி மைக்கு வைதீகத் தெய்வங்கள் சில பயம் தரும் கோலத்தோடு தோன்றுவதும் ஒரு காரணம். அதேநேரம் பேய் என்னும் சொல்லுக்கு அறியாமை என்னும் பொருள் இருப்பதை யும் (உ+ம் - பேயன்) நாம் கவனத்திற் கொள்வோமாயின் கவிஞர் அச்சொல்லை சிறந்த மதி நுட்பத்தோடு பயன்படுத்தி "பேய்" பற்றிய நம்பிக்கை அறியாமையின் விளைவே என்று புலப்படுத்துவார்.

பாடசாலையில் பெரிதும் கற்காத பட்டுக்கோட்டையாரின் பெரும்பாலான கவிதைகளிலும், திரை இசைப்பாடல்களிலும் அறிவியல் ஒளி வீசுகின்றமைக்கு அவரது நீண்ட நெடிய தமிழ்ப் பாரம்பரியமும் ஒரு காரணம் எனத் துணிந்து கூறலாம்.

மரங்களின் பட்டைகள், வேர்கள், விதைகள் ஆகியவை மனித நோய்களுக்கான மருந்தாக பயன்படுத்தப்பட்ட காலத்தில் வாழ்ந்த திருவள்

ளுவர் என்னும் மெய்ஞானி அதிலிருந்து சற்று மாறுபட்டு ஒருவன் உணவை ஒழுங்காகவும், அளவோடும் உண்டால் அவனை நோய் அணு காது என்னும் உயர்ந்த கருத்தினை,

*"மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு*
*அருந்தியது*
*அற்றது போற்றி உணின்"*

*"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து*
*உண்ணின்*
*ஊறுபாடு இல்லை உயிர்க்கு"*

என்னும் குறள்கள் ஊடாக உறுதிப்படக் கூறக் காணலாம்.

இனி உலகில் வாழும் உயிர்கள் தொடர்பில் நமது கவனத்தைத் திருப்பலாம். உயிர்கள் இந்த மண்ணில் முதலில் எவ்வாறு தோன்றின என்னும் கேள்வி எழுப்பப்படுமேயானால் அதற்கு ஆத்திகரின் பதில் "கடவுள்" என்பதாகவே இருக்கும். ஆனால் கி.மு.7ம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் வாழ்ந்த மெய்யியல் ஞானி தாலஸ் ( Thalas ) உயிர்களின் தோற்றத்திற்கான முதன்மைக் காரணியாக தண்ணீரையே குறிப்பிடுவார். (Water is the first Principal of all things ) தாலஸின் மேற்படிக் கருத்தினை உயிரியல் விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொண்டிருப்பதை நாம் அறிவோம்.

உலக ஞானியரில் ஒருவரான பொய்யா மொழிப்புலவர் திருவள்ளுவரும் *"நீர் இன்று அமையாது உலகு"* என்றும் *"பசும்புல் தலை காண்பு அரிது"* என்றும் கூறி தாலஸின் உயிரியல் கோட்பாட்டிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளமையையும் காண்கின்றோம்.

இன்றைய அறிவியல் யுகத்தில் அறிவியலாளர்களால் ( Scientists ) ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஆன்மா ( லத்தின் மொழியில் இது Anima எனப்படும் ) என்னும் தனி ஒரு பொருளில் பரிபூரண நம்பிக்கை வைத்திருக்கும் ஆத்தீகரால் பெரிதும் மதிக்கப்படும் புராணங்களில் காணப்படும் *"பரந்தாமன் பள்ளி கொள்ளும் பாற்கடல்"* கலைமகளும் திருமகளும் உறையும் வெண்தாமரை, செந்தாமரைக் குளங்கள் ஆகியவையும் நாராயணன், நாராயணி, ( நாரம் - நீர் ) கங்காதேவி முதலான பெயர்களும் உயிர்களின் உற்பத்தியை உணர்த்தும் அடையாளங்களாகவே கொள்ளப்படவேண்டும்.

இறுதியாக இலக்கியமும் அறிவியலும் இரு வேறு துறைகளாக இருப்பினும் தம் ஆழ்ந்த , பரந்த தமிழ்ப் புலமையைப் பயன்படுத்தி அறிவியல் சம்பந்தப்பட்ட விடயங்களை இலக்கியங்களில் பதிவு செய்துள்ள புலவர் பெருமக்கள் என்றென்றும் நம் நெஞ்சில் இருக்க வேண்டியர்கள் என்பதை எடுத்துரைக்க வேண்டுமா, என்ன? ●

வாகரை வாணன்

---

**சமகால இலக்கிய நிகழ்வு**

## தண்ணீரூற்றில் தாயக ஒலி

யுத்த காலத்தில் நலிவடைந்து போயிருந்த இலக்கிய முயற்சிகளை மீண்டும் புதுபிக்கும் நோக்கமாகவும், தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இலக்கிய சஞ்சிகைகளை அறிமுகம் செய்யும் திட்டத்தை ஓய்வுபெற்ற வரி மதிப்பாளரும், இலக்கிய கர்த்தாவுமாகிய கா.தவபாலன் அவர்கள் 18.10.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை தனது தண்ணீரூற்று இல்லத்தில் ஆரம்பித்து வைத்தார். அரசாங்க உத்தியோகத்தர்கள், ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பெருந்தொகையான இலக்கிய ஆர்வலர்கள் இந்நிகழ்ச்சியிற் கலந்துகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவிப்பதோடு தாயக ஒலி உட்பட ஏனைய சஞ்சிகைகளையும் ஆர்வத்துடன் பெற்றுக் கொண்டார்கள். இன்று ஈழத்தில் வெளிவந்து கொண்டிருக்கின்ற இலக்கிய சஞ்சிகைகளில் 'தாயக ஒலி' தனித்துவமான போக்கினைக் கொண்டிருப்பது வரவேற்புக்குரியது என்ற கருத்தினைப் பலரும் எடுத்துக் கூறினர்.

- தவபாலன்.

# Tooting Tuition



58A Upper Tooting Road
London SW17 7PB
020 8767 4698
M: 07956 309 426
Email: tuitionforall@hotmail.co.uk

TOOTING TUITION CENTRE has twenty-five years experience in primary tuition and preparation for 11+ and independent school entrance examinations. Our students have gone to win places and some full scholarships at:

| | | |
|---|---|---|
| Whitgift | Old Palace | Wimbledon High |
| Kings College (Wimbledon) | Kingston Grammar | Tiffin Girls School |
| Wallington Grammar | Non Such High School | |

Tuition for GCSE, As and A/L in Maths, Science and English. The majority of our students have gone on to achieve A and A* grades and have been at the top of their classes.

We coach for London, Cambridge and IGCSE Examinations. We take into account the government's policy to make intermediate examination more challenging and competitive with the rest of the world and we prepare our students to meet that challenge.

Provide advice and counselling on educational career planning. Also on University choice, course options and interviews. Structuring Educational plans to fulfil employment aspirations.

Tuition Hours:
Tuesday - Friday 4pm - 8pm
Saturday & Sunday 10am - 5pm

**Head of English:** Mr S L Airey MA (Cantab) LLB LLM
**Head of Science:** Mr R Ganeshalingam BSc BSc (Eng) MSE [Constr Eng) CEng MICE
**Principal:** Mr R Mahalingam F(IManf Eng) MBIM




வீரகேசரி வார வெளியீட்டில் ஐம்பத்துநான்கு கிழமைகள் தொடர் நவீனமாக வெளிவந்த வவுனியூர் இரா.உதயணனின் 'வலியின் சுமைகள்' நாவல் இலங்கைத் தமிழ் இலக்கியப் பேரவையின் வெளியீடாக வெளிவந்துள்ளது. வன்னி மக்களின் வலியைச் சுமந்துவரும் இந்த நாவலின் அறிமுக விழா இலண்டனில் நடைபெறவுள்ளது. அதேவேளை இந்த நாவல் சிங்களம், ஹிந்தி, மலையாளம் ஆகிய மொழிகளிலும் வெளிவந்துள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.


Devi Jewellers
Devi Forex (Pvt) Ltd.
131
Buyers & Sellers of Bullion
(Gold, Silver, Platinum & Palladium)
Diamonds, Gems & Cubic Zirconium
131, Sea Street,
Colombo 11,
Sri Lanka.
Tel : 2388757,2388960
2395001/5
Fax : 2327101
E-Mail : info@devijewellers.lk
AUTHORISED MONEY CHANGER
WESTERN UNION MONEY TRANSFER
CUSTOM MADE JEWELLERY
No Other Branches.
WESTERN UNION
MONEY TRANSFER


Nallur Kumaran Textiles
Since 2000
New Sarees Collection Every Month from Bombay
Open
Mon-Sat 10am- 7pm
* திருமணக் கூறைகள்
* பூப்புனித நீராட்டு விழாப் பட்டு புடவைகள்
* Sequins Sarees
* Half Sarees
* நவநாகரீக ஆடைகள்
* பட்டுவேட்டிகள், சேட்டுகள்
* Childrens Party Wear
* ஏகாந்த வீணை, மிருதங்கம், தபேலா, சுருதிப் பெட்டி
* பரதநாட்டிய Costumes and Costume Jewels
Saree blouses உடனுக்குடன் தைத்துக் கொள்ளலாம்
1023-1025 London Road, Thornton Heath, Surrey CR7 6JF
Tel: 020 8684 1026 Mob: 07960 761 606
www.nallurkumaran.co.uk

சிறுவர் கவிதை

# கல்வி கற்போமே!

கல்விக் கூடம் சென்றிடுவோம்!
கலைகள் எல்லாம் பயின்றிடுவோம்
கல்வி என்பது கரையில!
கற்றுத் தருவோர் இறைவரே!

அறிவு ஞானம் மட்டுமல்ல!
அனைத்து நல்ல பண்புகளும்!
அறிந்து நாமே பெற்றிடுவோம்!
அகிலம் சிறக்க வாழ்வோமே!

அன்னை பிதாவை போற்றிடுவோம்!
ஆசான் அறிவுரை பெற்றிடுவோம்!
உன்னை உயர்த்திடும் "உயர்த்தி" அவரே!
உணர்ந்து பாதம் பணிவோமே!

வாழ்வில் உயர்த்திடும் வழிகாட்டி!
வழியில் தொடர்ந்து வருவதில்லை!
தாழ்விலும் பெருமை அடைவாயே!
தங்க மகனே வாழ்ந்திடுவாய்!

-மழுபுலவர்

---

சிறுவர் சின்னக் கதை

# அகங்காரத்தைத் தவிருங்கள்

ஒருமுறை சங்கராச்சாரியார் என்னும் சந்நியாசம் பூண்ட முனிவர் தனது சீடர்களுடன் இமாலயத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அவர்களுடைய வழியில் அலக்நந்த என்னும் மிகப் பெரிய ஆறு குறுக்கிட்டது. அவருடைய சீடர்களில் ஒருவர் பின்வருமாறு கூறி சங்கராச்சாரியரைப் புகழத் தொடங்கினார். "ஆச்சாரியார் அவர்களே நீங்கள் எவ்வளவு ஞானத்தைக் கொண்டிருக்கிறீர்கள்? எங்களுக்கு முன்னால் ஓடிக் கொண்டிருக்கும் இந்த அலக்நந்த ஆற்றைப் பாருங்கள். அது எவ்வளவு புனிதமானதும் சக்தி நிறைந்ததுமான ஓட்டத்தைக் கொண்டிருக்கிறது. ஆனால் இதை உங்களுடைய ஞானத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அது ஒன்றுமில்லை. உங்களுடைய ஞானம் கடலைப் போன்று மிகப் பெரியது" என்றார்.

இதைக் கேட்டதும் சங்கராச்சாரியார் அவருடைய கையில் இருந்த தடியை நீருக்குள் விட்டார். சிறிது நேரத்தின் பின் அதனை வெளியில் எடுத்தவர். அதனை தன்னுடைய சீடர்களுக்குக் காட்டி "இதில் ஒட்டியிருக்கும் தண்ணீரைப் பார்த்தீர்களா? இது ஒரு துளிதான்." சங்கராச்சாரியார் சிரித்துவிட்டு மீண்டும் கூறினார். "நான் என்னுடைய ஞானத்தைப் பற்றி என்ன கூறமுடியும்? அது இவ்வளவு பெரிய ஆற்றில் இருந்து எனது தடியில் ஒட்டியிருக்கும் சிறிதளவு தண்ணீரைப் போன்றதுதான்." என்றார்.

சங்கராச்சாரியாரைப் போன்று எவ்வளவோ படித்த ஒருவர் தனது ஞானத்தைப் பற்றி இவ்வாறு கூறினால், நாங்கள் எவ்வளவு எங்கள் குணங்களைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்ள முடியும்?

மாணவர்களே நாங்கள் கொண்டிருக்கும் நற்குணங்களைப் பற்றி நாம் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடாது. நாங்கள் கல்வியில், குணங்களில், செயல்களில் எந்தளவுக்கு உயர்கிறோமோ அந்தளவுக்குப் பணிவும் நமக்கு வரவேண்டும். சங்கராச்சாரியார் எவ்வளவு பெரிய ஞானி, அவரைப் பற்றிப் புகழ்ந்த போது அதை ஏற்றுக் கொள்ளாமல் தன்னைச் சிறுமைப்படுத்திக் காட்டுகிறார். அதை ஏற்றால் அவரிடம் கர்வம் ஏற்பட்டுவிடும் என்பதை அவர் அறிந்திருந்தார். அதை தவிர்த்துக் கொண்டாலே நாம் மேற்கொண்டு முன்னேற முடியும்.

- முகில்வண்ணன்

சிறுவர் கதை

க.ஹேமலதா



# தாத்தாவின் தலைப்பாகை

அந்த ஊரில் இருக்கும் ஒரு பெரியவர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான தலைப் பாகை அணிந்து கொண்டு ஊரைச் சுற்றி வரு கின்றமை வழக்கம்.

சிறுவர்கள் தாத்தாவின் தலைப்பாகையைப் பார்த்து வேடிக்கையாகப் பேசுவார்கள், அத னைப் பற்றிக் கதைப்பார்கள்.

இப்படியிருக்க ஒருநாள் அவர் என்றும் இல் லாதவாறு ஒரு நீண்ட தலைப்பாகையை தலை யில் அணிந்து கொண்டு வீதியினால் நடந்து வந்து கொண்டு இருந்தார். அப்பொழுது பாலா "தாத்தா எவ்வளவு பெரிய தலைப்பாகையை அணிந்து இருக்கின்றார் பாருங்கள்" என்று மற் றைய நண்பர்களுக்குக் கூறினான். எல்லோரும் ஆச்சரியமாகத் தாத்தாவின் தலைப்பாகையைப் பார்த்தனர்.

பாலா தாத்தாவின் தலைப் பாகையில் ஏதே அசைவினைக் கண்டான். "தாத்தா, தாத்தா உங் கள் தலையில் ஏதோ இருக்கின்றது" என்று பாலா கூறத் தொடங்க அது புதிய வடிவமான தலைப் பாகைதான் என்று கூறிச் சென்றார்.

பாலா சொல்ல வந்ததை சொல்லவிட வில்லை.

பாலா தாத்தாவின் தலைப்பாகையை மீண் டும் உன்னிப்பாக கவனித்தான். தாத்தாவின் பின்தொடர்ந்து சென்றான். சிறிது தூரம் சென்ற பின் 'கீச் கீச்' என்ற சத்தம் கேட்டது. தாத்தா அங் கும் இங்கும் பார்த்தார். என்ன சத்தம் எங்கிருந்து வருகின்றது? பின்னால் பாலா வருவதைக் கண் டார். " நீதான் கீச் கீச் என்று சத்தம் போட்டியா?" என்று கேட்டார். "இல்லைத் தாத்தா நான் இல்லை."

மீண்டும் சத்தம் கேட்டது.

அப்பொழுது தான் பாலா சொன்னான். " இது உங்கள் தலையில் இருந்துதான் வரு கின்றது என்று நினைக்கிறேன்" என்றான்.

"என்னுடைய தலையில் தலைப்பாகை தான் இருக்கின்றது. எப்படிச் சத்தம் வரும்?" என்றார்.

"உங்கள் தலையில் ஏதே அசைவதை நான் பார்த்து இருக்கின்றேன். அது தான் சத்தம் போடுகின்றது என்று நினைக்கின்றேன்."

"நீ என்னுடைய தலைப்பாகையை கழற்று வதற்குத்தான் இப்படிச் செல்லுகின்றாய்." என்று கூறி தாத்தா மீண்டும் நடக்கத் தொடங்கினார். சிறிது தூரம் சென்றதும் மீண்டும் கீச், கீச் என்ற சத்தம் வந்தது.

பாலா சொல்வதைப் போல் ஏதாவது தன்னு டைய தலைப் பாகையில்தான் இருக்கின்றதோ என்று தலைப் பாகையைக் கழற்றி எறிந்தார். "ஆகா... ஆகா... தாத்தாவின் தலை மொட்டை" என்றான் பாலா.

தலைப் பாகையில் இருந்த அணில் துள்ளித் குதித்து ஓடியது.

**உங்கள் விருந்து**

**தனித்துவமான இதழ்**

அழகுத் தோற்றப் பொலிவுடனான 'தாயக ஒலி' கிடைத்தது. படித்ததும் பரவசமடைந்தேன். கவிதைகள், கட்டுரைகள், சிறுகதை, நூல் அறி முகம் என இலக்கியத்தின் எல்லாச் சுவைகளை யும் சுமந்து வெளிவரும் 'தாயக ஒலி' தாயக மண் ணின் தனித்துவமான இதழ் என்னும் பெருமை யைப் பெற்றுள்ளது. அதன் இலக்கியப் பணி என் றும் தொடர வேண்டும் என்பதே புலம்பெயர்ந்து வாழும் என்னைப் போன்றோரின் எதிர்பார்ப்பா கும். நல்வாழ்த்துக்கள்.

நன்றியுடன்

ஈழுபாரதி - பிரான்ஸ்

# தனிமையில் இனிமை நலம்...

கலாநிதி
குமாரசாமி சோமசுந்தரம்



"தனிமையிலே இனிமை காணமுடியுமா?" என்னும் வினாவுக்கு, "முடியும்" என்றும், "முடியாது" என்றும் விடை கூறுகின்ற இரண்டு தரப்பினர்கள் உள்ளனர். உண்மையில், தத்தம் மன நிலை, மனோ பாவம் எவ்வாறு அமைகின்றதோ, அதற்கேற்ப விடையும் அமைகின்றது. ஆன்மீகவாதிகள், தனிமையிலே இனிமை காணமுடியும் என்கிறார்கள். மாறாக உலகியல் வாதிகள், அது முடியாத காரியம் என்று அடித்துக் கூறுகின்றார்கள். "இனிது, இனிது, ஏகாந்தம் இனிது" என்கிறார் ஔவைப் பிராட்டியார்.

வாழ்க்கை வாழ்வதற்கே; அதைக் கண்டு பயந்து ஓடுவதற்கல்ல என்றும் வாழ்க்கை என்பது ஒரு சவால்; அதனை எதிர்கொண்டு சமாளித்தும் வெற்றிகொண்டும் வாழ்வதிலேயே இனிமை, இன்பம் என்பவற்றை அடைய முடிகிறது என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மனிதர்கள் தனிமையை நாடுகின்றனர்? தோல்விகள், ஏமாற்றங்கள், மன அழுத்தங்கள் ஏற்பட்ட வேளைகளில்; பிறரை நெற்றிக்கு நேரே முகங்கொடுக்க விரும்பாமல்; அவர்களைத் தவிர்ப்பதற்கும், மன ஆறுதல் பெறுவதற்கும், தனிமையை நாடுகின்றனர். வாய்விட்டு அழுது தமக்கேற்பட்ட துன்பத்தையோ, கவலையையோ தணிப்பதற்குத் தனிமையை விரும்புகின்றனர். "என்னைக் கொஞ்ச நேரம் தனிமையில் விடுங்கள்" என்று நண்பர்கள், உற்றார், உறவினர்களிடம் சலித்துப் போய்க் கூறுபவர்களைக் கண்டிருக்கிறோம்.

"வாய்விட்டு அழவேண்டும்" போலத் தோன்றினால், அழுதுதான் தீரவேண்டும். அது தனிமையில்தான் நிகழவும் வேண்டும். அப்போதும் மனப்பாரம் தணியவில்லையானால், பாரதூரமான பாதக விளைவுகள் ஏற்படக்கூடும். இப்படியான சூழ்நிலைகளிலேயே புகைத்தல், மது பாவனை, போதைப் பொருள் பாவனை என்பவற்றை நாடவும் பின் நிரந்தரமாக அவ்வாறான பழக்க வழங்கங்களுக்கு அடிமையாகவும் நேரிடுகிறது. இத்தகைய சூழ்நிலைகள் ஏற்படும் போது, நெருங்கிய உறவினரோ, நண்பரோ அவரை நிழல் போலத் தொடர்ந்து அவரின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து, தேவையானால் உளவியல் ரீதிச் சிகிச்சைகளைத் தகுந்த உளவியல் மருத்துவர் மூலம் அவருக்குப் பெற்றுக் கொடுத்து அவரை இயல்பு நிலைக்கு மீளவும் கொண்டு வரச் செய்ய, உதவ வேண்டும். அதனை ஒரு சமூகக் கடமையாகக் கொள்வது, ஒரு சிறந்த அறம் ஆகும்.

*"வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்"* என்றொரு கூற்றும், நம்மிடையே புழக்கத்தில் இருந்து வருகிறது. *"சிரித்து வாழ வேண்டும், பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே"* என்ற ஆன்றோர் வாக்கினைக் கருத்திற் கொண்டு வாழ்க்கையில் அனுசரித்து, நாம் வாழ்ந்து வந்தால், உடல், உள ஆரோக்கியம், சமூக நலம் என்பவற்றைப் பேணி மகிழ்ச்சியுடனும், அமைதியுடனும் வாழும் பெரும் பேற்றினைப் பெற்றவர்கள் ஆவோம்.

வாய்விட்டுச் சிரித்து, மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, அனுபவிக்க விழைபவர்கள், நண்பர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டு அனுபவிக்க விரும்புகின்றனர். தனிமையில் வாய்விட்டுச் சிரித்து மகிழ்பவர்கள் பொதுவில் சித்த சுவாதீனம் அற்றவர்கள் ஆகக் கணிக்கப் பெறுவர்.

மனிதன் ஒரு சமூக விலங்கு என்று கூறப்படுகின்றது. மனிதர்கள் சமூகமாக, குழுமங்களாகக் கூடி வாழ்வதையே விரும்புகின்றனர். தனிமையை அதிகம் விரும்புவதில்லை. மனிதன் தனியாகவே பிறக்கிறான். அவன் தனியாகவே இவ்வுலகை விட்டுச் செல்கிறான். ஆயினும் இவ்வுலகில் வாழுங் காலத்தில் பலருடன் சேர்ந்து சமூகமாக வாழவே விரும்புகிறான். தனிமையில் வாடி வதங்க விரும்புவதில்லை. *"கூடிவாழ்ந்தால் கோடி நன்மை"* என்பது பழமொழி.

மனிதனிடம் இயலுமை, இயலாமை இரண்டும் உண்டு. இவ்விரண்டையும் தீர்மானிப்பது, பெரிதும் மனம் ஆகும். உடற்பலம் இருப்பினும், மனம் பலம் குன்றியிருப்பின், அங்கு எதற்கும் இயலாமையே முன்னிற்கும். இனிமை பறிபோய்விடும். மாறாக உடற் பலம் சற்றுக் குறைவாக இருப்பினும், மனப் பலம் உறுதியாக இருந்தால், "எனக்கு இயலும், என்னால் முடியும்" என்ற துணிவும் தைரியமும் பிறக்கும். எடுத்த காரியம் கைகூடிவிடும். இனிமையும் இன்பமும் கிடைக்கப் பெறும். தனிமையில் இனிமை காண முடியும் என்பதும் முடியாது என்பதும் அவரவர் மனத்தைப் பொறுத்த விடயம். "மனமுண்டானால் இடமுண்டு" என்பது பொருள் பொதிந்த கூற்று.

தனிமை என்பது துறவிகள், சந்நியாசிகள், முனிவர்கள், வயோதிபர்கள் போன்ற வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தை நெருங்கியவர்களுக்கும் உரியது. அவர்களுக்குத் தனிமையானது இனிமை தரக்கூடியதாக இருக்கலாம். ஆனால் இளைஞர்களுக்கும், இல்லறத்தாருக்கும், இந்த அவசர உலகில் அவதி, அவதியென வாழ்ந்து கொண்டு இருப்பவர்களுக்கும், தனிமையில் இருக்க நேரம் ஏது? எங்கே நேரம் கிடைக்கிறது? என வினா எழுப்புகின்றனர். அவர்களுக்குத் தனிமை, மன அழுத்தத்தையும், துன்பத்தையும் தருகின்றதேயன்றி, இனிமையையோ, அமைதி ஆறுதலையோ பெரும்பாலும் கொடுப்பதில்லை. கூர்ந்து நோக்கில், இத்தகைய அவதி வாழ்க்கையை நடத்தி வருபவர்களுக்குத்தான் தனிமையும், ஓய்வும் அவசியம் தேவை. இவ்வுண்மையை உணர்ந்தவர்கள் வாழ்வில் உடல் ஆரோக்கியம், மனநலம் என்பவற்றைப் பேணி, வாழ்க்கையில் அமைதி, இனிமை, இன்பம் என்பவற்றைப் பெற்று, நிறை வாழ்வு வாழ்கின்றனர்.

இனிமை, இன்பம், அமைதி என்பன மனிதனின் மனத்திற்குள்ளிருந்துதான் வரவேண்டும். அவற்றை வெளியில் எங்கு தேடியும் பெற்றுக் கொள்ள முடியாது. தம்மைத் தாம் நேசிப்பவராயின், தனிமையையும் விரும்பியே ஆகவேண்டும். தனிமையைப் போலவே, ஓய்வும் அவசியம். தனிமையும், ஓய்வும், மனத்தை வளப்படுத்தி, மனத்திற்கு நலம் சேர்க்கக்கூடியவை.

மனிதன் தனிமையில் இருக்கும்போதுதான், தன்னை அறியவும், தன்னை உணரவும், தன்னிறைவு பெறவும் முடிகின்றது. தன்னிடமுள்ள குறைகளையும், நிறைகளையும், விருப்பு, வெறுப்பின்றி ஆராய்ந்து அறிந்து, குறைகளை நீக்கிக் கொள்ளவும். நிறைகளை மேலும் விருத்தி செய்வதற்கும் ஒருவன் தனிமையில் இருக்கும் போதே, வாய்ப்பும் நேரமும் கிடைக்கப் பெறுகிறான். தனிமையில், ஏகாந்த நிலையில் இருக்கும்போது, பிறரின் குறுக்கீடுகள் மற்றும் கவனக் கலைப்பான்கள் என்பவற்றின் தொல்லைகள் இருக்கமாட்டாதல்லவா? எனவே, மனவடக்கம், புலனடக்கம் என்பவற்றைப் பயிற்சி செய்யவும், பயன்பெறவும், தனிமை துணை புரிகிறது. மனத்தில் அவ்வப்போது தோன்றும் கசடுகள், அழுக்குகள் என்பவற்றை, மனதில் படியவிடாமல் உடனுக்குடன் அகற்றிவிடவும், மனத்தூய்மை பேணவும், அதன்வழி சொல் தூய்மை, செயல்தூய்மை ஏற்படவும் வழியேற்படுகிறது. "சும்மா இரு" என்ற சான்றோர் மொழி, செயற்படுவதற்குத் தனிமை பெருந்துணையாகின்றது.

தனிமையில், சும்மா இருத்தல் என்பது மனத்தில் தேவையற்ற துன்பச் சுமைகளை இறக்கி வைத்தலும் ஆகும். மனச்சுமைகள் ஆறு வகைகள் ஆக உள்ளன. பேராசை, கடும்பற்று, சினம், உயர்வு தாழ்வு மனப்பான்மை, முறையற்ற பால்

கவர்ச்சி, வஞ்சம் என்பவைகளே அவையாகும். "சும்மா இருத்தல் சுகம் தரும்." இக்கூற்று முற்றிலும் உண்மை. எப்போதெனில், உடலை ஓய்வு நிலையில், எவ்வித வேலைகளிலும் ஈடுபடுத்தாமல் ஓரிடத்தில் அங்க அசைவுகள் இன்றி, அமர்த்தி வைத்திருப்பதுடன், மனத்தையும் அங்கிங்கென அலைய விடாதும், புலன்களைக் கட்டுப்படுத்தியும், எண்ணம், சொல், செயல் என்பவற்றின் செயற்பாடுகளை நிறுத்தியும் வைத்திருத்தலும் ஆகும். ஆனால், இன்று படுத்துத் தூங்குதல், அதுவும் நாள் முழுவதும் நேரக் கணக்கின்றித் தூங்குதல்தான் ஓய்வெடுத்தல் என்று கொள்ளப்படுகின்றது. இந்நிலை, குளிக்கப் போய் உடல் முழுவதும் சேறு பூசியவனின் பரிதாப நிலையை ஒப்பதாகும். உறக்கம், அளவு முறைகளை மீறினால், அது ஓய்வு ஆகாது நஞ்சாகிவிடுகின்றது.

தனிமையில் சும்மா இருப்பது என்பது தவம் ஆகும். "தவம் செய்வார் தங்கருமம் செய்வார்" என்கிறது திருக்குறள். தனக்கு வந்த துன்பத்தைப் பொறுத்தலும் மற்றைய உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகிய இவ்விரண்டுமே தவம் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

பல தவறான எண்ணங்கள், பேச்சுக்கள், செயல்கள் என்பவற்றால், தனக்கும், பிறர்க்கும், இயற்கைச் சூழலுக்கும் பல தீமைகள், தீங்குகள், இன்னல்கள் ஏற்படுகின்றன. இவை அறிந்தோ, அறியாமலோ, நன்கு திட்டமிட்டோ, தற்செயலாகவோ நிகழ்கின்றன. மனிதர்கள் ஐம்புலன்களின் ஆட்சியின் கீழ் அவற்றின் கவர்ச்சியில் சிக்கியிருக்கும்போது விளைவறியாமல், எண்ணங்களைத் தோற்றுவிப்பதும், பேசுவதும் செயல் புரிவதும், மனித இயல்பு. மனிதர்கள் தம்மிடமிருந்து அவ்வப்போது எழும் எண்ணம், உணர்ச்சி, சொல், செயல் என்பவற்றைத் தனிமையில் ஆற அமர உட்கார்ந்து, ஆராய்ந்து, தவறானவற்றை முதலில் கண்டுபிடிக்கவேண்டும். பின்பு தவறுகள், பிழைகள், தீங்குகள் என்பவற்றை எவருக்கும், எவ்வுயிர்க்கும், எதற்கும் செய்வதில்லை என்ற உறுதிமொழியையும் எடுத்துக் கொள்ளவும் வேண்டும். இதற்கான உளப்பயிற்சியே, தற்சோதனையாகும். தனிமையிலேயே தற்சோதனை, அகத்தாய்வு செய்ய முடியும். தனிமை நலன் பேணி, வாழ்வில் காத்து, ஓம்பிப் பயனுள்ள வாழ்வு வாழ்வோமாக.

மனிதர்கள், ஆன்மீக வளர்ச்சி பெறுவதற்குச் சைவநெறி மூன்று வழிமுறைகளை, மூன்று மகா வாக்கியங்கள் மூலம் உலகிற்கு வழங்கியுள்ளது. "தனித்திரு", "பசித்திரு", "விழித்திரு" என்பவையே அவை ஆகும். பொதுவாக, விரதங்கள் அநுட்டிக்கப்படும் காலத்திலும், சிறப்பாகச் சிவராத்திரி விரதம் மேற்கொள்ளப்படுகின்ற போதும், இம் மூன்றையும் கடைப்பிடிக்கும்படி விரதிகள் அறிவுறுத்தப்படுகின்றனர். சிவராத்திரித் தினத்தன்று, முழுநாளும் பிறர் எவருடனும் பேசாமலும், எக் கருமங்களிலும் ஈடுபாடு கொள்ளாமலும் ஆலயத்திலோ, வீட்டிலோ தனிமையில் அமர்ந்து இருத்தலே, "தனித்திரு" என்னும் மகாவாக்கியத்தின் பொருள் எனப் பரவலாகக் கொள்ளப்படுகின்றது. நாம் தனித்திருந்து, இனிமையையும், மகிழ்ச்சியையும், அமைதியையும் அனுபவிப்பதற்கு நமக்கு இடையூறாக இருப்பது மனம் ஆகும்.

மனத்தின் இயல்பு அலைதல் என்பர். மனத்தைக் குரங்கிற்கும், குதிரைக்கும் ஒப்பிடுவர். கடல் அலைகள் போன்றது மனம். "சும்மா இருக்கின்ற திறன் அரிது காண்" என்கிறார் தாயுமானவர். மனத்தை ஒரு நிலைப்படுத்துவதற்குச் சாதனை வேண்டும். பயிற்சி தேவை. தனித்திருத்தல் ஒரு சிறந்த சாதனை வழியாகும். தினமும் ஒரு சில நிமிடங்கள் தனித்திருந்து பயிற்சி செய்தல் மூலம் மனத்தூய்மை, மனஅமைதி என்பவற்றைப் பெற வழியேற்படும். மனம் ஐம்புலன்களின் ஆட்சியின் கீழ் போகாது நிற்றற் பொருட்டு தனித்திருந்து பயிற்சி செய்தல் இன்றியமையாததாகும். தியானம் என்பதன் நோக்கமும் இதுவே தான்.

நாம் தனித்திருத்தல் என்பது உலகியல் பற்றுக்கள், பந்த பாசங்கள் என்பவற்றுடன் சேர்ந்தி

ருக்காது, அவற்றினின்றும் விடுபட்டு, நாம், நாமாகச் சுதந்திரமாக இருத்தல் ஆகும். " நான் யார்?" என்ற வினாவிற்குச் சரியான விடை, "நான் ஆன்மா" என்பதாகும். ஆன்மா என்பது உயிர். இதிலிருந்து பிறக்கும் மற்றொரு கருத்து நான் பொறி புலன்களோடு கூடிய உடம்பு அல்ல என்ற உண்மை நிலை. இந்த நிலைப்பாட்டினை உணர்ந்து, தெளிந்தவர்களே அறிவில் முழுமை பெற்றவர்கள்.

தமது இன்பத்தை நுகர 'துன்பம்' துயர்களைப் போக்க தமது அன்றாடம் பணிகள் மற்றும் கடமைகளை ஆற்ற, தனது வாழ்வாதாரம், பதவி, அந்தஸ்து, புகழ், சொத்துச் சுகங்கள் என்பவற்றைப் பெருக்கவும் அடையவும் பயன்படுத்தும் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றின் விளைவாகத் தனக்கோ, பிறருக்கோ, நாட்டிற்கோ, உலகிற்கோ, உடனடியாகவோ, பிற்காலத்திலோ, எச்சந்தர்ப்பத்திலோ, தீமைகள், தீங்குகள், துன்பங்கள், நோய்கள், கேடுகள், அழிவுகள், விளைவிக்காத அளவோடும் முறையோடும், விழிப்புணர்வுடனும் ஆற்றும் செயல்நெறி, நல்லொழுக்கம் எனப்படும். அறநெறியின் பிரதான மூன்று உறுப்புக்களுள் ஒன்று, நல்லொழுக்கம் ஆகும். ஏனையவை கடமை, ஈகை என்பன.

நல்லொழுக்கம், கடமை, ஈகை நலங்களை வாழ்வில் பேணிக் காத்தோம்பி வருதலில், எப்போதும், மனிதர்கள் விழிப்பாக இருந்து செயற்பட வேண்டும். இதனையே "விழித்திரு" என்னும் மகா வாக்கியம் உணர்த்துகிறது. நல்லொழுக்கம் பேணுவதிலும், தத்தம் கடமைகளை முட்டின்றி ஆற்றி வருதலிலும், ஈகை மூலம் பல்லுயிர்களையும் வாழ்விப்பதிலும், ஆர்வமும் விருப்பமும், நாட்டமும் கொண்டிருத்தலை, "பசித்திரு" குறிப்பாக சுட்டுகிறது என்பதை இச்சந்தர்ப்பத்தில் விளங்கிக் கொள்ளல் அறிவுடைமை ஆகும்.

நம்மிடத்தில் உள்ள களங்கங்கள் எவை என்பதைக் கண்டறிந்து, அவற்றைப் படிப்படியாக மாற்றியும், நீக்கியும், நம்மைத் திருத்திக் கொண்டு மீண்டும் அத்தகைய தீயவை, நம்மைத் தீண்டாதபடி விழிப்போடும், ஆர்வத்தோடும் அவற்றுடன் உறவு கொள்ளாமல், துறவு பூண்டும், வாழ்க்கையின் உயர்நிலையை அடைய வேண்டும். இது வாழ்க்கையின் உயர் இலக்கு ஆக அமைய வேண்டும். இந்த உயர்ச்சியும், அப்படி உணர்ந்த வழியே வாழ்தலும் தான், சரியான ஆன்மீக வாழ்வு ஆகும். களங்கங்களுடன் உறவினை முறித்துக் கொண்டு, தனிமையில் இருக்கும் நிலையில் கிடைக்கப் பெறுவது இனிமை, இன்பம், அமைதி, தூய்மை ஆகும். ●


தமிழ் நூலுக்கு உலகளாவிய நிலையில் வழங்கப்படும் உயரிய அங்கீகாரம்

## சிறந்த நூலுக்கு பத்தாயிரம் டொலர் பரிசு

மலேசியா தேசிய நிலை நிதிக் கூட்டுறவுச் சங்கத்தின்

டான்ஸ்ரீ கே.ஆர்.சோமா அறவாரியம் வழங்குகின்றது

**2014 - 2015 ஆண்டுகளில் பதிப்பிக்கப்பட்ட நூல்கள் வரவேற்கப்படுகின்றன.**

உலகளாவிய நிலையில் வாழ்கின்ற எழுத்தாளர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அழைக்கப்படுகின்றார்கள். தேர்வுக்கான நூல்களை அனுப்ப விரும்புகின்றவர்கள் 30.03.2016 இற்கு முன் அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:

**NATIONAL LAND FINANCE CO-OPERATIVE SOCIETY**
Headquarters, Kula Lump,
level 10, Wisma Tun Sambanthan, Jalan Sultan Sulaiman
5000 Kuala Lumpur, Malaysia.
தொ.பே. 00603 2273 1250

# தமிழ்மொழி பற்றி யுனெஸ்கோவின் மதிப்பீடு

இன்னும் 100 ஆண்டுகளில் அழியப்போகும் 25மொழிகளை யுனெஸ்கோ பட்டியலிட்டுள்ளது. அதில் எட்டாவது இடத்தில் தமிழ் மொழி இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. ஒருமொழி அந்த மொழி சொந்த மக்களால் கைவிடப்படுதல், பயன்படுத்தாமல் ஒதுக்கி வைக்கப்படுதல், தாய் மொழியின் மதிப்பு குறைந்ததாக நினைத்தல், ஆதிக்க மொழியால் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுதல் போன்ற காரணங்களால்தான் அழிவை நோக்கிச் செல்கிறது எனவும் யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

"மெல்லத் தமிழ் இனிச்சாகும்" என்று கூறிய பாரதியின் தீர்க்கதரிசனம் உண்மையாகிவிடுமோ? என்று எண்ணவைத்துள்ளது மேற்கூறிய யுனெஸ்கோவின் அறிக்கை.

வீட்டில் குழந்தைகளை தமிழிலேயே பேசவைக்கவேண்டும், குழந்தைகளுக்குத் தமிழிலேயே பெயர் வைக்க வேண்டும், எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலை உருவாகவேண்டும், தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டு துறைசார்ந்த கல்வியைப் பரவலாக மேற்கொள்ள வைக்கவேண்டும். சீன மக்கள் சீன மொழியிலும், யப்பான் மக்கள் யப்பான் மொழியிலும், கொரிய மக்கள் கொரிய மொழியிலும், ருஸ்ஷிய மக்கள் ருஸ்ஷிய மொழியிலும்தானே கல்வியின்று உலக நாடுகளுக்குப் போட்டியாக எல்லாத்துறைகளிலும் முன்னணியில் திகழ்கின்றார்கள். எமது மொழி யின் முக்கியத்துவத்தை எம்மவர்கள் உணராமல் இருக்கின்றார்கள்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்ற பாரதியாரின் கூற்றைச் செயற்படுத்த எம்மவர்கள் முன்வந்தால் எமது மொழியும் உலக தரத்துக்கு உயர்ந்து நிற்கும் என்பதை உணராமல் இருப்பது வேதனைதரும் விடயமாகும். அடிமைத் தனமும், அலட்சியப் போக்கும், பற்றற்ற தன்மையுமே எமது மொழியின் அழிவுக்குக் காரணமாக இருக்கப்போகின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. தமிழர்கள் சிந்திப்பார்களா!

• • • •

# எழுத்தாளர்கள் பற்றி...



எழுத்தாளர்கள் புதிதாகச் சிந்திக்கப் பழகவேண்டும். தேவைப்படாதவை களை தெய்வீக விஷயங்களாயினும் சரி, அவைகளைப் பற்றி எழுதுதல் வேண டாம். கைக்கும் கண்ணுக்கும், கருத்துக்கும் எட்டும் பொருள்களைப் பற்றியே அழகுற எழுதவேண்டும். அதனால்தான் உலகம் வாழமுடியும். மாயாவாதத் தத்துவ விசாரணைகள் நாட்டை ஒரு படி கூட உயர்த்தாது. அவற்றால் தனி மனி தன் வேண்டுமாயின் உயரலாம்.

தனிமனிதன் என்ற நிலை நீங்கப் பெற்று 'உலகம்... உலகம்' என்ற சிந்த னையே எழுத்தாளர் மனதில் இடம்பெறவேண்டும், உலக உயிர்கள் யாவும் ஒரே குடும்பம் என்ற இமாலயக் கருத்தை எழுத்தாளர்கள் முன்வைக்கவேண்டும். நம் நாட்டின் அமர கவிஞர் பாரதி இதற்கும் ஒருபடி மேலே சென்று *"நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்"* என்கிறான்.

இத்தகைய மணிமணியான கருத்துக்கள் கூட இன்னும் சரியாகப் பரவவில்லை, கலைஞர்களின் கைபடாத காரணத்தால்!

கலைஞர்களுக்கெல்லாம் ஆசான்களாகத் திகழவேண்டிய எழுத்தாளர்கள், கலைஞர்களிடம் சீடர்க ளாகத் திரியவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இது கலை வளர்ச்சியையே பாதிக்கக்கூடிய சங்கதி!

ஓர் எழுத்தாளர் ஒருவரி எழுதினால் அந்த ஒருவரி நாட்டில் ஓர் உயிரின் ஒருநேர உணவுக்காவது வழிசெய்யவேண்டும். இல்லையெனில் ஒரே ஒரு உயிரின் ஒரு நிமிட நிம்மதிக்காவது பயன்பட வேண்டும். இதுதான் எழுத்தாளர்களுக்குச் சகோதர பாசத்தால் நான் சொல்லும் ஒரே ஒரு யோசனை!

(1956 ஆம் ஆண்டு 'வெண் திரை' என்ற மாத ஏட்டில் வெளிவந்த கலைவாளர் என்.எஸ்.கிருஷ் ணன் அவர்களின் கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்)

● ● ● ●

# எழுத்தாளர்கள் மூலம் தேசிய நல்லுறவு

தேசிய நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான போராட்டத்தை கலை, இலக்கிய வாதிகள் தங்கள் எழுத்துக்கள் மூலம் உருவாக்கவேண்டும். உங்களது கலை, இலக்கியங்கள் இவற்றுக்காகப் பயன்பட வேண்டும். யுத்தம் இல்லாத தேசம் என்பதே எமது நாட்டின் எதிர்பார்ப்பு. அதை உங்கள் எழுத்துக்கள் மூலம் ஏற்படுத்தவேண்டும். உங்கள் அறிவும் அனுபவமும் இன்பமான நாளை உருவாக்கப்பயன்பட வேண்டும். உங்களது உண்மையான முயற்சி, எழுத்துக்கள், ஆக்கங்கள் அறிவுபூர்வமானவையாக எமது சமூகத்துக்குப் பயனுள்ளவையாக அமையவேண்டும்.

மனித பரிணாமத்திலிருந்து அவனது வளர்ச்சி பற்றி இலக்கியவாதிகளும்,கலைஞர்களும் , எழுத் தாளர்களும் சமூகத்துக்குக் கொடுத்திருக்கின்றார்கள். அன்பு, பாசம், தூய்மை என்பவற்றுக்கு சமு தாயத்தை நோக்கி உரக்கக் குரல் கொடுத்தவர்கள் இலக்கிய வாதிகளே. மனித வரலாற்றின் ஆரம்ப பயணம் பற்றி நோக்கும்போது எப்போதும் மனித சமுதாயத்தின் உண்மைத் தன்மையையும், உண்மை நிலையையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்தி சரியானதை சரியான முறையில் மனிதர்களுக்கும் சமூகத்துக்கும் தெளிவாகச் சொல்லக்கூடியவர்களாக இலக்கியவாதிகளே இருந்துள்ளார்கள்.

உலகிலேயே அதிக வளர்ச்சிகண்ட பல நாடுகள் பல்வேறுபட்ட விடயங்களில் தங்கியிருக்கின்றன. குறிப்பாக 19,20 நூற்றாண்டுகளிலும் அண்மைக்காலமாகவும் மனித வரலாற்றைக் காண்பதற்கு இலக்கியவாதிகளே காரணமாக இருந்திருக்கின்றார்கள். சமுதாயத்தின் பல்வேறுபட்ட விடயங்களை யும் முன்னிலைப்படுத்திய பெருமைக்குரியவர்களாக இலக்கிய வாதிகள் இருந்துள்ளார்கள்.

கலை, இலக்கியங்கள் மூலம் கடந்த கால நினைவுகளை ஞாபகப்படுத்தி உயிருள்ள நாளைய நாளை நல்ல நாளாக்குவோம். தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக எல்லோரும் சகோதரத் துடனும், நட்புறவுடனும், ஒற்றுமையுடனும் வாழவேண்டும். இலக்கியவாதிகளாகிய நீங்கள் உங்கள் இலக்கிய ஆக்கங்கள் மூலம் தேசிய நல்லுறவைக் கட்டி எழுப்ப முன் நின்று உழையுங்கள். அதுவே அரசினுடையதும் நாட்டினுடையதும் எதிர்பார்ப்பாகும். ●

- மாண்புமிகு ஜனாதிபதி
(இலங்கை)

சுந்தரம்

# விதண்டாவாதக் கந்தையா

கந்தையா அந்த ஊரில் விவசாயம் செய்துகொண்டு வீட்டில் ஆடுகளும் வளர்த்து வந்தார். முற்கோபக்காரர். யாரும் தன்னுடன் கதைக்க வந்தால் எதிர்மாறான கதைகளைச் சொல்லி கதைக்க வந்தவரை வாயடைக்க வைத்துவிடுவார்.

ஒருநாள் கந்தையரை வழியில் கண்ட பொன்னம்பலம்....

"எப்படிக் கந்தையா சுகமாய் இருக்கிறியோ?"

"ஏன் மருந்து தரப் போறியோ?"

"நான் சும்மா கேட்டனான்"

"என்ன சும்மா கேட்கிறது?"

"தெரியாமல் கேட்டிட்டன் என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கள்!"

"என்ன தெரியாமல், என்ன மன்னிப்பு?"

"சரி அதை விடுங்கோ? நீங்கள் ஆடு வளர்க்கிறியளோ?"

"ஏன் நீரும் வளர்க்கப் போறியோ?"

"இல்லை. ஆடு ஒன்று தேவையாக இருக்கு அதுதான் கேட்டனான்"

"நான் ஆடு விற்கப் போறன் என்று சொன்னனானோ?"

"இல்லை.... ஆடு வளர்க்கிறவர்கள் விற்கத்தானே வளர்ப்பார்கள். அதுதான் கேட்டனான்"

"ஆடு வளர்க்கிறவர்கள் விற்கத்தான் வளர்க்கிறார்கள் என்று யார் சொன்னது?"

"ஒருவரும் சொல்லேல்ல. எனக்கு ஒரு ஆடு தேவையாக இருந்தது அதனால கேட்டேன்"

"உனக்குத் தேவை எண்டால் என்னிடம் ஏன் கேட்கவேணும்?"

"தெரியாமல் கேட்டுவிட்டன்"

"ஏன் தெரியாமல் கேட்டனீ?"

"உங்களோடு கதைக்கேலாது. எல்லாத்துக்கும் விதண்டாவாதம் சொல்லிக் கொண்டே இருக்கிறியள்"

"என்னோட கதைக்கேலாது எண்டு யார் சொன்னது? என்ன விதண்டாவாதமோ?"

"ஆளும் தெரியாமல் காலை வச்சுவிட்டன். நான் வாறன்"

அந்த நேரம் இரண்டு பொலிஸ்காரர் ஜீப்பில் வந்திறங்கி கந்தையரைப் பார்த்து "ஆடு வளர்க்கிற கந்தையா வீடு எங்கிருக்கு?" என்று கேட்டார்கள்.

"ஏன் கேட்கிறியள்?"

"அதை ஏன் உமக்கு. கந்தையாவின் வீட்டைக் காட்டும்"

"ஏன் நான் காட்டவேண்டும்"

"டேய்.... உனக்கு தெரிந்தால் சொல்லத்தான் வேண்டும்"

"சொல்லாவிட்டால்... என்ன செய்வியள்?"

"சொல்லாவிட்டால் பொலிஸ் ஸ்ரேசனுக்கு வரவேண்டியிருக்கும்"

"ஏன் பொலிஸ் ஸ்ரேசனுக்கு?"

பொறுமை இழந்த பொலிஸ்காரர்கள் கந்தையரைப் பிடித்து இழுத்து ஜீப்பில் ஏற்றிக்கொண்டு செல்லுகிறார்கள். அக்கம் பக்கத்தில் இக்காட்சியைக் கண்டவர்கள் என்னிடம் வந்து காரணத்தைக் கேட்டார்கள். நான் நடந்ததைச் சொன்னேன். "உந்தாளைக் கொண்டுபோய் பொலிஸ்காரர் இரண்டு தட்டு தட்டினால்தான் உந்தாள் திருந்தும்" என்றார்களே பார்க்கலாம்.

## கேட்டதைச் சொல்ல வந்தோம்

# பட்டினியால் வாடும் அபாயம்

வளி மண்டலத்தில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக இந்த ஆண்டில் பல இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. கிழக்கு பசுபிக் பெருங் கடலில் ஏற்படும் 'எல் நினோ' என அழைக்கப்படும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக வளி மண்டத்தில் ஏற்படும் மாற்றங்களால் இந்த நடப்பாண்டில் பல இலட்சக்கணக்கானோர் பட்டினியாலும், நோய்களாலும் துன்பப்படும் அபாயமுள்ளதாக 'ஒக்ஸ்பாம்' மற்றும் தொண்டு முகவர் நிலையங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

கிழக்குப் பசுபிக் பிராந்தியத்தில் இடம்பெறும் வெப்பநிலை ஏற்றத்தாழ்வுகளால் பிராந்தியத்தில் வெள்ள அனர்த்தங்கள் மற்றும் வரட்சி என்பன அதிகரிக்கும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 'எல் நினோ' என்பது ஸ்பெயின் நாட்டு மொழியில் 'பாலகன்' எனப் பொருள்படும். மேற்படி 'எல் நினோ' இயற்கை அனர்த்த தோற்றப்பாடு நத்தார் காலங்களில் தென் அமெரிக்க கரையோரப் பிராந்தியங்களில் ஏற்படுவதால் அதற்கு அப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்த 'எல் நினோ'வின் தாக்கத்தால் ஆபிரிக்க நாடுகளில் உணவு பற்றாக்குறை உச்சக் கட்டத்தை அடையும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதேவேளை இதன் விளைவால் கரிபியன், மத்திய மற்றும் தென் அமெரிக்கப் பிராந்தியங்களும் ஆறு மாதங்களுக்குப் பெரும் பாதிப்பை எதிர்கொள்ளவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற வெப்ப ஏற்றத் தாழ்வுகள் காரணமாகச் சென்ற ஆண்டு (2015) உலகின் மிகவும் வெப்பமான ஆண்டாக மாறியிருந்தது. இதன் காரணமாக ஆபிரிக்காவிலுள்ள முப்பத்தொரு மில்லியன் மக்கள் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டிருந்தனர். கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் எத்தியோப்பிய நாட்டவர்களாவர்.

இந்த ஆண்டு 'எல் நினோ' வின் விளைவால் அபிவிருத்தியடைந்த நாடுகள் நேரடிப் பாதிப்பை எதிர்கொண்டுள்ள நிலையில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உணவு விலைகளின் அதிகரிப்பால் பாதிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இயற்கையால் ஏற்படும் அனர்த்தங்கள் மனித வாழ்வுக்குச் சவாலாகத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

- தேடலோன்.

சிறுகதை



# உழைப்பவன் அறிவான் உழைப்பை

இணுவில்
ஆர்.எம்.கிருபாகரன்
(கனடா)

அடிக்கடி எழுந்து அடங்கிய பேரலைகள் நீண்டு கிடந்த கல்கிசைக் கடற்கரையைத் தடவிச் செல்வது போலிருந்தது. அலைகள் வந்து மணலை முத்தமிட்ட இடம் நுரைகளால் கோடிடப் பட்டிருந்தது. ஞாயிறு மேற்கு வானிலே இறங்கிக் கொள்ள கதிர்கள் படும் கடல்மேனி தங்க முலாம் பூசினாற்போல பளிச்சிட்டது. தாழை மரங்களின் கீழ் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பாரிய கருங் கற்கள் வரிசையில் நின்றன. சுதர்சன் கருங்கல் ஒன்றில் அமர்ந்தபடி கடற்கரையில் போவோர் வருவோரின் நடமாட்டத்தை உற்றுப் பார்த்தபடி யிருந்தார். அந்த இரம்மியமான இயற்கை யழகை இரசிக்கும் நிலையில் அவன் மனம் நிச்ச யமாக இல்லை. அன்று மதியம் சுதர்சன் மனை வியுடன் வாக்குவாதப்பட்டபோது மகள் சுகிர்தா வின் தலையீடு அவனை ஒருகணம் தடுமாற வைத்தது.

"அப்பா இவ்வளவு நாளும் அம்மாவுக்குத் தொந்தரவு கொடுத்தது காணாது எண்டு சுவிஸ் மாமா இரண்டு பேருக்கும் தொந்தரவு பண்ணு றீங்களே. அவையள் பாவம் என்ன செய்வினம்?" இதுதான் மகள் சுகிர்தா அப்பாவைப் பார்த்து உதிர்த்த சொற்கள். சுதர்சனின் மைத்துனர்கள் ரகுவும் ரவியும் சுவிசில் வேலை செய்கிறார்கள். சுதர்சனுக்கு கலியாணமாகி ஆறு வருடங்கள் ஆகிவிட்டது. அக்கா சுமதியின் சீதனம், நகை, கலியாணச் செலவு எல்லாம் தம்பிமார் அனுப்பிய காசில் கோலாகலமாக நடந்தன. அப் பொழுது முதல் இடையிடையே சந்தோசமாக தம்பிமார் பண உதவி செய்வது வழமை. இதுவே காலப் போக்கில் கொஞ்சம் கொஞ்சமாக வாயால் வலியக் கேட்டு வாங்கிற அளவுக்கு வந்தது. இது விடயத்தில் சுமதி உடன்பாடில்லை. இதனால் சும திக்கும் சுதர்சனுக்கும் இடையே வாக்குவாதப்பட்ட சம்பவங்கள் பல. அப்போதுதான் இன்றும் மதி யம் மகள் தாய்க்கு ஆதரவாகத் தனக்கு எதிராக அப்படிச் சொல்லிவிட்டாளா. சுதர்சனால் தாங்க முடியவில்லை. அட நம்ம பிரச்சினை நம்மோடு இருக்கட்டும். இந்தப் பிஞ்சுக் குழந்தை ஐந்து வய துக்குள்ள இப்படிப் பேச நாங்கள் பெற்றோர்தான் காரணம். பிறந்த நாள் முதல் நாளடைவில் கேட் டுக் கேட்டு இளம் விளை நிலத்தில் விழுந்த நச்சு விதையின் முதல் அறுவடைதான் இன்று நடந் திருக்குது. நேரம் நன்கு இருட்டிவிட்டது. அதற்குப் பிறகு கடற்கரையில் திருடர் பயம். நேரே காலாற வீட்டுக்கு நடந்து சென்றான் சுதர்சன்.

வெளிநாட்டு தனியார் நிறுவனம் ஒன்றில் உயர் அதிகாரியான சுதர்சன். கொழுத்த சம்ப ளம் பெறுகிறான். அதைவிட ஊக்கத் தொகை அது இது வேறு. கல்யாணமான மூன்று வரு டங்கள் ஓர் அறை, சமையலறை என்று சிறிய வீட் டுக்கு வேண்டாவெறுப்பாக சுளைபோல ஆறாயி ரம் ரூபாவை வாடகைக்கு கொடுக்க வேண்டி யதாச்சு. அந்தச் சிறிய வீட்டில் இருந்து சுதர்சனும், சுமதியும் குழந்தையோடு காலம் தள்ளியதே பெரியபாடு. இரண்டாவது பிள்ளையும் பிறந்த போது வீடு பெரியதாய் வேண்டும் என்று தேடி சுதர்சன் வீட்டுக்கு அலைந்தான். கொழும்பில் சாதாரண வீடு கிடைக்கிறதே பெரியபாடு. சுதர் சனின் எதிர்பார்ப்புக்கு பலத்த அலைச்சலின் பிறகு தரகர் மூலம் ஆடம்பரமான வீடு கிடைத் தது. சகல வசதியும் உள்ள பெரிய வீடு. வாடகை பன்னீராயிரம் ரூபா மாதம். தன் மாதச் சம்பள

மும் கிட்டத்தட்ட அதே தொகைதான் என்று தெரிந்தும் சுதர்சன் இந்த வீட்டை எப்படியும் எடுத்தே தீருவது என்பதில் பிடிவாதமாய் இருந்தான். "உங்கள் சம்பளம் முழுக்க வாடகைக்குப் போனால் மற்றச் செலவுகளுக்கு எங்கே போறது?" என்று சுமதி சொல்லியும் கேட்க மறுத்துவிட்டான் சுதர்சன். "எந்தச் செலவு வந்தாலும் அதைச் சமாளிக்கப் போறது நான்தான்" என்று சுமதியின் வாயை அடைத்துவிட்டான்.

மாதங்கள் சில ஓடி மறைய, கணவனை ஒரு நாள் சுமதி "எப்படி இந்தச் செலவையெல்லாம் சமாளிக்கிறீங்கள். கடன் ஏதாவது வாங்கினீங்களா?" என்று கேட்டபோது "அப்படி ஒண்டும் இல்லையே" என்று மழுப்பிச் சமாளித்துவிட்டான் சுதர்சன். இன்னொரு நாள் உண்டியல் மூலம் இருபதாயிரம் ரூபா சுவிசிலிருந்து சுமதியின் தம்பிமார் அனுப்பியிருந்தனர். தொகை வழமைக்கு மாறாக இருந்ததால் அன்று சுமதிக்கு இலேசாக எழுந்த சந்தேகம் வீட்டில் பெரிய பூகம்பத்தைக் கிளம்பி விட்டது. சுதர்சன் அலுவலகத்திலிருந்து வந்து ஆயாசமாகக் காலைநீட்டி முன் கூடத்தில் இருந்த போது கையில் தேனீர் கோப்பையோடு சுமதி வந்தாள். "சுவிசிலிருந்து தம்பி காசு இரு பதினாயிரம் அனுப்பியிருந்தார். கொண்டு வந்து தந்தார்கள். அனுப்பச் சொல்லி நீங்க கேட்டியளா?" சுமதி சற்று எரிச்சலாகக் கேட்டாள். சுதர்சன் மௌனம் சாதித்த போது மீண்டும் சுமதி "என்ன உங்களைத்தான். பேசாமல் இருந்தால் செய்தது எல்லாம் சரி எண்ட நினைப்போ?" என்று கேட்டபடி தேனீரை மேசையில் வைத்துவிட்டு கதிரையில் தொப்பென்று சாய்ந்தாள். இப்படிக் கேட்டது சுதர்சனுக்குப் பிடிக்கவில்லை. "எல்லாம் தேவையோடுதான் நான் சுவிசுக்கு மச்சானைக் காசு கேட்டன்" என்று சுதர்சன் முடிக்க முன்னரே சுமதி "இதுவரை வாங்கினதே நாலு லட்சத்துக்கு மேல் போட்டுது. அதை எப்ப குடுத்து முடிக்கிறது? அதுக்கு வேறை வழியில்லாத நேரத்திலை அப்பிடி என்ன தேவைக்கு இந்த இருபதாயிரம்?" என்று விக்கி விக்கி இரைந்து பேசினாள். இதைக் கேட்ட சுதர்சனுக்கு கோபம் வந்துவிட்டது. "வாங்கின காசைத் தரச் சொல்லி அவங்கள் இதுவரை கேட்கவில்லையே. நீ எனக்குப் புத்திமதி சொல்கிறாயா?" சுதர்சன் பேசியபடி பார்வையால் சுட்டெரித்தான். இதைச் சற்றும் எதிர்பாராத சுமதி முறைத்த படி சமையலறைக்குள் புகுந்துகொண்டாள்.

காலச் சுழற்சியில் திங்கள்கள் சில ஓடி மறைந்தன. சுமதியின் கவலை எல்லாம் தம்பிமார் பனியிலும் குளிரிலும் உறக்கமின்றிக் கஷ்டப்பட்டு உழைத்த காசெல்லாம் அவைக்கே பயனில்லாமல் சுதர்சன் கண்ணை மூடிக்கொண்டு வாங்குது. "வாங்கிய காசைத் திருப்பித்தா அக்கா" என்று ஒருநாள் நிச்சயம் தம்பிமார் கேட்கத்தான் போகினம். கைநீட்டி வாங்கியவர் கணக்கு வைக்காவிட்டாலும், அத்தான் ஏதே வாய்விட்டுக் கேட்கிறாரே என்று கொடுத்துவிட்டு தம்பிமார் கணக்கு நிச்சயம் வைப்பார்கள். கொடுத்த காசைத் திருப்பித்தா என்று கேட்கும் போது தான் ஒருவரின் குணத்தை மற்றவர் அறிவார்.

சுதர்சனின் மனக் கணக்கெல்லாம் சம்பளம் முழுக்க வாடகையுடன் போவதால் மற்றச் செலவெல்லாம் தனக்கு நோவு இல்லாமல் வேறு யாரோ செலவு செய்வது போலிருந்தது. மைத்துனரின் காசு தாராளமாகக் கையில் புரளுவதால் பேருந்தில் வேலைக்குப் போய்வந்த சுதர்சன் ராக்சிக்குத் தாவினான். வீட்டிலிருந்து மதிய உணவு கையில் சுமந்து சென்ற காலம் போய் மதிய நேரம் அலுவலக நண்பர் குழாம் சூழ உயர் ரக விடுதியில் மதுவுடன் உணவுண்டான். சுதர்சனின் தூரத்து நண்பர்களும் நெருங்கி வந்தனர். சுதர்சன் வழமை போல் சுவிசுக்கு தகவல் கொடுக்க, காசும் இடையிடையே வந்து கொண்டிருந்தது. சுமதிக்கு இது தெரியும். தெரியாத மாதிரி இருந்து கொள்வாள்.

அனுப்பும் பணம் வீட்டுக்கு வந்தால் சுமதிக்கு தொடர்ந்து பதில் சொல்லமுடியாது என்று தனக்குள் நினைத்த சுதர்சன், அலுவலகத்துக்குப் பணத்தை அனுப்பச் சொன்னான். அடுத்தவரின் காசைத் தண்ணீர் மாதிரிப் பாவித்துப் பழகிய

சுதர்சன் காசு வருவதில் வரும் தாமதத்தையே பொறுக்காதவனாய், உடனே சுவிசுக்குத் தொலை பேசியில் அவசரம் காசு அனுப்பச் சொல்லும் அளவுக்கு அநாவசியச் செலவுகள் வைத்திருந் தான். "இனி, தம்பி காசு அனுப்பத் தேவை யில்லை." என்று ஒருநாள் சுமதி தம்பிமாருக்கு சொல்லத்தான் போகிறாள் என்று நினைத்த சுதர்சனுக்குத் தலை வியர்த்துக் கொட்டியது.

சுமதியின் தம்பி தற்செயலாக ஒருநாள் வீட்டுத் தொலைபேசியில் பேசியபோது, தன்னை அத்தான் அலுவலகத்துக்கு காசை அனுப்பச் சொன்ன விபரத்தை சுமதி அறிந்தாள். கேள்விப் பட்டதும் துடிதுடித்துப் போனாள். வழக்கமாக தம்பிமாருடன் தொலைபேசியில் கதைக்கும் போது, வீட்டிலிருந்து கடிதம் வந்ததா என்று தொடங்கி உடம்பைக் கவனி என்று வந்து உனக் கொரு கலியாணம் சீக்கிரம் பேச வேண்டும் எண்டு கதையை நீட்டும் சுமதி அன்று வலு சுருக் கமாகக் கதையைத் துண்டித்தாள்.

"தனக்கு ஏன் இந்த விசயத்தை சுதர்சன் மறைக்க வேண்டும்?" மனதுக்குள் பல கேள்வி கள் நிழலாடின. வாய்த் தாக்கம் எண்டு வந்தால் என் வாயை அடைத்துவிடுவார் அவர். எதிர்த்துப் பேசத் தைரியமில்லை. அவர் உழைப்பதும் செலவு செய்வதும் எல்லாம் எங்கள் குடும்பத் துக்கே எண்டு நினைத்துக் கொண்டிருந்த என் னைச் சந்தேகப்பட வைத்துவிட்டாரே! கலியாண மான புதிதிலே எந்த ஒரு சின்ன விசயமும் என் னோடு கலந்து கதைக்காமல் செய்யமாட்டார். வளைய வளைய வந்து வார்த்தைக்கு வார்த்தை சுமதி என்று அழைப்பதிலே தனிச் சுகம் கண் டவர் சுதர்சன். அப்படிப்பட்டவருக்கு நாள் செல் லச் செல்ல என்ரை பெயர் வேப்பங்காயாகப் போச்சு. சே. என்ன மாதிரியிருந்த மனிசன். தம்பி உதவி செய்யத் தொடங் கிய நாளிலிருந்து மனம் மாறிப் போனார். "என்ரை சொல்லுக்கு அவரிட்டை மதிப்பில்லாமல் போச்சு" சுமதி தன்னையும் மறந்து பேசுகிறாள். வாங்கித் தள்ளின இந்தக் கண்டறியாத காசை எப்ப குடுத்து முடிக்கிறது. வாங்கினத் தைக் கையிலை வைச்சிருந்தாலும் கேட்டவுடனே குடுத்துவிடலாம். இந்த மனிசன் காசு வாங்குறதே அவசரத் தேவைக்கு இல்லா மல் அள்ளிச் செலவு செய்யத்தானே? எப்படி ஏதும் மிஞ்சும்? அனல் மூச்சுப் பறக்க சுமதியின் உதடுகள் மட்டும் அசைந்தன வார்த்தைகள் வர மறுத்துவிட் டன.

அன்று மதியம் வந்த வெளிநாட்டுக் கடிதம் சுமதியின் கண்களை உறுத்தியது. சுவிஸ் தபால் முத்திரை ஒட்டிய அக்கடிதத்தை பிரிக்க அவள் கைகள் நடுங்கியன. கொழும்புக்குச் சுமதியின் குடும்பம் வந்தநாள் முதல் கடிதம் போடாத தம்பி மார் தொலைபேசியில் விசயத்தைப் பேசுவதோடு சரி. கடிதம் ஏன் எழுதவில்லை என்று கேட்டால் "எழுத நேரமில்லை அக்கா" என்ற சாட்டு வேறு.

தம்பி கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறா னோ? ஒருநாளும் போடாதவன். கடிதம் போட்டி ருக்கிறான். பரபரப்போடு கடிதத்தைப் பிரித்து வாசித்தாள். தம்பிமார் எழுதிய கடிதம் அது.

அன்புமிக்க அத்தான், அக்கா, மருமகள் அறிவது, நாம் நலமே, நாடுவதும் அஃதே.

ஊரிலிருந்து கடிதம் வந்து கனநாளாச்சு. நாங்களும் கடிதம் போடுவது குறைவுதான். இங்கே உழைத்த காசுகளை மிச்சம் பிடிச்சு சீட்டு கள் கட்டினோம். சீட்டுக்காறன் இரண்டு இடத் திலை சீட்டு முறிஞ்சு போச்சுது எண்டு சொல்லி காசு தரவில்லை. திட்டம் போட்டு நல்லா ஏமாத்தி யிருக்கிறாங்கள். அதனால் தான் சேருகிற காசை நீங்கள் கேட்டபோது அனுப்பினோம். கொழும்பில் பாங்கில் போட்டிருப்பியள். உங்கே வட்டியும் கூட. ஒரு முதல் ஆகியிருக்கும். காசு மொத்தமாக ஒன்பது லட்சம் வரை இலங்கைக் காசுக்கு வந்திருக்கும் என நினைக்கிறோம். வட்டி யில் நீங்கள் எடுக்கவும். மீதியை எங்களுக்கு அனுப்பிவிடவும். இங்கு சூரிச்சில் வியாபாரம் ஒன்று தொடங்குகிறோம். காசை உடனடியாக இல்லாவிட்டாலும் இரண்டு மாதத்துக்குள் அனுப் பிவிட்டால் போதும். அத்தானுக்குத்தான் சிரமத் தைக் கொடுத்துவிட்டோம். அடிக்கடி வங்கி களுக்கு ஏறிஇறங்க.

மிகுதி ரெலிபோனில்....

இப்படிக்கு,
ரகு – ரவி

கடிதத்தைப் படித்து முடித்தபோது தலையில் பெரிய சுமை ஒன்று வைத்துவிட்டதுபோல் சுமதி உணர்ந்தாள். தன்னையறியாமல் மயங்கி விழுந்து விடுவேனோ என்ற பயம் அவளை ஆட்கொள்ள, பக்கத்திலிருந்த நாற்காலியில் அமர்ந்து சாய்ந்து கொண்டாள். இந்த மனிசன் வந்த காசிலை கொஞ்சத்தையாவது மிச்சம் வைச்சிராத நேரத்திலை பார்த்துக் காசைக் கேக்கிறாங்கள்.

அக்கா என்று என்னைத்தானே நம்பித் தந்தவங்கள். ஒருதாய் வயிற்றுப்பிள்ளையள் எண்டாலும் வாயும் வயிறும் ஏன் கணக்குக் கூட வேறைதானே. கஷ்டப்பட்டு உழைத்த காசை சும்மா விடுவாங்களா? என்று சுமதியின் மனவோட்டங்கள் நான்கு திசையும் அசை போட்டன.

மேசையின் மேல் விரித்து வைத்திருந்த கடிதத்தை, சுதர்சன் கண்டதும் எடுத்து மேலோட்டமாய் வாசித்தான். முகத்தைச் சுழித்தபடி "சுமதி, உன்ரை தம்பிமாருக்குச் சொல்லு. வாங்கின காசு வசதியுள்ள நேரம் தரலாம். அவையின்ரை அவசரத்துக்கு இப்ப காசு இல்லை. இது உனக்கே தெரியும். நீயே இவையளுக்குப் பதில் சொல்லிப்போடு உன்ரை தம்பிமார் போனில் கதைக்கத் துணிவில்லாமல் கடிதம் போட்டுக் கழுத்தை அறுக்கிறாங்கள்." என்ற சுதர்சன், சுமதியின் பதிலை எதிர்பார்க்காமல் வெளியே புறப்படத் தயாரானான். மறுத்துப் பேச மனமில்லாமல் வாசலுக்கு வழியனுப்ப வந்த சுமதியின் முகத்தைச் சுட்டெரிப்பது போல் பார்வையால் அளந்தான். இந்த அமைதியைக் கலைத்தபடி வீட்டு வாசலில் காவல்துறை வண்டியொன்று வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய இரு காவலர் வீட்டின் வாசல்படிக்கு வந்தனர். "சுதர்சன் எண்டு சொல்லுறது நீங்கள் தானே, உங்கள் முதலாளி நீங்கள் அலுவலகத்தில் ஒரு லட்ச ரூபா கையாடியிருக்கிறதாகப் புகார் கொடுத்திருக்கிறார். உங்களைக் கைது செய் கிறோம்." என்று விளக்கியபடி பருமனான தோற்ற முடைய அந்தக் காவல்துறை அதிகாரி கண்ணி மைக்கும் நேரத்தில் சுதர்சினின் கையில் விலங்கை மாட்டினான். இதைச் சற்றும் எதிர்பாராத சுமதியும் சுதர்சனும் திகைத்து நின்றனர். சுதர்சன் "சுமதி எங்க முதலாளி பொய் சொல்லமாட்டார். செல வுக்கு காசில்லாத போது அவரின் இரும்புப் பெட்டி யில் கை வைத்தேன். அவர் என்ன உன்ரை தம்பியா, காசைத்தா எண்டு கடிதம் அனுப்ப" என்று சொல்லிக் கொண்டு காவல்துறையினரையும் முண்டியடித்துக் கொண்டு அவர்களின் வாகனத் தில் ஏற முயன்றான். காவலரும் ஏற வாகனம் புகையைக் கக்கியபடி விருட்டென்று மறைந்தது.

வந்த அழுகையை கையால் மறைத்த சுமதி வீட்டிற்குள் சென்றாள். யன்னலூடாக இதையெல்லாம் வேடிக்கை பார்த்த மகள் சுகிர்தா "அம்மா அம்மா ஏன் அழுறியள்?" என்று சிணுங்கினாள். அழுகையை ஒருவாறு அடக்கிவிட்டாள். மகள் சுகிர்தாவுக்காக. ஆனால் மனமோ உறைந்து கல்லாகிவிட்டிருந்தது.

சுமதி குடும்பத்து எதிர்காலத்தை நினைத்து சுகிர்தாவை அணைத்தபடி சிலையாகி நின்றாள்.

## சாகித்திய விருது



நாடக இலக்கியத்திற்கான சாகித்திய விருதினை மூன்று முறை வென்ற இலங்கையின் மூத்த கலைஞர், நடிப்பின் சிகரம், கலையின் தலைமகன், ஆற்றலின் இலக்கணமாகத் திகழும் திருமிகு கலைஞர் கலைச் செல்வன் அவர்களை வாழ்த்தி மகிழ்கின்றோம்.

சாகித்திய விருது

# அருளானந்தத்தின் 'இந்த வனத்துக்குள்' நாவலுக்கு அரச சாகித்திய விருது



அண்மையில் நடைபெற்ற 2015 அரச விருது வழங்கல் விழாவிலே 2014 இல் வெளிவந்த தலைசிறந்த சுய நாவல் நூலுக்கான தெரிவில் வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட நீ.பி.அருளானந் தத்தின் "இந்த வனத்துக்குள்" எனும் நூல் அரச சாகித்திய விருதினைப் பெற்றிருக்கிறது.

இதற்கு முன்பும் இவர் எழுதிய இரண்டு நாவலுக்கும் அரச சாகித்திய விருது கிடைத்திருக்கிறது. இவற்றைத் தவிர "கறுப்பு ஞாயிறு" எனும் சிறுகதைத் தொகுதி நூலுக்கும் அரச சாகித்திய விருதினை இவர் பெற்றிருக்கிறார்.

இவற்றுடன் "கடந்து போகுதல்" என்ற கவிதைத் தொகுதிக்கும் "துயரம் சுமப்பவர்கள்" என்ற நாவலுக்குமான விருதுகளை வடமாகாணக் கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு இவருக்கு வழங்கிக் கௌரவித்துள்ளது.

இற்றைவரை எட்டு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டிருக்கிறார். இச்சிறுகதைத் தொகுதிகளிலேயே மொத்தமாக இவர் எழுதிய 116 சிறுகதைகள் அடங்குகின்றன.

சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட தமிழ் எழுத்தாளர் வல்லிக் கண்ணன் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியில் முதல் பரிசினையும் பெற்றிருந்தார். "அன்புப் பாலம்" சஞ்சிகை நடத்திய இச்சிறுகதைப் போட்டியிற்கான 900 சிறுகதைகளிலிருந்தே இவருக்கான முதல் பரிசானது தெரிவாகியிருந்தது. இதற்கான விருதினை ஞானபீடம் பரிசுபெற்ற, அண்மையில் காலமாகிய ஜெயகாந்தனே தன் இல்லத்தில் வைத்து அவருக்கு வழங்கிக் கௌரவித்தமை சிறப்பு அம்சமாகும்.

இவரது படைப்புகளில் சில அரச இலக்கிய விருதிற்காக கருத்திற் கொள்ளப்பட்டு இறுதி சுற்றிற்காக அவை விதந்துரைக்கப்பட்டும் சான்றிதழ்கள் பெற்றிருக்கின்றன. இம்முறையில் "பதினான்காம் நாள் சந்திரன்" எனும் நாவல் நூலுக்கும் அத்தகைய சான்றிதழை இவர் பெற்றிருக்கிறார்.

நீ.பி.அருளானந்தம் இதுவரை எட்டு சிறுகதைத் தொகுதிகளையும் மூன்று கவிதைத் தொகுதிகளையும் நான்கு நாவல்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

இவரது பல நூல்கள் மறுபதிப்புப் பெற்றும் வெளியாகியிருக்கின்றன. இவரது சில சிறுகதைகள் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு நூல் உருப்பெற்று வெளியாகியுள்ளன.

இவர், விளிம்பு நிலை மாந்தரின் வாழ்வியலை தன் படைப்பிலக்கிய ஆக்கத்துக்குள் கொண்டு வந்து அவர்களது துன்ப துயரங்களை யாவரும் படித்து அறிந்து உணர வேண்டும் என்ற குறிக்கோளுடன் எழுதிவரும் எழுத்தாளராவார்.

நாடகம், இலக்கியம் சம்பந்தமான துறைகளில் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகள் கலைப் பணியாற்றி வந்தமைக்காக நீ.பி.அருளானந்தத்துக்கு கலாபூஷண விருதும் கிடைத்துள்ளது. எழுத்துறையில் மட்டுமல்லாமல் நாடகத் துறையிலும் முத்திரை பதித்த சாதனையாளரை 'தாயக ஒலி' வாழ்த்தி மகிழ்கிறது.

கதிரவேலு மகாதேவா

# தமிழ்த் திரை உலகின் 'இசைக்குயில் பி.சுசீலா'



எண்பது ஆண்டுகளைக் கடந்துவிட்ட தமிழக சினிமாத்துறையின் அத்தியாயங்களில் சுசீலா என்ற முன்றெழுத்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. 1950களின் தொடக்கத்தில் திரைப்படங்களில் பாடல்களுக்கு பின்னணி இசை அதிகமாகவே இடம்பெறத் தொடங்கியது. அன்று முதல் இன்றுவரை ஏராளமான பெண் பாடகிகள் பாடல்களைப் பாடியுள்ளனர். அவர்களுள் முதல் வரிசையில் இருப்பவர் பி.சுசீலா எனலாம். 1935 இல் ஆந்திர மாநிலம் விஜயநகரத்தில் வழக்கறிஞர் முகுந்தராவ் தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்து சிறுவயதிலேயே சங்கீதத்தை முறைப்படி கற்றார்.

பின்னர் வெங்கடசாமி முதலியாரிடம் இசை பயின்று சென்னை வித்வத் சபையிலும் அகில இந்திய வானொலியிலும் பாடினார். 1953 இல் பிரகாஷ் புரொடக்சன்ஸ் 'பெற்றதாய்' படத்தில் ஏ.எம்.ராஜாவுடன் இணைந்து 'ஏதுக்கோ அழைத்தாய் ஏதுக்கோ' என்ற ஜோடிப் பாடலை பெண்டியாலா என்பவரின் இசையில் பாடியதுதான் இவரது முதல் தமிழ்த் திரையிசைப் பாடலாகும். சுசீலா அம்மையார் அண்மையில் இலங்கை வந்திருந்தபோது இலங்கை வானொலி நிலையத்தில் இந்தப் பாடலைக் கேட்டு மனம் நெகிழ்ந்தார். இந்தியாவில் இந்த இசைத் தட்டு அவருக்குக் கிடைக்கவில்லை.

இசையமைப்பாளர் ரி.ஆர்.பாப்பாவின் உதவியுடன் ஏ.வி.எம். ஸ்ருடியோவில் தமிழ் உச்சரிப்பினை பயிற்சி மூலம் பெற்றார். 1955 இல் 'கணவனே கண் கண்ட தெய்வம்' படத்தில் ஏ.ராமராவ் ஹேமந்த ராவ் இசையில் 'அன்பில் மலர்ந்த நல்ரோஜா', 'உன்னைக் கண் தேடுதே', 'எந்தன் உள்ளம் துள்ளி விளையாடுவதும் ஏனோ' போன்ற பாடல்களில் பாடி புகழ்பெற்றார். சாந்தமும், சௌஜன்யமும், விரசமில்லாத சரசமும் இவரது குரலில் துலங்கின. விஜயாவின் 'மிஸ்ஸியம்மா' படத்தில் இவர் தனித்துப் பாடிய 'அறியாப் பருவமடா', ஏ.எம்.ராஜாவுடன் இணைந்து பாடிய 'பிருந்தவனமும் நந்தகுமாரனும்' பாடல்கள் இன்றும் விரும்பிக் கேட்கப்படுபவை. ராஜேஸ்ராவ் இசையமைத்திருந்தார். அமரதீபம் படத்தில் காமாட்சிசுந்தரம் இயற்றி சலபதிராவ் இசையில் ஏ.எம்.ராஜாவுடன் இணைந்து பாடிய 'தேன் உண்ணும் வண்டு' என்ற பாடல் அன்று பிரபல்யம் பெற்றிருந்த பி.ஏ.பெரியநாயகி, பி.லீலா போன்ற பாடகிகளைப் பின்தள்ளும் அளவுக்கு ரசிகர்களை ஈர்த்தது. புதையல் படத்தில் (1957) சி.எஸ்.ஜெயராமனுடன் பாடிய 'விண்ணோடும் முகிலோடும்' பாடலும் 1958 இல் எம்.எஸ்.வி.இசையில் பதிபக்தி படத்தில் வரும் 'சின்னம் சிறு கண்மலர்' பாடலும் இவருக்கு நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தன. 'அன்னையின் ஆணை' படத்தில் ரி.எம்.எஸ் உடன் இணைந்து பாடிய 'கனவின் மாயா லோகத்திலே' பாடலும், உத்தமபுத்திரன் படத்தில் 'முல்லைமலர் மேலே' பாடலும் வெற்றிபெற்று தொடர்ந்தும் இந்த ஜோடிப் பாடகர்கள் நூற்றுக்கணக்கான பாடல்களை திரைப்படங்களில் பாடி பெருமை சேர்க்க வழிவகுத்தன.

சுசீலாவின் துள்ளல்நடை இப்பாடல்களுக்கு மெருகூட்டின. 1957 இல் 'தங்கமலை ரகசியம்' படத்தில் 'அமுதை பொழியும் நிலவே', 1958 இல் 'அன்பு எங்கே'? படத்தில் வேதாவின் இசையில் பாடிய "எத்தனை கோடி பணமிருந்தாலும்" போன்ற பாடல்கள் சாகாவரம் பெற்றவை. 1960 களில் தமிழ் சினிமாவில் 60 வீதமான பெண்குரல் சுசீலாவினுடையதாகும். தமிழ் சினிமாவில் புதிய (Melody)

இசையமைப்பாளர் ஏ.எம்.ராஜா 1959 இல் முதலில் இசையமைத்த 'கல்யாண பரிசு' படத்தில் சுசீலா பாடிய அத்தனை பாடல்களும் அற்புதமானவை. சில காரணங்களால் ஏ.எம்.ராஜா இசையமைப்பதை நிறுத்தியதால் அவருடைய மனைவி ஜிக்கியும் பாடுவதைக் குறைத்தபோது அந்த வாய்ப்புகள் சுசீலாவுக்கே கிடைத்தன. எல்.ஆர்.ஈஸ்வரி, ஜமுனாராணி, ஜானகி போன்றோரும் முன்னணி வகுத்தனர். ஆனால் சுசீலாவின் வெற்றிநடை பாதிக்கப்படவில்லை. சூழலுக்கு ஏற்றவாறு உருகும், பெருகும், ஊஞ்சலாடும் உணர்ச்சிக் கொந்தளிப்பின் ஏற்ற இறக்கங்களை வெளிப்படுத்தும் குரலினால் ரம்மியம் குறையாத நூற்றுக்கணக்கான பாடல்களை எல்லா இசையமைப்பாளர்களின் உதவியுடனும் தந்தார். 'ஆடவந்த தெய்வம்' படத்தில் கே.வி.மகாதேவன் இசையில் அவர் பாடிய விதம் மெய்சிலிர்க்க வைக்கும். வேறு எந்தப் பாடகிக்கும் முடியாத கைவந்த கலை அது. 1960களில் பீம்சிங் அவர்களின் 'ப' வரிசைப் படங்களில் எம்.எஸ்.வி. - கண்ணதாசன் - ரி.எம்.எஸ். கூட்டு படைத்த அத்தனை பாடல்களிலும் சுசீலா பங்களிப்புச் செய்து படங்களின் வெற்றிக்கு வழிவகுத்தார். 1965 இல் கே.வி.மகாதேவன் இசையில் 'இதயக்கமலம்' படத்திலும், 1969 இல் எம்.எஸ்.வி.யின் இசையில் 'சாந்தி நிலையம்' படத்திலும் பாடிய அத்தனை பாடல்களும் அவரைத் தேசிய அளவுக்கு உயர்த்தின. 1968 இல் 'உயர்ந்த மனிதன் படத்தில்' வரும் "பால் போலவே" பாடல் மூலம் முதன் முதலாக தேசிய விருது பெற்றார். தொடர்ந்து மேலும் பல விருதுகளைப் பெற்று, 1978 இல் கலைமாமணி விருதினையும் பின்னர் இந்திய அரசு வழங்கிய பத்மஸ்ரீ விருதினையும் பெற்றார். பி.பி.ஸ்ரீநிவாஸ், சீர்காழி, ரி.ஆர்.மகாலிங்கம், கண்டசாலா, பாலசுப்பிரமணியம், ஜேசுதாஸ், வாசுதேவன், ஜெயச்சந்திரன் போன்ற பாடகர்களுடன் இணைந்து பல ஜோடிப் பாடல்களைத் தந்தார். 1970 இல் பாலச்சந்தரின் 'காவியத் தலைவி' என்ற படத்தில் எம்.எஸ்.வி. இசையில் "கவிதைகள் எழுதிய காவியத் தலைவி" என்ற பாடல் மூலம் தாமும் ஒரு காவியத் தலைவிதான் என்பதை நிரூபித்தார்.

இத்தகைய சிறப்புக்கள் பெற்ற பின்னணிப் பாடகி சுசீலாவை திரையுலகப் பிரமுகர்கள், பாடகர்கள் மட்டுமல்ல வடநாட்டுப் பாடகர்களான லதா, ஆஷா போன்ஸ்லே போன்றோரும் பாராட்டியுள்ளனர். அவரது குரல்வளமும், பாடல்களும் தமிழ்த் திரையுலகத்திற்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்திற்கும் பெருமை சேர்ப்பவை எனலாம்.

## மனநலப் பாதிப்பை எதிர்கொள்ளும் சிறுவர்கள்

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக உலகம் பெருமைப்பட்டுக்கொண்ட போதிலும் மக்கள் பலவகையான பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றார்கள் என்பதை பல செயற் பாடுகள் உணர்த்தி வருகின்றன.

தினசரி மூன்று மணித்தியாலத்துக்கு அதிகமான நேரம் பேஸ்புக்(முகப்புத்தகம்), டுவிட்டர் போன்ற சமூக வலைத் தளங்களைப் பார்வையிடும் சிறுவர்களுக்கு ஏனையவர்களுடன் ஒப்பிடுகையில் மனநலப் பாதிப்புக்கள் ஏற்படும் அபாயம் இரு மடங்கு அதிகம் என பிரித்தானிய தேசிய புள்ளிவிவர அலுவலகத்தால் வெளியிடப்பட்ட ஆய்வு கூறி நிற்கின்றது.

பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைத் தளங்களைப் பார்வையிடுவதில் நேரத்தைச் செலவிடும் சிறுவர்கள் மத்தியில் உணர்வு ரீதியான பிரச்சினைகள், நடத்தை ஒழுங்கீனம் மற்றும் வழமைக்கு மாறான பரபரப்புச் செயற்பாடுகள் என்பன காணப்படுகின்றன என அந்த ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளின் விடயங்களில் அக்கறை கொண்டு அவர்களைப் புத்திசாதுரியமான பிள்ளைகளாக மாற்ற உதவுங்கள்.

- தேடலோன்

உங்கள் விருந்து

# தைப்பொங்கல் சிறப்பிதழாக 'தாயக ஒலி - ஓர் அறிமுகம்'




'தாயக ஒலி' தை – மாசி இதழ் 48 பக்கங்களைக் கொண்டு தைப்பொங்கல் பண்டிகையின் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. சஞ்சிகையின் முகப்பு அட்டை தமிழ் பாரம்பரியத்தையும் கலாசார பின்னணியையும் பறைசாற்றும் வகையில் பண்டிகை குறித்த வண்ணமயமான வடிவமைப்போடு அமையப்பெற்றுள்ளமை சிறப்பு. இம்முறை சஞ்சிகையின் முதற்படைப்பு 'அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள்' குறித்த விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தும் பதிவாக உள்ளது.

ஈழத்தின் தலைசிறந்த நாடகக் கலைஞர் நடிகமணி வி.வி.வைரமுத்து குறித்த பதிவு இனிவரும் கலைஞர்களுக்கு நல்லதொரு வழிகாட்டி என்றே கூறவேண்டும். ஒவ்வொரு இதழிலும் கலை, கலாசாரம், சமூகம், அரசியல், சினிமா, கல்வி என சகல கோணத்திற்கும் முக்கியத்துவமளிக்கும் தாயக ஒலியின் விளையாட்டு தகவல்களும் வரவேற்கத்தக்கன.

மொத்தத்தில் ஒரு படைப்பின் தெளிவான மொழி நடையும், வடிவமைப்புத் திறனும், தகவல்களை இந்நூற்றாண்டுக்கு ஏற்ற விதத்தில் விதந்துரைக்கும் நிலைப்பாடுமே ஒரு படைப்பை வாசகன் மத்தியில் கொண்டு நிறுத்தும். அந்த வகையில் தாயக ஒலி தன் பணியை வெளிவந்துள்ள அனைத்து இதழ்களிலும் நிறைவாகவே செய்துள்ளது.

சஞ்சிகையில் இறுதிப் பக்கங்களை அலங்கரித்துள்ள கே.யோகேந்திரனின் ஓவியங்களும் கலைக்கு மகுடம் சூட்டுவதாகவே உள்ளது. ஒவ்வொரு ஓவியத்திலும் உயிர்துடிப்பு மிகையாகவே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

தொடர்ந்து முயற்சிகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் இவ்வாறான வெளியீடுகள் தொடர்ச்சியாக எமது கரங்களில் கிடைக்கப்பெற வேண்டும் என வாழ்த்துகின்றோம். ●

ஆர்.எல்.
'சங்கமம்'.

# மாற்றம் கண்டுள்ள 'தாயக ஒலி'

'தாயக ஒலி'யைத் தொடர்ந்து படித்துவரும் வாசகன் என்ற வகையில், அதன் தொடர் வளர்ச்சியில் புதிய புதிய மாற்றங்களைக் காணமுடிந்துள்ளது. பலவிடயதானங்களைத் தாங்கிவரும் தாயக ஒலியில் முழுமையான சமூகப் பார்வை வெளிப்படுத்தப்படுகின்றது. அறிவுக்கும், சிந்தனைக்கும், கருத்துக்கும் விருந்து படைக்கும் 'தாயக ஒலி'யின் பாதை தனித்துவமானது. தொடரட்டும் அதன் பணி, பொங்கல் மலரின் அட்டைப் படம் அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளது. பேனா முனையிலிருந்து, ஆசிரியர் காட்டும் சமூக பிரச்சினைகள் அத்தியாவசியமாகக் களையப்படவேண்டும். நடிகமணி வி.வி.வைரமுத்து பற்றிய கட்டுரை அவரைப் பற்றிய பல தகவல்களைத் தந்து நிற்கின்றது.

'உடைத்த உறவுகளும் உலுப்பிய சோகங்களும்' என்னும் இணுவை வந்தனின் சிறுகதை, இங்கு இருக்கும் பெற்றோருக்கும், வெளிநாடுகளில் வாழுகின்ற பிள்ளைகளுக்குமிடையிலான எண்ணப் போக்குகளை யதார்த்தமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது. நீண்ட காலத்திற்குப் பிறகு ஓர் அற்புதமான சிறுகதையை வாசித்த மனநிறைவு ஏற்பட்டுள்ளது. உண்மைக் கதைகளை எவரும் எழுதலாம். ஆனால் இந்தக் கதை ஆசிரியரின் எழுத்து நடை, சம்பவங்களின் தொகுப்பு எல்லாமே அற்புதம். அவருக்கு எனது பாராட்டுக்கள்.

'கேட்டதைச் சொல்ல வந்தோம்' என்ற பகுதி மூலம் பலபட்ட விடயங்ளை அறியமுடிந்துள்ளது. 'நூல் அறிமுகங்கள்' ஒவ்வொன்றும் நூலைப் புரிந்து கொள்ள உதவியுள்ளது. பென்சில் ஓவியரின் ஓவியங்கள் உண்மையிலேயே அழகாக இருக்கின்றன. அக்கரைச் சக்தியின் 'புத்தாண்டுச் சிந்தனை' என்னும் கவிதை பல நல்ல கருத்துக்களைச் சொல்லி நிற்கின்றது. 'அறிந்தவையும் தெரிந்தவையும்', 'சிரிகதைகள்', 'உங்கள் விருந்து' ஆகியன சஞ்சிகைக்கு பொலிவைக் கொடுத்துள்ளன. மொத்தத்தில் 'தாயக ஒலி' பல அம்சங்களை உள்ளடக்கிய ஓர் அற்புதக் கருவூலம். புகழ்ச்சியல்ல உண்மை. ●

மா.தவநேசன்,
எருக்கலம்பிட்டி.

## நீத்தார் நினைவஞ்சலி

ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம்
எண்-75, லோரன்ஸ் வீதி,
கொழும்பு - 04.

Eelaththu Thiruneri Thamil Manram
No. 75, Lorensz Road,
Colombo - 04.

" பொய்கண்டார்காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ"

## அனுதாபத் தீர்மானம்



எமது மன்றத்தின் முன்னாள் உப தலைவரும், ஆன்மீக சைவத் தமிழ்த் தொண்டரும், இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டு தனது வாழ்நாள் முழுவதும் சைவ உணவோடு வாழ்ந்து, மற்றையவர்களுக்கு உதவ வேண்டுமென்ற மனப்பாங்கு கொண்டவருமாகவிருந்த ஆ.இராசரத்தினம் அவர்கள் லண்டன் மாநகரில், தமது பிள்ளைகளுடன் தங்கி இருந்து நல்ல பணிகளாற்றி சிவபதம் அடைந்த செய்தியை 'தாயக ஒலி' மூலம் அறிந்து கொண்டோம்.

மேற்படி மன்றத்தின் 02.01.2016 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அன்னாருடைய குடும்பத்தாருக்கும், மற்றைய உறவினர்களுக்கும் எமது மன்றத்தின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அன்னார் சார்பாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தியதையும் அன்னாருடைய ஆத்மா மாணிக்க விநாயகருடைய பாதாரவிந்தத்தை அடைய வேண்டும் என்றும் எமது மன்றத் தலைவர் திருப்பணித் தவமணி சி.தியாகராசா ( S.T.R ) அவர்கள் அனுதாபத் தீர்மானமாகக் கொண்டு வந்து உரையாற்றும் போது தெரிவித்தார்.

மன்றத்தின் பணியில்
சி.கணேசன் (செயலாளர்)

# கண்ணீர் அஞ்சலி

21 - 03 - 1944



02 - 02 - 2016

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர்

## உயர்திரு. முத்தையா கதிர்காமநாதன்

உயர்திரு. முத்தையா கதிர்காமநாதன் அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியில் அன்னார் காட்டிய அளப்பரிய சேவையை என்றும் மறக்கமுடியாது. அர்ப்பணிப்பு, சகிப்புத்தன்மை, புன்முறுவல் ஆகியன எவரிடமும் ஒன்று சேரக் காண முடியாத இவரின் தனித்துவங்களாகும்.

1998 ஆம் ஆண்டு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினராக இணைந்துகொண்ட இவர், ஆட்சிக்குழு உறுப்பினராக, துணைத் தலைவராக, மூன்று தடவைகள் தலைவராகப் பதவி வகித்து மகத்தான பணிகளை சங்கம் பெருமைப்படும் வகையில் ஆற்றியுள்ளார்.

சங்கம் முன்னெடுக்கவுள்ள சிலப்பதிகாரப் பெருவிழா, உலகத் தமிழ் இலக்கிய மாநாடு, அடுத்த வருடம் நடைபெற வேண்டிய சங்கத்தின் 75 ஆவது ஆண்டு விழா என்பவற்றுக்கான திட்டங்களை முன்னெடுப்பதில் முனைப்பாக இருந்தார்.

சங்கத்தில் மின்தூக்கி இணைப்பதற்கான முன் ஏற்பாடுகளிலும், சங்கத்துக்குச் சொந்தமான மாங்குளம் காணியில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளிலும் தம்மை ஈடுபடுத்த முனைந்தார்.

இத்தகைய செயல்வீரன் 17.01.2016 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற மாதாந்த ஆட்சிக் குழுக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது மயக்கமுற்ற நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

சிகிச்சை பயனளிக்காத நிலையில் 02.02.2016 அன்று தமது 71 ஆவது வயதில் இயற்கை எய்தினார். இது, தாங்கமுடியாத பெரு இழப்பு.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவர் தம் துணைவியாருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், கொழும்புத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியாகக் காணிக்கையாக்குகின்றோம்.

'எப்பவோ முடிந்த காரியம்'

தம்பு சிவசுப்பிரமணியம்
( துணைத் தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

# இலண்டன் மாநகரில் இடம்பெற்ற கர்நாடக இசை அரங்கேற்றம்

## செல்வி றுக்ஷினாவின் இசை மழை



தொன்மையும் முதன்மையும் பெற்ற தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் தன்னகத்தே கொண்டு வளர்ந்து வருகின்றது. தென்னாட்டில் வழங்கி வந்த தமிழ் இசையே பின் கர்நாடக இசை என்று வழங்கலாயிற்று என்று இசை ஆய்வாளர்கள் கருத்துரைத்துள்ளனர். இன்று கர்நாடக இசை அதன் சிறப்பு நோக்கிய அவதானிப்புடன் உலகெங்கும் பலராலும் மதிக்கப்படும் நிலையில் இருப்பது பெருமையே! அதேவேளை தமிழ் இசையின் பெருமையையும் நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

இத்தகைய பெருமைக்குரிய கர்நாடக இசையை இலண்டனில் வாழும் எம்மவர்கள் போற்றிப் பாது காத்து வருகின்றார்கள். அந்த வகையில் இரவீந்திரன் – கௌரி தம்பதியினரின் செல்வப்புதல்வியும், காலஞ்சென்ற வவுனியா மகா வித்தியாலய முன்னாள் அதிபர் வேலுப்பிள்ளை சிவஞானம் – தன லட்சுமி , கனகராயன் குளத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசையா தம்பதியினரின் பேத்தியுமான செல்வி றுக்ஷினாவின் கர்நாடக இசை அரங்கேற்றம் இலண்டன் விம்பிள்டன் ஸ்ரீகணபதி தேவஸ் தான மண்டபத்தில் இறை ஆசியுடன் கடந்த ஒக்டோபர் மாதம் நடந்தேறியது.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத்தமிழர்கள் தமது கலை, கலாசாரம், பண்பாடுகளைக் கட்டிக்காத்து வருவது உண்மையிலே போற்றப்பட வேண்டிய விடயமாகும்.

அத்தகைய சூழ்நிலையில் இரவீந்திரன் – கௌரி தம்பதியினர் தங்கள் மகள் றுக்ஷினாவை கர்நாடக இசையின்பால் ஊக்குவித்து சிறப்பான குருவிடம் பயிற்றுவித்து அரங்கேற்றம் காண வைத்துள்ளனர்.

பெற்றவர்களின் விருப்பத்தினை ஏற்று குரு பக்தியுடன் இசையை முறையாகக் கற்று அரங்கேற்றம் கண்டு நிற்கும் றுக்ஷினா பாராட்டுக்குரியவர்.

ஸ்ரீகணபதி கோவிலில் கலாஜோதி ஸ்ரீமதி மனோரமா சங்கீத வகுப்புக்களை நடத்தி வந்த

வேளையில் அவரிடம் சிறு பராயத்திலேயே செல்வி றுக்ஷினா மாணவியாகச் சேர்ந்து தொடர்ந்து பதினொரு ஆண்டுகள் முறையாகச் சங்கீதத்தைப் பயின்று குருவின் பதின்மூன்றாவது அரங்கேற்ற மாணவியாக முகிழ்ந்து நிற்கின்றார். இசைஞானம் மிக்கவராக விளங்கிய றுக்ஷினா தனது கணீர் என்ற குரலில் சுதி தவறாது தாள சுத்தத்துடன் அரங்கேற்ற இசைக்கச்சேரியை நிகழ்த்திய போது மண்டபம் நிறைந்த இரசிகர்கள் கூட்டம் அவரின் இசையில் லயித்து இருந்தமைஅவதானத்துக்குரிய விசேட அம்சமாகும்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"என்பார்கள். சிறு வயது தொடக்கம் சங்கீதத்தை முறை யாகக்கற்று வந்தமையால் இளம் வயதிலேயே சிறந்த சங்கீத ஞானத்தை பெற்றவரான செல்வி றுக் ஷினா இசை மழை பொழிந்து பலரின் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டார். பெற்றோரின் ஆசீர்வாத மும் குருவின் அனுக்கிரகமும் றுக்ஷினாவின் இசை ஞானத்திற்கு உந்து சக்தியாக அமைந்துள்ளமை யைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

மிகப்பிரபல்யம் பெற்ற குயிலுவக் கலைஞர்களான வயலின் வித்துவான் ஸ்ரீ.கே.ரி. சிவகணேஸ் வயலின் இசைக்க, லயஞான நாதமணி ஸ்ரீ.எம். பாலச்சந்தர் மிருதங்கம் வாசிக்க, தபேலா கலைஞர் ஸ்ரீ சஞ்யுசாஹுய் தமது வித்துவத்திறமையை வெளிப்படுத்த, செல்வி சாய்சாலினி கருணானந்தன் நெறிப்படுத்த, குருவின் கைத்தாள அசைவுக்கு ஏற்ப இசையை லயித்து தனது அரங்கேற்றக் கச் சேரியை றுக்ஷினா ஆரம்பித்தார்.

முதலில் வர்ணம். திருவாத்தியாயர் தயாஹுயா இயற்றிய கருநிம்பா என்னும் வர்ணத்தை சஹானா இராகத்தில் பாடி சபையோரை மகிழ்வித்தார். தொடர்ந்து பெரியசாமி தூதன் மைசூர் மகாராஜா ஜீ.என். பாலசுப்பிரமணியம் ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் ஆகியோரால் இயற்றப்பட்ட கிருதிகளை இராகத்திற்கு ஏற்ற வகையில் பாடி தமது ஆற்றலை வெளிக்கொணர்ந்தார்.

இடைவேளையைத் தொடர்ந்து பாவநாசம் சிவன் சண்முகப்பிரியா இராகத்தில் இயற்றிய சரவண பவன் என்று ஆரம்பிக்கும் கிருதியை இசைத்து சபையோரின் கைதட்டல் பாராட்டைப் பெற்றுக் கொண டார். அம்புஜம் கிருஷ்ணா இயற்றிய பஜன் ஏழாவது உருப்படியாக இடம்பெற்றது. தொடர்ந்து ஸ்ரீ புரன்தரதாசர் இயற்றிய பாக்ய லக்ஸ்மி என்னும் கிருதியை மத்தியமவதி இராகம் ஆதிதாளத்தில் இசைத்து தமது இசை ஞானத்தை வெளிப்படுத்தி சபையோரை மகிழ்வித்தார். ஸ்ரீராமசந்திரா என்று தொடங்கும் பஜன் இசைக்கப்பட்டு இறுதியாக தில்லானாவுடன் றுக்ஷினாவின் அரங்கேற்ற கர்நாடக இசைக்கச்சேரி இனிதே நிறைவெய்தியது.

நன்றி நவில்ல் நிகழ்வில் அரங்கேற்ற நிகழ்வைச் சிறப்பித்த பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர்கள் ஆகியோருக்கும் குரு மற்றும் குயிலுவக் கலைஞர்களுக்கும் வருகை தந்த கலா இரசிகர்களுக்கும் நண்பர்கள், உறவினர்களுக்கும் அரங்கேற்ற விழாவின் வெற்றிக்கு உழைத்த அத்தனை நல்லுள்ளங்களுக்கும் ஒலி, ஒளி ஒப்பனைக் கலைஞர்களுக்கும் சிறப்பான முறையில் றுக்ஷினா நன்றிகளை அடக்கத்துடன் தெரிவித்தார். அரங்கேற்றம் கண்ட இசை வல்லாளர் றுக்ஷி னாவை வருகை தந்தவர்கள் வாழ்த்தி ஆசீர்வதித்துத் தத்தமது மகிழ்ச்சியை தெரிவித்த காட்சி உண்மை யிலேயே மனதை நெகிழ வைத்தது. மகிழ்ச்சிப் பிரவாகத்தில் இசைச் செல்வி றுக்ஷினா நன்றியுடன் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

வவுனியூர் இரா. உதயணன்,
இலண்டன்.

# முழுமையான மனிதர்களாக மிளிர முடியும்

எமது மாணவர்கள் கல்வியில் எவ்வளவு ஆர்வம் காட்டுகின்றார்களோ அதே அளவு ஆர்வத்தை விளையாட்டிலும் காட்டுவதன் மூலம் மிகச் சிறந்த அறிவையும் உடல் வலிமையையும் பெற்று முழுமை யான மனிதர்களாக மிளிர்ந்து மற்றவர்களுக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ முடியும்.

வடபகுதியிலுள்ள மாணவர்களில் சிலர் கல்வியில் மிகச் சிறப்பாக ஈடுபடுகின்றபோதிலும் விளை யாட்டுத் துறையிலோ அல்லது ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலோ அக்கறை காட்டாது புத்தகப் பூச்சிகளாக வாழ்கின்றனர். இன்னொரு சாரார் விளையாட்டுத்துறையில் சாதனையாளர் களாக மிளிர்கின்ற போதிலும் கல்வியில் எதுவித கவனமும் செலுத்தாது இருந்து விடுகின்றனர். இவ்விரு சாராரும் வாழ்க்கையில் தோற்றுப் போனவர்களாகவே கருதப்பட வேண்டும். வெறுமனே கல்வியை மட்டும் கருத்தாகக் கொண்டு வேறு எந்த விளையாட்டுத் துறைகளிலும் ஈடுபடாதவர்கள் தேக பலம் குன்றி உடல் வலுவற்ற நிலையில் மூளை வளத்தை மட்டும் கொண்டவர்களாகக் காணப்படுவர். இவர்கள் கல்வி தவிர்ந்த ஏனைய எந்தச் செயற்பாட்டுக்கும் பயனற்றவர்களாகவே காணப்படுவர்.

அதேபோன்று விளையாட்டில் மட்டும் அதீத அக்கறை காட்டுகின்ற மாணவ மாணவியர் கடுமையான உடற்பயிற்சியின் ஊடாக வலிமையான உடற்தோற்றத்தையும் தைரியத்தையும் கொண்டிருப்பார்கள். ஆனாலும் கல்வியறிவு குறைவான நிலையில் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் இவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும்.

எனவே வடபகுதி மாணவர்கள் கல்வியில் எவ்வளவு தூரம் அக்கறை காட்டுகின்றார்களோ அதேயளவு விளையாட்டுத் துறையிலும் ஈடுபடல்வேண்டும். அதன் மூலம் அவர்களின் மூளை விருத்தி மேலோங்கும். கல்வி நடவடிக்கைகளில் மிகவும் சிறப்பாகச் செயற்படுவார்கள்.

தற்பொழுது எமது மாகாணம் நாட்டில் ஒரு முக்கிய மாகாணமாகப் பரிணமித்து வெளிவரத் தொடங்கியுள்ளது. எமது இளைஞர், யுவதிகள் நாட்டின் எப்பகுதியில் உள்ளவர்களுடனும் போட்டி போட்டு வெல்லக்கூடியவர்கள் என்ற பெருமை எமக்குண்டு. எமது மாணவர்கள் விளையாட்டுத் துறை களில் சிறந்து விளங்குகின்ற போதிலும் கடந்த மூன்று தசாப்தங்களாக இப்பகுதியில் இடம்பெற்ற கொடிய யுத்தத்தின் காரணமாக மாணவர்கள் தமது விளையாட்டுத்துறைகளில் மிகக்கூடிய ஆர்வம் காட்டமுடியாது முடங்கி இருந்தமை இப்போதைய விளையாட்டுக்களின் பெறுபேறுகளில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஏனைய மாகாணங்களிலுள்ள வீர வீராங்கனைகளுக்கு உள்ள நவீன வசதிகள் எமது மாகாண மாணவர்களுக்கும் கிட்ட வேண்டும். 2016 ஆம் ஆண்டு நவீன யுத்திகளுடன் கூடிய விளையாட்டு ஆண்டாக மலர வாழ்த்துகிறேன். எமது வீர வீராங்கனைகளை சர்வதேசத்திற்கு உயர்த்துவதற்கான முழு முயற்சிகளிலும் நாம் அனைவரும் விளையாட்டுத் திணைக்களத்துடன் இணைந்து செயற்படுத்து வோம்.

சி.வி.விக்னேஸ்வரன்

( வடமாகாண முதலமைச்சர் ).

# கல்வியோடு ஆன்மீகம், உளவியல் துறைகளும் இணைய வேண்டும்

கல்வியுடன் ஆன்மீகம், உளவியல் ஆகிய துறைகளும் இணைந்து அமைய வேண்டும். இவ்வாறு அமையும்போதே அதனை மனித அபிவிருத்தியாகக் கருதமுடியும்.

மனித அபிவிருத்தியானது மூன்று விடயங்களில் தங்கியிருக்கின்றன. முதலாவது ஆன்மீகத் துறையில் முன்னேறுதல். இதனை வணக்கஸ்தலங்கள், அறநெறிப் பாடசாலைகள், மதப்பெரியார்களின் போதனைகள் மூலமாகப் பெற்றுக் கொள்ள முடியும். இரண்டாது அறிவு சார்ந்த அபிவிருத்தியாகும். இதனைப் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், கலாசாலைகள் மற்றும் நூலகங்களின் மூலமாகப் பெற்றுக் கொள்ள முடியும். மூன்றாவது விடயமாக உளவியல் அபிவிருத்தியாகக் காணப்படுகின்றது.

உளவியல் வளர்ச்சியில் பக்குவத்தைப் பேணுவதற்காக உடற்பயிற்சிகள் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து ஈடுபடும்போது உடல் ஆரோக்கியம் பேணப்படுகின்றது. மேற்குறித்த மூன்று விடயங்களும் ஒரு மனிதரில் அமையும் போதே அம்மனிதர் முன்னேற்றம் அடைவார்.

மேற்கூறப்பட்ட மூன்று விடயங்களில் மூன்றாவதாகக் கூறப்பட்ட உளவியல் அபிவிருத்திக்கான இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் எமது பிரதேசங்களில் மிகவும் பலவீனமான நிலையிலேயே காணப்படுவது மிகவும் ஆபத்தான விடயமாகவே நோக்க வேண்டியுள்ளது.

இன்று அதிகமான பெற்றோர், கல்விக்குக் கொடுக்கின்ற முன்னுரிமையை வேறு எதற்கும் வழங்குவதில்லை. வெறும் கல்வியின் மூலமாக ஒரு மனிதனால் எதனையும் சாதிக்க முடியாது. ஒரு மாணவின் ஆளுமை விருத்தி, தலைமைத்துவப் பயிற்சி, சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, விடாமுயற்சி, சவால்களை எதிர்கொள்ளும் மனநிலை மற்றும் உடல், உள ஆரோக்கியம் என்பன கல்வியோடு சேர்ந்து வளர்க்கப்படல் வேண்டும். அப்போதுதான் ஒரு முழுமையான மனிதனாக அவனால் செயலாற்ற முடியும்.

விளையாட்டுக்களின் மூலம் விளையாட்டு வீரர்களுக்கு உடல் ஆரோக்கியம் மட்டுமன்றி சகிப்புத் தன்மை, வெற்றி – தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் தன்மை, இனங்களுக்கிடையிலான பரஸ்பர ஒற்றுமை உட்பட ஏராளமான நன்மைகள் கிடைக்கின்றன. இவ்வாறான பல அனுகூலங்கள் பற்றி பலராலும் பேசப்பட்டு வந்தாலும் அதற்கான நேரங்கள், சந்தர்ப்பங்கள் மற்றும் வசதி வாய்ப்புகள் வழங்கப்படாமையானது பெரும் குறைபாடாகவே உள்ளது.

எமது பிரதேசங்களின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். இதற்காக சிறந்த மைதானங்கள் மற்றும் பயிற்சிகள், ஏனைய வசதிகள் வழங்கப்படல் வேண்டும். இதன் மூலம் ஆரோக்கி யமான சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் பூரண ஆதரவை வழங்கவேண்டும். குறிப்பாக மாகாண விளையாட்டுத் திணைக்களம், மாவட்ட செயலகம் என்பன இணைந்து தற்போதுள்ள மத்திய அரசாங்கத்தின் கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சுக்களின் உதவியுடன் இப்பிராந்தியத்தில் மிகவும் பலவீனமாகக் காணப்படும் இந்த விளையாட்டுத்துறையை வளர்த்தெடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

எம்.ஐ.எம்.அமீர்,
மேலதிக அரசாங்க அதிபர், அம்பாறை.

With Compliments From

# N.Ranjithakumaran

MA (Human Rights)

*Solicitor*

180 Mitcham Road
Tooting
London SW17 9NJ
UNITED KINGDOM

Tel - 0208 767 9717
Mobile - 0795 688 6749
Fax - 0208 767 9684

email : ranjit@ranjitandco.com





# Ramesh & Co Accountants

T.P : 020 86823336



Home Services Contact

## Welcome to Ramesh & Co Accountants

We are South west London, based firm and we offer accounts, tax and business advises. We pride ourselves in providing the highest levels of professional service with expertise in the field. Our goal is to provide personalised professional services at the lowest fees to each of our clients and to build a long term professional relationship with them. Our accountants are highly experienced in Accounting, Taxation and Business, Financial and Mortgage consultancy services. Our Accountants & Tax Consultants offer friendly professional services for a competitive fixed fee. If you are not familiar with our company and your first contact with us, we would be pleased to hear from you. Please let us know what your needs and questions are, we will be more than happy to help! Call Ramesh & Co Accountants today on 0208 682 3336.

**Phone: 02086823336 | 02083552532**
**Mobile : 07823886784**
**Fax: 020 86728022**
**Website: www.rameshandco.co.uk**
**Email: info@rameshandco.co.uk**

ஏழை மக்கள் கண்ணீர் துடைக்க

உங்கள் முன் வரும் இணையத் தளம்

விரைவில் எதிர்பாருங்கள்!

23 வருட கால அனுபவம்

# Linga & Co

## Legal Advisors & Immigration Specialists

## We Specialise in:

- Asylum and Immigration Matters
- Human Rights applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunctions & Judicial Reviews through associate solicitors
- Work Permits
- EEA Application (Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled Migration Programme
- Naturalisation Applications
- Family Law
- Employment Law
- Criminal Law



V.P.Lingajothy
LLB(Hons), M.Sc., Dip Fms, ACILEX
Principal
immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாக தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகிறோம்.

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்களாயின் உடன் தொடர்பு கொள்ளவும்.

**மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்**

General Line : 020 8544 9285

Fax : 020 8542 9530

46, High Street
Collierswood
London SW19 2BY

OISC

**Emergency Line : 07771 646 441**


Whether it's a Celebration,
a Gift to Someone Special,
or just a Royal Treat for yourself...
discover a new heaven on earth:
POOJA
SWEETS & SAVOURIES
Best Quality Vegetarian Food
For Any Occasion
ORDER ONLINE FOR NEXT DAY DELIVERY *
www.poojasweets.com
TOOTING BRANCH
168-170 UPPER TOOTING
ROAD, LONDON, SW17 7 ER
T : 020 8672 4523
info@poojasweets.com
KINGSBURY BRANCH
KINGSBURY ROAD
LONDON, NW9 9ED
T : 020 8206 2206
kingsbury@poojasweets.com
CARDIFF BRANCH
3 ALBANY ROAD, ROATH
CARDIFF, CF24 3LH
T : 029 2021 4987
cardiff@poojasweets.com

# Kanaga Solicitors

**KEY PERSONNEL**

Name : Ms.Kanakavalli Nadarajanpillay
Kanaga Solicitors
108 High Street, Colliers Wood
London - SW 19 2 BT

Position in the firm : Principal Solicitor

**Academic/ professional Qualifications:**
L.L.B(Hons), Barrister of Lincoln's Inn, Masters at Law (L.L.M), Advocate & Solicitor of High Court of Malaya, Solicitor of the Supreme Court of England and Wales.

**Relevant and Present Experience:**

Successful practitioner with 14years of experience as a an immigration Criminal, Civil, Family, Land Law matters, Wills Probate and Corporate litigation.
lawyer in the High Courts of Malaya.





**Tel: 07878278131**
**020 8544 1100**
**108 High Street, Colliers Wood**
**London - SW 19 2 BT**
email : kanakavalli _ ek@yahoo.com


செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
உங்கள் எண்ணம் போல் நகைகளையும் புடைவைகளையும்
தெரிவு செய்து கொள்ளுங்கள்
பொன்னுருக்கலுக்கான வசதிகள்
செய்து தரப்படுவதுடன் தாலிக்கொடிகள்
அனைத்தும் தங்கத்தின் விலைக்கே
செய்து தரப்படும்
கூறைப் புடைவைகள்
பட்டுப்புடைவைகள்
மற்றும் சீக்கூன் அனைத்தும்
30%
விலைக் கழிவில்!
SELVARAJA
Gold House & Textiles
Exclusive Designer Jewellery & Sarees
YOU ARE THE BEST FOR YOU
WE ARE THE BEST
162B, Mitcham Road, London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269

# Western Jewellers

Jewellers & Gem Merchants



வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜுவல்லர்ஸ்

## First Tamil Jewellery Shop in UK

*Specialise in 22ct Gold, White Gold, Platinum & Diamond Jewellery*

**TOOTING BRANCH**
230, UPPER TOOTING ROAD
LONDON SW 17 7EW
UNITED KINGDOM
TEL: 020 8767 3445

**WEMBLEY BRANCH**
5, PLAZA PARADE
EALING ROAD,
WEMBLEY
HAO 4YA
UNITED KINGDOM
TEL : 0208 903 0909



*Season's Best is Summer, Saree's Best is Silk Emporium Sarees*

**SILK EMPORIUM**

*122 Upper Tooting Road,*
*London SW17 7EN*
*Tel : 020 8672 1900*

*Opening Hours : Monday - Saturday ( 10.30 am - 6.30pm), Sunday (11.30am-6.30pm)*

# Luckyland

## BISCUIT MANUFACTURERS




NATTARANPOTHA, KUNDASALE, SRILANKA.

T: +94 081 2420574, 2420217, Fax : + 94 081 2420740

E-mail : luckyland@sltnet.lk


சிவராம் பதிப்பகம், 20(32), கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 9440